ரிஜிஸ்டர் நெ. M. 2992. தனிப்

# புரட்சி

ஞாயிறுதோறும் வெளிவரும்.

ஆசிரியர்:— ஈ. வெ. கிருஷ்ணசாமி.

மாலை 1. | ஈரோடு, ஸ்ரீமுக-ஹு தை-மீ 8-உ (21—1—1934)

காந்தியத்தை ஒழிப்பது வர்ணாச்சிரமத்தை ஒழிப்பதாகும்.

காந்தியார் பணக்காரத் தரகர்.

காந்தியார் பார்ப்பனரின் கையாள்.

## ஏன் சுயமரியாதை இயக்கத்தில் சேரவேண்டும்?

1. அது ஒன்றேதான் மக்கள் சமூகவாழ்வில் ஒருவருக்கொருவர் எவ்வித உயர்வு தாழ்வும் இருக்கக்கூடாது என்ற சமதர்மத்துக்கு போராடுகின்றது.

2. அது ஒன்றேதான் மனிதசமூகம் பொருளாதாரத்தன்மையில் ஒருவருக்கொருவர் பணக்காரன் ஏழை என்கின்ற வித்தியாசம் இல்லாமல் எல்லாப் பொருளும், பூமியும் எல்லோருக்கும் சரிசமமாய் இருக்கவேண்டும் என்ற சமதர்மத்துக்குப் போராடுகின்றது.

3. அது ஒன்றேதான் மனிதசமூகத்தில் ஆணுக்கும், பெண்ணுக்கும் எவ்வித வித்தியாசமும் இல்லாமல் சகல துறைகளிலும் சரிசமத்துவம் இருக்கவேண்டும் என்ற சமதர்மத்துக்குப் போராடுகின்றது.

4. அது ஒன்றேதான் மனிதசமூகத்தில் ஜாதி, மதம், வருணம், தேசம், கடவுள் ஆகிய அபிமானங்களை அறவே ஒழித்து உலக மனித சமூக தோழமை வேண்டும் என்ற சமதர்மத்திற்குப் போராடுகின்றது.

5. அது ஒன்றேதான் உலகில் உழைப்பாளி, முதலாளி என்பது போன்ற பிரிவினையே இல்லாமல் சகல தேவைகளுக்கும், சகல மனிதர்களும் சரிசமமாகப் பாடுபட்டு அவற்றின் பயனை எல்லோரும் சரிசமமாக அனுபவிக்க வேண்டும் என்ற சமதர்மத்துக்குப் போராடுகின்றது.

6. அது ஒன்றேதான் ஒவ்வொரு மனிதனும் எவற்றிற்கும் எவ்விதத்திலும் அடிமையாகாமல் அவனவன் அறிவு, ஆராய்ச்சி, அனுபவம் ஆகியவைகளுக்கு இணங்கி நடக்க சுவ சுதந்திரம் இருக்கவேண்டும் என்ற சமதர்மத்துக்குப்போராடுகின்றது.

...யம் என்பது முதலாளிகளின் ஆதிக்கம்.

Best copy available.

## ...தோலிக்கர்களின் ...வண்கூச்சல்.

...நூலில் கத்தோலிக்க மதப்பிரசாரத்தின் மடமை ...மேனுட்டில் கத்தோலிக் மதத்தின் ஆபத்தான ...யும் அமெரிக்க நாஸ்திக அபிவிருத்தி சங்கத்தா...கு எழுதியுள்ள ஓர் கடிதமும் போப்பிர்த்த...யும் ஆராய்ந்து எடுத்துக்காட்டப்பட்டிருக்கின்... விலை 0—0—6.
...புத்தகங்களுக்குக் குறையாது ஆர்டர் செய்தால் ...செலவுடன் ரூ. 1—8—0. 500க்கு தபால் செல ...5—0—0.
...ம்:—
...டி அரசுப்பதிப்பகம், ஈரோடு.

## சாலாமிசிரி லேகியம்

(ரிஜிஸ்டர்டு)

சிறந்த தாதுபுஷ்டி மருந்து.

மிகுந்த பலத்தையும், வீரிய விருத்தியையும் உண்டாக்கும்.

இந்த லேகியத்தால் குணமாகும் நோய்கள்.

கை கால் அசதி
இடுப்புவலி
பலக்குறைவு
ஆயாசம்
நரம்புத்தளர்ச்சி
சொர்ப்பனஸ்கலிதம்

சம்போக காலத்திலேற்படும் துரிதஸ்கலிதம் முதலிய வைகளை நீக்கும்.

ஆண் தன்மையை அதிகரிக்கச் செய்யும். தளர்ந்த நரம்பை க்கெட்டிப்படுத்தும். வீரியத்தை விருத்தி செய்யும்

திடசரீரத்தைஉண்டாக்கும். மனதிற்கு உற்சாகத்தைக் கொடுக்கும். எவ்வளவு கடின வேலை செய்தாலும் யாதொருகளைப்பும் உண்டாகாது. சுக்கிலத்தை ஸ்தம்பனம் செய்யும். சம்போக இன்பத்தை முற்றிலும் அனுபவிக்கச்செய்யும். சாப்பிட மதுரமுள்ளது.

ஆண், பெண், சிறுவர், வயோதிகர் யாவரும் சாப்பிடலாம். பத்தியமில்லை,

1-சேர் டப்பி ரூ. 2-8-0

பாக்கிங் தபால் செலவு பிரத்தியேகம். மலாய் நாட்டு வாசிகள் ஆர்டருடன் முன்பணம் அனுப்பவேண்டும். விலாசம் தெரிவித்தால் கேட்லாக் அனுப்பப்படும். கமிஷன் ஏஜண்டுகள் தேவை

டி. சி. சிங்காரம் அண் கோ.,
சித்த-ஆயுர்வே... வைத்தியசாலை,
தேப்பக்குளம் போஸ்ட், திருச்சி.

...உயர்ந்த முறையில் தயாரித்த...வை. பரம்பரை வைத்திய சந்த...யிலுதித்தவரென்றும், சமஸ்தா... வைத்திய நிபுணரென்றும் பழ...யில் கியாதி வாய்ந்திருப்பதை ...யர்கள் அறியீர்களா? எமது மருந்துகளில் ஒப்புயர்வற்றது.

## மகா வீரிய

# தங்கபஸ்பம்.

வெள்ளை, வெட்டை, கடுப்பு, பவத்திரம், மூலம், நீரழிவு, க்ஷயம், இருமல், குன்மம், சூலை முதலிய சகல கொடிய வியாதிகளும் நீங்கும்.

அழிந்துபோன ஆண்மையையும், இழந்த பலத்தையும், இல்லற வாழ்வில் இன்பத்தையும் கொடுத்து, ஊக்கத்தையும், உற்சாகத்தையும் தந்து தளர்ந்த நரம்புகளைக் கெட்டிப்படுத்தி, வயோதிகரை வாலிபராக்கி சதா பரமானந்தத்தைக் கொடுக்கக்கூடிய அபூர்வசக்தி இதற்கிருப்பதால் இதன் அரிய குணத்தைக்கண்டு ஆச்சரியப்படாதவர்கள் ஒருவருமில்லை. ஒருமுறை உபயோகித்துப்பாருங்கள்.

24-நாள் பஸ்பம் விலை ரூ. 10.

## சர்வபடை நிவாரணி.

சகல மேகபடை, ஊரல், படர்தாமரை இவைகள் ஒரே நாளில் உதிர்ந்துவிடும். புட்டி 1க்கு 0—8—0.

அன்னிய நாட்டார் முன்பணம் அனுப்பவேண்டும்.

மலையப்பசாமி வைத்தியசாலை, பழனி.

## விவாக விடுதலை.

(இந்து மனைவியருக்கு இன்றியமையாதது)

ஆசிரியர்:

கே. எம். பாலசுப்பிரமணியம் பி. ஏ. பி. எல்.

ஆராய்ச்சி நிரம்பிய இந்த அரிய நூல் ஒவ்வொரு மாதர் கையிலும், சீர்திருத்தக்காரர் சமதர்மி கையிலும் இன்றியமையாமல் இருக்க வேண்டியது. "'விவாக விடுதலை' என்னும் வேரின்றி மாதர் சுதந்தரம் என்னும் மரம் இல்லை" எனபது எவ்வாறென அறிய விருப்பின் இந்நூலை இன்றே படித்தல் வேண்டும்.

விலை அணா 4.

கிடைக்கும் இடம்:—

குடி அரசு புத்தகாலயம், ஈரோடு.

எஸ். தங்கவேலு,
கீழ ஆண்டார் வீதி, தெப்பக்குளம், திருச்சி.

## "தமிழன்"

ஓர் உயரிய சுயமரியாதைத் தமிழ் வாரப்பத்திரிகை.

தமிழர்களுக்காகத் தளராதுழைப்பவன் தமிழன். வெட்டுஒன்று துண்டு இரண்டான அபிப்பிராயங்கள் அச்சமற்ற கண்டனங்கள். அறிஞரின் அரிய ஆராய்ச்சியுரைகள். சமதர்ம முழக்கங்கள் நிறைந்தது.

வருட சந்தா.

உள் நாடு ரூ. 3—0—0.
வெளிநாடு ரூ. 5—0—0.

விலாசம்:—

மானேஜர், "தமிழன்"
ஆண்டர்சன் பேட்டை போஸ்டு,
கோலார் தங்கவயல்.

# தோழர் ஈ. வெ. ரா. ஸ்டேட்மெண்டு.

## சமதர்மப்பிரசார உண்மை விளக்கம்.

:O:

இ. பி. கோ. 124-A செக்ஷன்படி தொடரப்பட்டுள்ள, "பொதுவுடமை" பிரசாரத்திற்காகவும், "இராஜநிந்தனை" என்பதற்காகவுமுள்ள வழக்கு கோவையில் 12-உ ஆரம்பிக்கப்பட்டபோது தோழர் ஈ. வெ. இராமசாமி அவர்கள் கோவை ஜில்லா கலெக்டர் G. W. வெல்ஸ் I. C. S. அவர்கள் முன் தாக்கல் செய்த ஸ்டேட்மெண்ட்:—

என்பேரில் இப்போது கொண்டு வரப்பட்டிருக்கும் வழக்குக்கு ஆதாரமே கிடையாது

2. வழக்குக்கு அஸ்திவாரமான 29-10-33 தேதி "குடி அரசி"ன் தலையங்கத்தை இப்போது பல தரம் படித்துப்பார்த்தேன். அதை நான் எழுதினேன் என்பதை ஒப்புக்கொள்ளுகிறேன்.

3. அதில் எழுதப்பட்டிருக்கும் விஷயங்களுக்காவது வாக்கியங்களுக்காவது ராஜத்துவேஷக் குற்றம் சாட்டப்படுமானால் இன்றைய அரசாங்க முறை, நிர்வாக முறை முதலியவைகளைப்பற்றி ஆராய்ச்சி செய்து குறைகளை எடுத்துச் சொல்லவோ, அவற்றால் மக்களுக்கு ஏற்படக்கூடிய கஷ்டங்களை விலக்கப் பரிகாரம் தேட ஏற்பாடு செய்யவோ யாருக்கும் சுதந்திரம் கிடையாது என்று தான் முடிவு செய்யப்பட்டதாகும்.

4. என்ன காரணத்தைக்கொண்டு என்மேல் ஆதாரமற்ற இந்தப் பிராது தொடரப்பட்டிருக்கிறது என்று யோசித்துப்பார்த்தால் என்னுடைய சமதர்மப் பிரசாரத்தை நிறுத்திவிடச் செய்வதற்காக முதலாளி வர்க்கமோ அல்லது மத சம்பிரதாயக்காரர்களோ செய்த சூழ்ச்சியாக இருக்க வேண்டும் என்ற முடிவுக்குத் தான்வரவேண்டியிருக்கிறது. வியாசத்தின் விஷயத்திலாவது பதங்களிலாவது நோக்கத்திலாவது சாட்டப்பட்ட குற்றத்தின் அம்மைப்பே கிடையாது.

5. முக்கியமாய் அதில் சொல்லப்பட்ட விஷயம் எல்லாம் கல்வி இலாக்காவின் சம்பளங்கள் அதிகமென்றும், பிள்ளைகளுக்கு கல்விச் செலவு அதிகமென்றும், அதிற்கேற்ற பயன் விளைவதில்லை என்றும், ஏழைகளுக்கு கல்வி பரவ சௌகரியம் இல்லை என்றும், இப்படிப்பட்ட முறையால் லாபம் பெறும் பணக்காரர்களும், அதிகாரவர்க்கத்தாரும், உத்தியோகஸ்தர்களும் சொல்லுவதைக் கேட்டு ஏமாந்து போகாமல் வரப்போகும் (சீர்திருத்த) எலெக்ஷன்களில் ஜாக்கிரதையாய் நடந்து கொள்ளவேண்டும் என்று ஏழை பொது ஜனங்களுக்கு எடுத்துக்காட்டியதேயாகும்.

6. நான் 7, 8 வருஷ காலமாய் சுயமரியாதை இயக்க சமதர்ம பிரசாரம் செய்துவருகிறேன். சமூக வாழ்விலும் பொருளாதாரத்திலும் மக்கள் யாவரும் சமத்துவமாய் வாழவேண்டுமென்பது அப்பிரசாரத்தின் முக்கிய தத்துவமாகும்.

7. நாட்டில் உற்பத்தியாகும் பொருள்களை நாட்டு மக்கள் யாவரும் சமமாய் அனுபவிக்கவேண்டும் என்பதும் அவ்வுற்பத்திக்காக செய்யப்பட வேண்டிய தொழில்களில் நாட்டு மக்கள் எல்லோருக்கும் சக்திக்குத் தக்கபடி பாடுபடவேண்டும் என்பதும் அத்தத்துவத்தின் கருத்தாகும்.

8. அவ்வியக்க லட்சியத்திலோ, வேலைத் திட்டத்திலோ பிரசாரத்திலோ அதற்காக நடைபெறும் "குடி அரசு"ப் பத்திரிகையிலோ பலாத்காரம்; துவேஷம், இம்சை, இடம் பெற்றிருக்கவில்லை. எந்த விதத்திலாவது அவை நமது நாட்டில் இடம் பெறுவது என்பதும் எனக்கு இஷ்டமான காரியம் அன்று.

9. இதற்கு அத்தாட்சி வேண்டுமானால் பல வருஷங்களாக இரகசியப் போலீஸ் இலாக்கா சுருக்கெழுத்து அறிக்கைக்காரர்கள் எனது பிரசங்கத்தை விடாமல் குறித்துவைத்திருக்கும் அறிக்கைகளையும் சுமார் பத்து வருஷத்திய "குடி அரசு" பத்திரிகையின் வியாசங்களையும் சர்க்கார் கவனித்துவந்தும் என்மேல் இந்தகைய வழக்கு இதற்குமுன் ஏற்படுத்தியதில்லை என்பதே போதும்.

10. அரசாங்கமானது முதலாளித் தன்மை கொண்டதாய் இருப்பதால் அது இத்தகைய சமதர்மப் பிரசாரம் செய்யும் என்னையும் எப்படியாவது அடக்கவேண்டுமென்று முயற்சி எடுத்துக்கொண்டிருப்பதில் அதிசயமில்லை. தற்கால அரசாங்க ஆட்சியில் பங்குபெற்றுப் போகபோக்கியமும், பதவியும், அதிகாரமும் அடைந்துவரும் பணக்காரர்களும் மற்றும் மதம், ஜாதி, படிப்பு என்கிற சலுகைகளைக்கொண்டு முதலாளிகளைப் போலவே வாழ்க்கை நடத்துகின்றவர்களும் இப்படிப்பட்ட அரசாங்கத்திற்கு நேர்முகமாகவும், மறைமுகமாகவும் உதவிசெய்து தீரவேண்டியவர்களாய் இருப்பதால் அவர்களும் இம் முயற்சிக்கு அனுகூலமாய்இருப்பதிலும் அதிசயமில்லை.

11 பல நூற்றாண்டுகளாக உலக வாழ்க்கையில் கடவுள் செயல் என்றும் இயற்கை என்றும் கருதும்படியாகச் செய்து நிலை நிறுத்தப்பட்டு நடைபெற்று வரும் சமூக அமைப்பையும் பொருளாதார முறையையும் மாற்றுவது என்பது சிலருக்கு இஷ்டப்படாத காரியமாய் இருந்தாலும் அவற்றைமாற்றி அமை தாலொழிய மக்கள் வாழ்க்கைகளில் உள்ள அநேக கஷ்டங்களும் குறைகளும் நிவர்த்தியாகி சௌக்கியமாகவும் திருப்தியாகவும் வாழ முடியாது என்பது எனதுஉறுதி.

12. இப்படிப்பட்ட ஒரு மாறுதல் உண்டாக ஆசைப்படுவதும் அதற்காக பலாத்காரம், துவேஷம், இம்சை ஆகியவைகள் இல்லாமல் பிரசாரம் செய்வதும் குற்றமாகாது.

13. ஏதாவது ஒரு கொள்கைக்கு பிரசாரம் பரவவேண்டுமானால் அக்கொள்கையில் நம்பிக்கை கொண்டவர்கள் அக்கொள்கைக்கு இடையூறு செய்பவர்களால் அடக்குமுறைக்கு ஆளாகவேண்டியதும் அவசியமேயாகும். அதற்காக நாமே வலுவில்போய் கஷ்டத்தைக்கோரி எடுத்துக் கொள்ளக் கூடாது; ஆனாலும் தானாகவே ஏற்பட்ட ஒரு நல்ல சந்தர்ப்பத்தை யாரும் இழந்துவிடக்கூடாது. இந்தப்பிரசாரத்தை தடுக்க வேண்டுமென்று கருதி இந்த வழக்கைக் கொண்டுவந்திருக்கிறார்கள் ஆதலால் அவர்கள் எப்படியாவது எனது வியாசத்தில் துவேஷம், வெறுப்பு, பலாத்காரம், முதலியவைகள் இருப்பதாக கற்பனை செய்து தீரவேண்டியவர்கள் ஆகிவிட்டார்கள் அந்தப்படி செய்யப்படும் கற்பனைகளால் நான் தண்டிக்கப்பட்டாலும் பொதுவாக என்மீது நம்பிக்கையும் நல்லஎண்ணமும் உடையவர்களும் சிறப்பாக எனது கூட்டுவேலைக்காரத் தோழர்களும் தப்பான அபிப்பிராயம் கொள்ளக்கூடு மாதலால் அப்படிப்பட்ட கற்பனைகளை மறுத்து உண்மையை விளக்கிவிட வேண்டுமென்றே இந்த ஸ்டேட்மெண்டைக் கொடுக்கக் கடமைப்பட்டவனானேன்.

14. இதனால் பொதுஜனங்களுடைய கவனிப்பு இன்னும் அதிகமாவதோடு அவர்களது ஆதரவும்பெற நேர்ந்து கிளர்ச்சி கதுபல மேற்படக் கூடுமாதலால் என்மீது சுமத்தப்பட்ட இந்த வழக்கில் ஒரு ஸ்டேட்மெண்டைமாத்திரம் கொடுத்துவிட்டு எதிர்வழக்காடாமல் இப்போது கிடைக்கப்போகும் தண்டனையை மகிழ்ச்சியோடு வரவேற்கின்றேன்.

15. இந்நிலையில் சர்க்கார் என்னைத் தண்டித்தாலும்சரி அல்லது இந்தப் பிராதுக்கு போதிய ஆதாரமில்லை என்று நியாயத்தையும் சட்டத்தையும் லக்ஷியம் செய்து வழக்கைத்தள்ளி விட்டாலும்சரி இப்படிப்பட்ட அடக்குமுறையை வரவேற்குமாறு எனது தோழர்களுக்கு வழிகாட்ட எனக்கு கிடைத்த சந்தர்ப்பத்தைப்பற்றி மகிழ்ச்சி அடைகிறேன்.

———

# Poverty of Tamil Lovers.

# தமிழன்பர் மனத்தின் வறுமை.

(தோழர். ம. சிங்காரவேலு பி. ஏ. பி. எல்.)

நமது நாட்டில் பாஷையைப்பற்றி ஓர் புராதன தப்பெண்ணம் இருந்து வருகிறது. அதாவது பாஷையில் ஏதோ மகத்துவம் இருப்பதாகவும், பாஷை கடவுளால் ஏற்பட்டதாகவும், சொற்களுக்கே ஓர்வித நிவேதனம் (Sacredness) இருப்பதாகவும், இத்தியாதி மூடநம்பிக்கை நமது நாட்டிலுள்ள கற்றவர்க்கும், கல்லாதாருக்கும் உண்டு. தத்துவஞானத்திலும் (Philosophy) இந்த மூடநம்பிக்கையுண்டு. "சுத்தமாம் சோதி தன்னில்........." என்ற வாக்கியத்தில் "சத்தம்" அதாவது சொல்லிருந்து பிரபஞ்சம் வந்ததாக வேதாந்த புத்தகங்களில் காணலாம். Alexandrian Philosophy அதாவது, ஈஜிப்ட் தேசத்தில் வழங்கிவந்த ஓர்வித் தத்துவ ஞானத்தில், In the Beginning there was the word ஆதியில் சத்தமிருந்ததாம். அதிலிருந்து உலகங்கள் எழுந்ததாம். "ஓம்" என்ற பிரணவ மந்திரத்திலும், "ஓம்" என்ற சொல், உலகம் உண்டாவதற்கு முந்தி இருந்ததாம். இவ்விதமாக வெறுஞ் சொல்லை விசேஷப்படுத்தி சொல்மயமாக நிற்கும் மூடப்பழக்கம் இன்றைக்கும் இந்திய அறிஞரிடம் காணலாம். இந்த மனப்பான்மையே தமிழன்பர் மகாநாட்டில் மிகுதியும் நிறைந்திருந்தது. இந்த தத்துவத்தை நீக்கினுலொழிய கற்றவரைக் கல்லாதவரென்றே மதிக்கப்படும்.

சொல்லென்பது ஓர் ஒலி. அதாவது ஒரு சத்தம். வெவ்வேறாக, அந்தந்த பாஷைகளில் மாறி வந்திருக்கின்றன. கால தேச வர்த்தமானப்படி ஒரு சத்தமானது மக்களுக்குள் மாறி வந்திருக்கிறது. இந்த மாறுதலை அடைந்த பிறகே, பாஷைகள் வெவ்வேறாயின. பாஷைகள் வெவ்வேறாக உலகில் மாறி வந்திருப்பதற்குக் காரணமென்னவெனில், சொற்கள் உச்சரிப்பால் மாறுபட்டன. இதுதான் பாஷைகள் வெவ்வேறானதற்குக் காரணம். "மா" என்ற சத்தம், "மாதா" வென்றும், மதர் [Mother] என்றும், மாடர் [Mater என்றும்] அந்தந்த தேசங்களில மாறுதலை அடைந்தன. "தேசங்கள் தோறும் பாஷை[illegible]" என்றதிலிருந்து தேசவித்தியாசத்தால் பஷைகளும் வித்தியாசமடைந்தன என்று தெரிநது கொள்ளலாம். ஆதலின் எந்த பாஷையாயினும், அதற்கு நிவேதனமொன்றுமில்லை. இயற்கையாகவே உச்சரிப்பு மாற மாற, சொறகளும் மாறின. இது தான் பாஷைகள் வேறுமை அடைந்த விதம். இது தெய்வீகமோ, அல்லது மகிமையோ அது நமக்கு விளஙகவில்லை. மந்திரக்காரர்கள், பூசாரிகள், வேஷக்காரர்கள், "ஓம்" "ஆய" "பத்திரகாளி" "ரணகாளி" "சண்டி" "சாமுண்டி" என்று பிதற்றி பாமர மககளை மயககுவதைப் போல் "தமிழ் பாஷை உயர்ந்தது" "அதனை நேசிக்கவேண்டும்" "அதில் அன்புவைக்கவேண்டு" மென்பதும், பிதற்றலே!

பாஷைகள் பல்லாண்டுகளாக மாறிக்கொண்டே வருகின்றன. குறள் எழுதப்பட்ட தமிழ், இன்று பேசும் தமிழ் அல்ல. பஞ்ச காவியத்தமிழ், புராணத் தமிழல்ல. கலம்பகத்தமிழ் ஆத்திச்சுவடி, கொன்றை வேந்தன், நீதிநெறித் தமிழல்ல. இதுபோலவே பூர்வ ஆங்கில பாஷையும், பிரஞ்சு பாஷையும், ஜர்மன் பாஷையும், தற்கால ஆங்கிலத்திற்கும், பிரஞ்சுக்கும், ஜர்மனுக்கும் எவ்வளவோ மாறுதலை அடைந்து வந்திருக்கின்றன. இன்றைக்கும் அந்தந்த காலதேச வர்த்தமானப்படி பாஷைகள் மாறிக் கொண்டே வருகின்றன. 1000, 10,000 வருஷங்களுக்குப் பிறகு இன்றைக்கு நாம் பேசும் தமிழை, அந்தக்காலத்து நமது சந்ததியார், பேசவுமாட்டார்கள், அதனை எளிதில் அறிந்து கொள்ளவுமாட்டார்கள். வியாக்கியானமின்றி, குறளை யார் தெரிந்துகொள்ள கூடும்? இந்த காலத்தில் உரைக்கு உரைவேண்டியதாயிருக்கிறது.

புலன்களுக்குத் தோன்றும் பொருள்களைக் குறிப்பிக்க சொற்கள் உண்டாயின. மற்ற சொற்கள் யாவும் கற்பிதங்களே. இந்தக் கற்பிதச் சொற்களே, பெரும்பான்மையும், மதங்களிலும், தத்துவங்களில் உபயோகப்படுகின்றன. மதங்களைப்பற்றிய நூல்களே தமிழிலுள்ள பெரும்பான்மையான நூல்கள். இத்தியாதி தமிழ் நூல்கள் கற்பித நூல்களென்பதற்கு என்ன ஆட்சேபனை? இத்தியாதி கற்பித நூல்களைத்தான், அபிவிருத்தி செய்யவேண்டுமென்பார் நமது தமிழன்பர் மகாநாடு!

கற்பித நூற்களைத் தவிர வேறு நூல்கள் தமிழில் என்ன இருக்கின்றன? விஷய நூல்கள் ஏதாகிலும் உளவா? (Mathematies) கணிதம், உயிர் நூல் (Biology) ரஸாயன நூல் (Chemisty) பௌதிக நூல் (Physics) வான நூல் (Astronomy) விகார மெஞ்ஞான நூல்கள் (Applied Sciences) யாதேனும் தமிழில் உளவா? வாழ்வுக்குவேண்டிய நூல்கள் இல்லாத பாஷை இன்றைக்கு யாருக்கு வேண்டும்? இதனை எந்த விவேகிதான் அன்புகொள்வான்? உலக பாஷைகள் அடைந்துவரும் அபிவிருத்தியை நோக்காமல் "பிள்ளைத் தமிழை" ஆதரிப்பதில் யாருக்கு நன்மை? கடந்த நூறு வருஷ காலத்தில் மற்ற உலக பாஷைகளின் சொற்கள் 3, 4, 5 பங்கு அதிகமாயின. ஆனல் நமது தமிழ் சொற்கள், எத்தனை பங்கு அதிகமாயின என்று கேட்கின்றோம்? 500, 1000 வருஷங்களுக்கு முந்தி இருந்துவந்த சொற்களே இன்றைக்கும் நமது தமிழில் இருந்து வருகின்றன. இது தான் தெய்வீக பாஷை போலும்! வேண்டிய சொற்களால் அபிவிருத்தி அடையாத பாஷை தெய்வீகமானல் 100, 200 சொற்களை மாத்திரம் உடைய ஒவ்வொரு காட்டுமிராண்டிகளின் பாஷையும், தெய்வீகமாகுமன்றோ? இந்த இலக்கியத்தின்படி நமது கும்ப முனியின் பாஷை தற்காலத்தில் முன்னேற்றமடைந்துள்ள மற்ற உலக பாஷைகளைவிட எவ்வளவோ தாழ்ந்த நிலைமை அடைந்துளது! இந்த இழிவைப் போக்கவாவது நமது தமிழன்பர் மகாநாடு முயற்சிக்கவுமில்லை!! இது தானு தமிழ் பாஷையின் மேல் தமிழன்பர் கொண்டுள்ள அன்பு?

உலக பாஷைகள் எவ்விதமாக முன்னேற்றமடைந்து வருகின்றனவென்பதைதெரிந்துகொள்ளுவோம். காட்டுமிராண்டிகள் பாஷைகள் ஆதிகால பாஷை. இந்த பாஷைகளில 100, 200 சொற்களுக்கு மேல் அதிகமில்லை. கணிதத்தில் ஐந்துக்கு மேல் சில பாஷைகளில் எண்ணத் தெரியா. குணத்தைக் குறிக்கும் சொற்கள் மிகக் குறைவு. Abstract words, பண்புப் பெயரே கிடையாது. வேம்பு, பனை, தென்னை என்ற குணப்பெயர்கள் வழங்குகின்றனவே ஒழிய, மரம் என்ற பணபுப் பேயர், காட்டுமிராண்டிகளுடைய பாஷையில் கிடையா. ஏனெனில் காட்டுமிராண்டிகளுடைய வாழ்க்கை, மிகவும் குறிகியவை. இவர்கள் அனுபவம் அதிகக் குறைந்த அனுபவத்தால் அவர்கள் பாஷைகளிலுள்ள சொற்களும் குறைவு. அவர் அடைந்துள்ள நாகரீகமும் குறைவு. இரணடொரு சொல்லைக் கூட்டிப் பேசத்தெரியாத மனிதனை என்ன பக்குவம் அடைந்ததாகச் சொல்லலாம், Fuje என்ற தீவில் வசித்து வந்த காட்டுமிராண்டிகளுடைய பாஷையில் 100, 200 சொற்களுக்கு மேல் இல்லையாம். 4, 5 க்கு மேல் அவர்களுக்கு எண்ணத் தெரியாதாம்!! இவர்கள் காட்டுமிராண்டிகளுக்குள் மிகவும் மிகவும் தாழ்ந்து இருந்தவர்கள். ஒரு சமூகம் நாகரீக மடைந்ததா என்பதைத் தெரிந்துகொள்ளவேண்டுமானல், அவர்கள் பாஷையின் சொற்பொழிவால் தெரிந்து கொள்ளலாம். இந்த பிரமாணத்தின்படி தமிழ் பாஷையை அதிக நாகரீகமடைந்த பாஷை என்று மதிக்க இடமில்லை. மேல் நாட்டு பாஷைகளைவிட நமது தமிழ் பாஷை எவ்வளவோ தாழ்ந்து இருக்கின்றது! Scientific terminology—விஞ்ஞான பரிபாஷையே, தமிழில் கிடையா. பேர்பாதி உலகத்தை அறியாத தமிழ் பாஷையை சிறுபிள்ளைத்தமிழென்று அழைத்தது உண்மையே! நமது "தெய்வீகத் தமிழை" babbling of children குழந்தைகளின் மழலைச் சொல்லென்பதற்குத் தடை என்ன? இத்தியாதி பாஷையைத்தானு, சிவன், நமது அகஸ்திய மாமுனிவருக்குப் போதித்தார் போலும்!

"சுத்தத்தமிழென்று" இன்னொரு ஆடாஸம் நமது தமிழன்பரிடம் உண்டு. இதுவோர் மூட நம்பிக்கை. காலத்தில் பின்னல் போகப் போக பாஷையும் சுத்தமாக இருக்குமாம்! அதாவது அக்கம் பக்கம் பாஷையிலிருந்து அன்னிய பாஷையின் சொற்களின் அதிகமாகக் கலப்பு இராதாம்!! இதுதான் சுத்த பாஷை, பரிசுத்த பாஷை என்பது. இதுவும் ஓர் ஆபாச எண்ணம். அக்கம் பக்க பாஷைகளிலிருந்து சொற்களை எடுத்துக் கொண்டால்தான் பாஷைக்கு அபிவிருத்திக்கு இடமுண்டு. பாஷை அபிவிருத்தி என்றால் என்ன? விஷயங்களைக்குறிக்க சொற்கள் ஒரு பாஷையில் இல்லாவிடில் இதர பாஷைகளிலிருந்து எடுத்துக்கொண்டு பாஷையை விருத்தி ஆக்குவது அல்லது இதர பாஷைகளின் மூல பதங்களை எடுத்துக்கொண்டு அவைகளுடன் சொற்களைச் சேர்ப்பது. இவ்விரண்டு வழிகளால் பாஷை அபிவிருத்தி அடைந்து வருகின்றன. ஆங்கில பாஷையும், மற்றுமுள்ள மேல் நாட்டு பாஷைகளும் பண்டைகால கிரிக (Greek) லாடின் (Latin) முதலிய பண்டைகால பாஷைகளிலிருந்து விருத்தி ஆக்கப்பட்டு வருகின்றன. அதே மாதிரியாகவே தமிழும் வடமொழியிலிருந்து எடுக்கப்பட்ட பல சொற்களால் அபிவிருத்தி அடைந்து வருகிறது. இவ்விதமாகத்தான் எல்லா பாஷைகளும், கால தேச வர்த்தமானங்களுக்குப் பொருந்தி வளர்ந்து வருகின்றன. இவ்விதமாக வளர்ச்சி அடையாத பாஷைகள் எவ்வளவோ அந்தந்த "சுத்த" பாஷைகளைப் பேசினவர்

(தொடர்ச்சி 18ம் பக்கம் பார்க்க.)

# கட்டுக்கடங்காத தொழிற்சாலைகள்.

(தோழர் சே. நரசிம்மன் எம். ஏ.)

இங்கிலாந்தைப்போல் இந்தியாவிலும் தொழிற்சாலை சட்டங்கள் சிறிதுசிறிதாக தொழிலாளிகளின் நன்மைக்காக விஸ்தரிக்கப்பட்டிருக்கின்றன. முதலில் குழந்தைகளின் நன்மையின்பொருட்டு ஏழுவயதுக்குட்பட்ட சிறுவர்கள் தொழிற்சாலைகளில் வேலை செய்யக்கூடாதென்று தடுத்தும் ஏழுவயதிலிருந்து பன்னிரண்டுவயது சிறுவர்களுக்கு அரை வேலையாகவும் செய்யப்பட்டது. பின்பு 1891-ம் வருஷத்து சட்டத்தில் ஒன்பது வயதுக்குக் குறைந்த சிறுவர்களை தொழிற்சாலைகளில் வேலைக்கு அமர்த்தக் கூடாதென்றும், தினம் ஏழு மணிநேரத்திற்குமேல் அச்சிறுவர்கள் வேலை செய்யக் கூடாதென்றும், பதினுன்கு வயதிற்கு மேற்பட்ட சிறுவர்களே வயதான கூலிஆட்களோடு சேர்க்கப்படலாமென்றும் சட்டமேற்படுத்தப்பட்டது. அதே வருஷத்து சட்டத்தில் பெண்பிள்ளைகளை நாளொன்றுக்கு 11-மணி நேரத்திற்குமேல் வேலை செய்யக்கூடாதென்று ஏற்படுத்தப்பட்டது. மேலும் ஐம்பது கூலி ஆட்களை உபயோகப்படுத்தின மின்சாரத்தினுலோ நிலக்கரியினுலோ நீராவியினுலோ, எண்ணெயினுலோ ஓட்டப்பட்ட இயந்திரங்களை வைத்து வேலைசெய்யும் தொழிற்சாலைகளெல்லாம் மேற்சொல்லப்பட்ட தொழிற்சாலைகளை ஆக்டின்கீழ் கொண்டுவரப்பட்டது. தவிரவும் இருபது ஆள்களை வைத்துநடத்தும் இயந்திர சக்தியை உபயோகிக்கிற இயந்திரங்களை தொழிற்சாலைகளை மாகாண கவர்ன்மெண்டார் இஷ்டப்பட்டால் தொழிற்சாலை ஆக்டின்கீழ் கொண்டுவரலாம். 1920-ம் வருடத்து ஆக்ட் இருபது ஆள்களை உபயோகிக்கும் இயந்திர சக்தியை உபயோகிக்கிற தொழிற்சாலைகளையெல்லாம் தொழிற்சாலை சட்டத்தின்கீழ் கொண்டு வந்ததுடன் பத்து ஆள்களை உபயோகித்த எல்லா தொழிற்சாளைகளையும் மாகாண கவர்ன்மெண்டார் சட்டத்திற்கு உட்படுத்தவும் அனுமதித்தது. தவிரவும் பன்னிரண்டு வயதிற்குட்பட்ட சிறுவர்களை தொழிற்சாலைகளில் வேலை செய்வதைத் தடுத்தும் பதினைந்து வயதிற்கு மேற்படாத சிறுவர்களை தினம் ஆறுமணி நேரத்துக்குமேல் வேலைசெய்ய அனுமதிக்கவில்லை.

மாகாண கவர்ன்மெண்டாருக்குக் கொடுத்த அனுமதியைத் தங்களுக்குத் தோன்றியவாறு உபயோகித்தனர். இப்படித் தொழிற்சாலை ஆக்டின்கீழ் 1929-ம் வருடத்தில் கொண்டுவரப்பட்ட தொழிற்சாலைகள் 184 தான் இவைகளில் சில தொழிற்சாலைகள் 19-தொழிலாளிகளை உபயோகித்தும் வேலை செய்பவர்களை இரவு வேலை, பகல்வேலை என்று பிரித்தும் இந்த சட்டத்தின் நோக்கத்தை மீற எத்தனித்தன. ஆனால் பெரும்பாலும் சக்தி உபயோகப்படுத்தாத தொழிற்சாலைகளைச் சட்டத்தின் கீழ் கொண்டுவரவில்லை. ஏதோ சில அபாயகரமான தொழிற்சாலைகளை மட்டுமே பம்பாய் மாகாணத்தில் தொழிற்சாலைகளாகக் கருதப்படும் என்று கவர்ன்மெண்டார் தெரிவித்தார்கள். இவைகள் நெருப்புக்குச்சி செய்யும் தொழிற்சாலைகள் தான். மற்ற மாகாணங்களில் சரியான நடவடிக்கைகள் எடுத்துக்கொள்ளாததற்குக் காரணம். தொழிற்சாலைகளை மேற்பார்வையிடப் போதுமான இன்ஸ்பெக்டர்களில்லாத குறையே.

1931-ம் வருஷத்தில் ஏற்படுத்தப்பட்ட (விட்லி) தொழிலாளர் கமிஷன். இந்த சிறிய தொழிற்சாலைகளை இருபிரிவாகப் பிரித்திருக்கின்றனர். அவை [1] பெரியபட்டணங்களில் ஸ்தாபிக்கப்பட்டு மின்சாரம், எண்ணெவகைகளை இயந்திர சக்தியைக் கையாண்டு 20-ஆள்களை வைத்துநடத்தும் தொழிற்சாலைகளும்.

[2] இயந்திர சக்தியை உபயோகப்படுத்தாத தொழிற்சாலைகளும் என்று பிரித்திருக்கின்றனர்.

முதலில் சொன்ன தொழிற்சாலைகளில் பல அபாயங்களுக்கிடமிருக்கின்றது. மின்சார சக்தியை உபயோகிக்கிற ஒடு தொழிற்சாலைகளில் அபாயமேற்படாமல் தடுக்க வசதிகளில்லை. இடவசதி, காற்றுவசதி, வெளிச்சவசதி இல்லாத தொழிற்சாலைகளும், பல சாதாரணமான கட்டிடங்களும் தொழிலாளிகளுக்குத் தீங்கை விளைவிக்குமென்பதில் சந்தேகமில்லை. தவிரவும் இவ்விடங்களில் தொழிலாளிகளுக்கு ஏதாவது அபாயம் நேரிட்டால் தொழிலாளர் காம்பென்சேஷன் ஆக்டின்கீழ் இச்சிறிய தொழிற்சாலைகளை கொண்டுவரப்படவில்லை. இத்தகைய தொழிற்சாலைகள் இந்தியாவில் சுமார் 2000-மிருக்கவேண்டுமென்று விட்லி கமிட்டியார் மதிப்பிடுகிறார்கள்.

தொழிற்சாலை சட்டத்தின் எல்லாப்பிரிவுகளையும் சிறிய தொழிற்சாலைகளின்மேல் பிரயோகிப்பது சற்று கஷ்டத்தை விளைவிக்கும். மேலும் இச் சிறிய தொழிற்சாலைகளை நடத்துபவர் அனேகமாகப் படிப்பில்லாதவர்களாதலால் அந்தச் சட்டத்திற்கு ஏற்றவாறு கணக்குகளையும், கணக்கு புஸ்தகங்களையும் அவர்கள் சரிவர எழுதமுடியாது. 5-வது செக்ஷன்படி தொழிற்சாலை இன்ஸ்பெக்டர்கள் இத்தொழிற்சாலைகளுக்குள் நுழையவும், அபாயத்தை தடுப்பதற்கு வேண்டிய செக்ஷன்களையும், தொழிலாளி தேகசௌக்கியத்துக்காக ஏற்படுத்தப்பட்டிருக்கும் செக்ஷன்களையும் இத்தொழிற்சாலைகளை பாதிக்க செய்யலாமென்று விட்லி கமிட்டியார் அபிப்பிராயப்படுகிறார்கள்.

தோழர்கள் ஜோஷியம் திவான் சமன்லாலும் தொழிலாளிகள் வாரத்தில் ஒரு விடுமுறைநாளும் தினம் வேலை மணிக்கணக்கை குறிக்கும் பிரிவுகளையும்கூட இந்த சிறிய தொழிற்சாலைகள் மீது பிரயோகப்படுத்த வேண்டுமென்று எண்ணுகிறார்கள். இருபது நபர்களுக்கு குறைந்தும் இரவும் பகலுமாக வேலைசெய்யும் கூட்டத்தை ஏமாற்றுகிற தொழிற்சாலைகளைக் கண்டிக்க 'இருபத்துநான்கு மணிநேரத்திற்குள் இருப்பது நபர்களுக்கு மேல்படாமல்' என்று மாற்றிக்கொண்டால் நலமாயிருக்குமென்று கருதப்படுகிறது.

யந்திர சக்தி உபயோகப்படுத்தாத தொழிற்சாலைகள் இந்தியாவில் அனேகவிடங்களில் ஏற்படுத்தப்பட்டிருக்கின்றன. அவற்றில் எத்துணை தொழிலாளிகள் வேலை செய்தபோதிலும் தற்பொழுது தொழிற்சாலை ஆக்டின் கீழ் வர ஏதுவில்லை. சிலவற்றில் நூற்றுக்கணக்கான தொழிலாளிகள் அபாயகரமான கட்டிடங்களிலும் வெளிச்சம், காற்று, வசதிகள் இல்லாத இடங்களிலும், வேலைசெய்கின்றனர். மேலும் அவர்கள் இவ்வளவு மணி நேரந்தான் வேலை செய்யவேண்டுமென்ற சட்டம் குறிக்கவில்லை பலவற்றில் சிறுகுழந்தைகள் வெகு நேரம் வேலைசெய்கின்றனர். தவிரவும் இச்சிறுவர்களை அவர்களுடைய பெற்றோர்கள் மாதக்கணக்காக ஆலை முதலாளிகளிடம் வாடகைக்கு விடப்படுகிறதாக தெரியவருகிறது. இத்தொழிற்சாலைகள் பட்டிணங்களிலும், கிராமங்களிலும் பலவாறு பரவி இருக்கின்றன. விட்லி கமிட்டியார் முக்கியமாகக் காக்காபொன்வேலையையும் மயிரைதூஸ்து செய்யும் வேலையையும் ஷெல்லக் வேலையையும், பீடி வேலையையும், கம்பளம் செய்யும் வேலையையும், தோல்பதனிடும் வேலையையும் பற்றி ரிபோர்ட் செய்திருக்கிறார்கள்.

காக்காபொன் வேலை பெரும்பாலும் பீஹார் மாகாணத்தில் நடந்து வருகிறது. சிலவற்றில் ஒரேகட்டிடத்தில் 800-தொழிலாளிகள் வேலை செய்கின்றனர். இத்தொழிலாளிகள் நூற்றுக்கு 80-தொழிலாளிகள் சிறுகுழந்தைகள் கூட்டம் கூட்டமாக வெளி முற்றத்தில்தான் இவ்வேலை நடக்கின்றது. சிறுகுழந்தைகள் வேலை செய்யும்பொழுது சற்று அதிகக் தான்.

மயிரை தூஸ்து செய்யும்வேலை பஞ்சாப் மாகாணத்தில்நடக்கின்றது. பெண்களும் எட்டுவயது குழந்தைகளும் சாதாரண மண்தரையில் உட்கார்ந்து வேலை செய்கின்றனர். இரும்பு தடிகளால் மயிர்கட்டுகளை அடித்து மண்ணையும், ரத்தத்தையும் ஆட்டு மயிரிலிருந்து எடுப்பது முதல்வேலை. இது மிகவும் துவிங்கமான வேலையாகையாலும், புழுதி கிளம்புவதாலும், சுவாசிக்கப்படும் காற்றை சீக்கிரம் அசுத்தப் படுத்திவிடுகின்றது. கிருமிகள் நிறைந்த இந்தமயிர் தூவாளம் மனிதனுடைய மேலும்,பூமியிலும் நன்குபரவி விடுகின்றது. பின்பு இத்தமயிர் பிரிக்கப்படுகின்றது. தவிரவும் தொழிலாளிகளுக்கு கக்கூஸ்கள் ஏற்படுத்தப்படவில்லை.

ஷெல்லக்வேலை மத்திய மாகாணத்திலும், பீஹாரிலும் நடைபெறுகிறது. சுமார் 2000-தொழிலாளிகள் 22-தொழிற்சாலைகளில் மத்திய மாகாணத்திலும், சுமார் 4000-தொழிலாளிகள் 127-தொழிற்சாலைகளிலும் வேலை செய்கின்றனர். சுகாதார மற்ற கட்டிடங்களிலும், ஒழுகும் கூறைக்கடியிலும் இந்த வேலை நடக்கின்றது. போதாத வெளிச்சமும், ஜன்னல்களே இல்லாத கட்டிடங்களிலும், குளிப்பதற்கு வசதியில்லாத சங்கடங்களிற்கு இடையே தொழிலாளிகள் வேலை செய்கின்றனர். சாக்கிடைகளே இல்லாததால் தொழிற்சாலையிலும், தொழிற்சாலையை சுற்றியும் துர்நாற்றம் வீசுகின்றது. மத்தியமாகாண பப்ளிக் ஹெல்த் டைரக்டர் கடுமையாக ஓர் ரிபோர்ட் இதைப்பற்றி எழுதியிருக்கிறார். "அலம்பும் குளிகளும், சாக்கிடைகளும் அப்போதைக்கப்போது தூஸ்து செய்யப்படுவதில்லை. ஒரு வாரத்துக்கு அதேதண்ணீரை தினம் தினம் அலம்ப உபயோகப்படுத்தி சமீபத்தில் தேங்கவிடுகின்றது. கசக்கப்பட்ட பூச்சிகளடங்கிய இந்த தண்ணீரில் சுத்தம் செய்யப்படுகிறது. மேலும் தொழிலாளிகள் முழங்காலளவு தண்ணீரில் நின்றுகொண்டுதானிந்த வேலையை செய்யவேண்டியிருக்கிறது 'என்று எழுதியுள்ளார் சாப்பிடுவதற்கு பொழுதும் கிடையாது. வார விடுமுறையும் கிடையாது.

தொழிலாளிகளில் சுமார் நூற்றுக்கு 30-பேர் பெண்கள், பனிரண்டு வயதுக்குட்பட்ட குழந்தைகளும் இந்த தொழிற்சாலைகளில் வேலை செய்கின்றனர். நூற்றுக்கு 10வீதம் வேலை செய்யும் இக்குழந்தைகள் பெரும் பாலும் நெருப்புக் கருக்கையில் வேலை செய்கின்றனர்.

அனேக பட்டணங்களில் பீடிவேலை நடக்கின்றது. வெளிச்சமில்லாத காற்றில்லாத சிறு அறைகளில் மண்தரையில் உட்கார்ந்து, கூட்ட-

தொடர்ச்சி 17-ம் பக்கம் பார்க்க.

# What is Marriage?

# கல்யாணமென்றால் என்ன?

[ஓர் சமதர்மி]

கல்யாணமென்பது ஆணும் பெண்ணும் கூடிவாழும் வாழ்க்கைக்கு இட்டபெயர். இது தான் கல்யாணமென்பதின் இயற்கையான கருத்து. இந்த வாழ்க்கை மனிதனுக்கு மாத்திரம் பொருந்தியதல்ல. அநேக ஜீவராசிகளுக்கும் இந்த வாழ்க்கை பொருந்தியுள்ளது. ஆனால் பலவித சமூக காரணங்களால் சகல உயிர்களுக்குமுள்ள இந்த பொதுவாழ்க்கையை மனிதர், விபரீதமாக எண்ணி நடத்த ஆரம்பித்தனர். இந்த விபரீத பழக்க சித்தாந்தங்களில் முக்கியமாக மதத்தால் உண்டானவை. கல்யாணமென்ற இயற்கை வாழ்க்கையை சற்று விசாரித்தறிவோம்.

ஆணும், பெண்ணும் கூடி பலகாலமோ, அல்லது சிலகாலமோ, வாழும் நடவடிக்கை (Behaviour) பல உயிர்களிடத்தும் காணலாம் முக்கியமாக உயர்தர உயிர்களிடம், இவ்வாழ்க்கையை சாதாரணமாகக் காணலாம். தாழ்ந்த உயிர்களாகிய மீன், தவளை, ஊர் வனங்களில், ஆணும் பெண்ணும், பருவகாலத்தில் மாத்திரம் கூடி, பிறகு ஒன்றுக்கொன்று சம்மந்தமில்லாமலே பிரிந்துவிடுகின்றன. இந்த சொற்பகால வாழ்க்கைக்குக்காரண மென்னவெனில்,தாழ்ந்த உயிர்களின் குஞ்சுகள், அது மீன் குஞ்சாயினும், தவளைக்குஞ்சாயினும் அல்லது ஓணான், பல்லிகளின் குஞ்சாயினும் பிறந்தவுடனே தனித்து ஜீவிக்கும் தனிமையைப் பெறுகின்றன. முட்டையிலிருந்து பொரித்த குஞ்சுகள் முட்டையிலிருந்து வெளிப்பட்டதும் தானே நீந்தவும், நடக்கவும், ஓடவும் சக்தி பெறுகின்றன. இந்த காரணத்தினிமித்தம் இந்தக்குஞ்சுகளின் தாய்தந்தையர்களுக்கு குஞ்சுகளைப் பாதுகாக்க வேண்டுமென்ற அவசியம் இல்லாமல் போகின்றது. சம்போகத்திற்கு மாத்திரம் கூடி அது முடிந்தவுடன் தாயும், தந்தையும் பிரிந்துவிடுகின்றன. ஆதி உயிர்களாகிய மீன், தவளை ஊர்வனங்களுக்கு சையோக காலமே அவைகளின் கல்யாணகாலமாகும். இதுவே உயிர்களுக்குள் ஆரம்பித்த ஆதிகால கல்யாணமாகும். கல்யாணத்திற்கு சம்போகமே அஸ்திவாரம். இந்தச்சிறிய அஸ்திவாரத்திலிருந்து வளர்ந்தன பலவித கல்யாணவாழ்க்கை என அறிக. இதிலிருந்துதான் மனிதருக்குள் வழங்கிவரும் கல்யாணமும் இந்த உயிர்களுக்கும் த்தாழ்ந்தஉயிர்களிலும், இந்த பூர்வ சம்போக கல்யாணத்தைப் பார்க்கலாம். ஆனால் அது மிகவும் சொற்பகால வாழ்வாகையால் அதனை கவனித்தல் அனாவசியம். அந்த சொற்பகால சம்பந்தத்தைக் கல்யாணமென்று வழங்குவதுமில்லை. இருந்தாலும் அந்த சொற்பகால வாழ்விலிருந்தே வெகு கால ஆண் பெண் சம்மந்தவாழ்க்கையும் பெறப்பட்டபடியால், அதனையும், The most primordial marriage புராதீனகல்யாணமெனலாம் உயிர்கள் சம்மந்தமாக பேசவேண்டில் biologically Speaking இழந்த சம்போகமே மேல்தர சம்போக வாழ்க்கைக்கு ஆதாரம். கீழ்த்தர சம்போகத்தை Mere Sexual intercourse, வெறும் ஆண் பெண் சம்போகமென்கின்றோம், மேல்தர சம்போகத்தை Marriage கல்யாணமென்கின்றோம். இழந்த உயிர்களின் சம்போகத்தில், ஆணும் பெண்ணும் கூடியவுடன் பிரிந்துபோகின்றன. மேல் உயிர்களின் சம்போகத்தில் ஆணும் பெண்ணும் சம்போகம் செய்தபிறகும் சில காலம் கூடி வாழ்கின்றன. கூட்டுறவு காலவித்தியாசமே வொழிய சம்போகத்திற்கும், கல்யாணத்திற்கும் in essence, சத்தில் யாதொரு வித்தியாசமுமில்லை. இரண்டு ஜிருமிகள் அதேக்ஷணத்தில் கூடி சையோகித்து பிரிதலும், கல்யாணமே, மக்களில் ஆணும் பெண்ணும் கூடி சையோகித்த பிறகும் வாழ்வதும் கல்யாணமே. வெறும் சம்போகத்திற்கும், கல்யாணத்திற்கும் உள்ள வித்தியாசம் வாழ்க்கையின் கால் வித்தியாசத்தால்தான் ஏற்பட்டுள்ளது. உயிர்கள் உயர உயர, அவ்வுயிர்களில் ஆணும் பெண்ணும் சம்போகம் முடிந்தபிறகும் சிலகாலம் கூடி வாழவேண்டி நேரிட்டது. அது எதற்கெனில், சம்போகத்தின் முக்கிய பயனாகிய சிசுக்களைக்காப்பாற்ற வேண்டியதாயிற்று. ஏனெனில் உயர்தர உயிர்களுக்குவுண்டாகும் சிசுக்கள், பிறந்தவுடன் ஜீவிக்கவழாமல் சிலகாலம் அவைகளை ஈன்ற ஆண் பெண் சவரட்சணையில் இருந்து தீரவேண்டி வந்தது. இத்தியா காரணங்களால் உயர்தர உயிர்களில் ஆணும் பெண்ணும் கூடியவுடன் பிறிந்துபோகாமல், சிசுக்கள் வயது வரும்வரை கூடி வாழவேண்டி வந்தது. திருஷ்டாந்தமாக பட்சிகள் சையோகித்த பிறகும் முட்டையை அவயங்காக்கவும், அதற்கு வேண்டிய கூண்டுகளைக் கட்டவும், குஞ்சுபொரிக்கும்வரை, ஆணும் பெண்ணும் கூடி வாழவேண்டிதாயிற்று. பட்சிகளுக்கும் உயர்ந்த உயிர்கள், அதாவது பால்கொடுக்கும் ஜீவ வகைகள் [Mammals] தங்கள் சிசுக்களைக் காப்பாற்றவேண்டி வெகு காலம் கூடி வாழவேண்டியிருக்கிறது. இந்தத் தாய்தந்தையருடைய கூட்டுறவு தங்கள் குஞ்சுகளுக்கும், சிசுக்களுக்கும் கிடைக்காமல்போனால் அந்தக் குஞ்சுகளும், சிசுக்களும் நாசமாய்விடும். அப்படித் தங்கள் பூண்டே அற்றுப்போகாமலிருக்க ஆணும், பெண்ணும் தங்கள் சிசுக்களைக் காப்பாற்ற சிலகாலம் கூடிவாழவேண்டிய அவசியம் நேரிட்டது. மனிதரிடத்தும் இதே காரணத்தால் தங்கள் வாழ்க்கையும் மற்ற உயிர்கள் வாழ்க்கையைவிட நீளவேண்டியதாயிற்று.

மனிதனுக்கு நெருங்கிய பங்காளியாகிய சிலஉயர்தர ஜீவர்கள்சம்போக காலத்திற்குப் பிறகும் வெகுகாலம் கூடிவாழ்கின்றன. ஏனெனில் மற்ற உயிர்களின் சிசுக்களைவிட வாலில்லாக்குரங்குகளின் சிசுக்கள் பலமற்றுப் பிறக்கின்றன. அதனைக் காப்பாற்றுவிடில் வாலில்லாக்குரங்கு வகையே பூண்டற்றுவிடும். இந்த அபாயம் நேரிடாவண்ணம் குரங்கின் குழந்தைகள் தாங்களே பிழைக்க ஆரம்பிக்கும்வரை தங்கள் தாய்தகப்பன்மார்கள் அவைகளைக் காப்பாற்றக் கூடிவாழ்கின்றன.

இந்த வாலில்லா மனிதக் குரங்குகளில் [Man-Apes] ஆணும் பெண்ணும் குழந்தைகளுடன் கூடிவாழும் பழக்கம் மிகுதியாம். இவைகள் வெகுகாலமாகத்தங்கள் சிறு குழந்தைகளுடன் உண்டு உறங்குகின்றன. பெண்ணையும், குழந்தையையும் மரத்தின்மேல்வைத்து ஆண் இரவில் காவல் காக்கின்றன. சிறு குழந்தைகளுக்கு அபாயம் வரவொட்டாமல் காக்கின்றன. பல வருஷங்கள்வரை குழந்தைகள் வளர்ந்து தனித்து சமுசாரத்தைத் தேடிக்கொள்ளும்வரை ஆணும், பெண்ணும் குழந்தைகளுடன் வாழ்கின்றன. கொரில்லா [Gorilla] என்ற ஓர் ஆண்மனிதக்குரங்கு சாதாரணமாக ஒரே 'மனைவியுடன்தான் வாழ்கின்றதாம். இந்த உயர்தர வாழ்க்கையை கேட்டாகிலும் நமது மக்களுக்குப் புத்திவராதா?

பூர்வகால மனிதக் குரங்குவாயிலாகப் பெறப்பட்ட நாமும் சம்போககாலத்திற்குப்பிறகும் ஆணும் பெண்ணுமாக வெகுகாலம் சமுசாரத்தை நடத்திக்கொண்டுவருகின்றோம்.

ஏனெனில் உலகிலுள்ள மற்ற உயிர்களின் குழந்தைகளைவிட மனிதராகியின் குழந்தை [Is the most heepless] மிகவும் சக்தி அற்றதாகவே பிறக்கிறது. அதற்குச் சக்தி வந்து தானே சம்பாதிக்கும்வரை தாய் தகப்பன் சவரட்சணையில் இருந்துதான் தீரவேண்டியது. அப்படிச் செல்லாவிடில் மனிதப் பூண்டே அழிந்துவிடும். இந்த அபாயத்தைப் போக்குவதற்குத்தான் தாயும் தந்தையும் இணைபிரியாமல் கூடி வாழநேரிடுகிறது. இந்த வாழ்க்கையைத்தான் கலியாணமென்பது. ஆதலின் கல்யாணமென்பது என்னவேனில் ஆணும், பெண்ணும் கூடி தங்கள் குழந்தைகளைப் பாதுகாப்பதற்கு ஏற்பட்ட ஓர் பழக்கமாகும். இந்தப் பழக்கத்திற்கு ஆதிமூலம், சம்போகம் சம்போகத்தின் பயனை காத்து வளர்க்கும் வாழ்க்கைக் கல்யாணமாகும், இதுதான் கல்யாணத்தின் உற்பவம். இதனைச் சட்டதிட்டங்களாலும் பழக்கவழக்கங்களாலும், விதிவிலக்குகளாலும் காப்பாற்றப்பட்டு வருகின்றது. மனிதகுலம் அறிவுறாமல் காப்பாற்றவந்த பழக்கத்தை மதங்களும், கொடூரப் பழக்கங்களும் சேர்ந்துகொண்டு கொடூர சட்டதிட்டங்களை ஏற்படுத்தி கல்யாணமென்ற சாதாரணக் கூட்டுறவைப் பாழாக்கி ஆணையும், பெண்ணையும் இம்சித்து பிரம்மச்சாரித்தனமென்றும் விதவை என்றும் அமங்கலி என்றும் தூமகேதுக்களுக்கு சமானமென்றும் அழுக்கடைந்த சதை என்றும், விபசாரி என்றும், வேசி என்றும் மனித மக்கள் கேவலப்படுத்தப்பட்டுள்ளார். ஒருமதத்தில் பெண்மக்களுக்கு மோட்சமென்பதே கிடையாதாம். இன்னோர் மதத்தில்

"தூமகேது புவிக்கெனத்
தோன்றிய
"வாம மேகலை மங்கையரால்
வரும்"
"காமமில்லையேல் கடுங் கேடுறும்',
''நாமமுமில்லை, நாகமுமில்லையே''

எனவும் பெண்மக்களை இகழ்ந்துள்ளார்!! இன்னொரு மதத்தின்படி மக்களை மோசம் செய்யவந்த பேய்களாம் நமது தாய் தமக்கையர்!! இக்கொடிய பாடல்களையும், பாதக பழக்கங்களையும் பெண்களுக்கு அகோரதண்டனையையும் விதித்த ஆண்மகன் தனக்குத் தாயில்லாமலிருந்தால் உலகில் இவன்தொன்றி இருப்பானா என்று சிந்தித்துப்பார்ப்பானாக!!!

தனது தாயையும், தமக்கையும் பழிக்கவந்த பாதகனுக்கு மதங்களும் அனுகூலமாக இருந்து வருவதாகத் தெரிகிறது!! மதஙகள் வொழிந்தால் மாத்திரந்தான் ஆணுக்கும், பெண்ணுக்கும் சரிசமத்துவம் ஏற்படும்.

ஆதிமனிதக் குரங்கின் சாதாரண வாழ்க்கையிலிருந்து குரங்குமனிதர் வாழ்க்கையும் பெறப்பட்டிருக்க வேண்டும். ஆனால் குரங்குமனிதர் நமதுகாலங்களில் உலகில் எங்குமில்லை. சென்ற சிலவருஷங்களுக்குமுந்தி சில தேச பிரதானபட்டணமாகிய பீக்கின் அருகில் பத்துலட்ச வருஷங்களுக்கு முந்தி வாழ்ந்திருந்த

தொடர்ச்சி 16-ம் பக்கம் பார்க்க.

# அமெரிக்காவில் பொருளாதார புரட்சி.

## பொருளாதார சமதர்ம திட்டம்.

அமெரிக்காவிலே. சென்ற மார்ச்சு மாதம் 4-தேதிகருபின் சமூக—பொருளாதார நிலைமைகளில் ஒரு பெரிய புரட்சி ஏற்பட்டிருக்கிறது. அந்தப் புரட்சியை ஜனநாயக சமதர்மம், சர்வதிகாரம், ரூஸ்வெல்ட்டியம் என்றும் பலவிதமாக அழைக்கின்றார்கள். உண்மையில் அதை சமூக நீதி என்றே சொல்லவேண்டும்.

பிராங்லின் டெலானோ ரூஸ்வெல்ட் அமெரிக்குடி அரசுத்தலைவர் ஆன பிறகு, தாறுமாறு பட்டுக்கிடந்த கைத்தொழில் நிலைமையிலே ஒருவித ஒழுங்கையும் பாதுகாப்பையும் ஏற்படுத்திவிட்டார். அவர் "மறக்கப்பட்ட" மனிதன் (அதாவது பணக்காரார் முதலியோரால் கவனிக்கப்படாத) சாதாரண மனிதனுடைய சிநேகிதராயிருக்கிறார். யந்திரங்களிலும் மனிதர் விசேஷமானவர்கள் என்பது அவருடைய முக்கிய கொள்கை.

முதலாளிகள் சாதாரண மக்களை நசுக்கக்கூடாது என்று தோழர் ரூஸ்வெல்ட் வற்புறுத்துகிறார். சென்ற வாரம் ரேடியோ மூலமாக அவர் ஒரு சிறந்த பிரசங்கம் செய்தார். கவர்ன்மென்டானது, உயர்ந்தநிலையிலிருக்கிற ஒருசிலருக்காக மாத்திரமல்ல, சகல மக்களின் வாழ்க்கைக்காகவுமே, சமூக—பொருளாதார வழிகளில் வேலை செய்கின்ற ஒரு மனித ஸ்தாபனமாயிருக்கிறது என்று அவர் அந்தப் பிரசங்கத்திலே கூறினார். அவர் குறிப்பிடுகிற சுகவழ்க்கை எல்லா மக்களின் பொதுநலனுக்காக ஜனநாயக முறையில் கட்டுப்படுத்தப்பட்ட சுக வாழ்க்கையாகும். அது தனிசுதந்தரம், தனி அதிகாரம் முதலியவைகளுக்கு இடம் கொடாமல், ஜனநாயக முறை மனிதத்தன்மை ஆகியவைகளை அடிப்படையாகக் கொண்டதாய் இருக்கவேண்டும். உயர்ந்த நிலைமையிலுள்ள சிலர் மற்றஜனங்களுடைய பணத்தினால் தங்கள்பணப்பைகளை நிரப்பிக்கொள்ளுவதை தோழர் ரூஸ்வெல்ட் பலமாக கண்டிக்கிறார்.

### பொருளாதார விடுதலை திட்டம்.

நாட்டின் பணமுதலை சரியானபடி உபயோகிப்பதே ரூஸ்வெல்ட் ஏற்படுத்தியிருக்கிற பொருளாதார சீர்திருத்த திட்டத்தின் முக்கிய கொள்கையாகும். அது மிகவும் விஸ்தாரமான பண நிர்வாக ஏற்பாடு. அந்தத்திட்டத்தைப்பற்றி அவர் தமதுரேடியோ பிரசங்கத்தில் பின் வருமாறு கூறினார்:-

1. அடமானம் செய்யப்பட்டிருக்கிறவீடுகளையும், நிலங்களையும் கடன் கொடுத்தவர்கள் கைப்பற்றிக் கொள்ளாதபடி அவற்றை காப்பாற்றுதல். அவைகளை காப்பற்றுவதற்காக கவர்மென்டார் பண உதவி செய்கிறார்கள்

2. கைத்தொழிலுக்கும், பணஸ்தாபனங்களுக்கும் பெருந்தொகைப் பணங்கள் கடன் கொடுத்தல்.

3. பொது வேலைகளுக்காக பல நூறுகோடி டாலர்கள் ஒதுக்கி வைத்தல்.

4. வேலையில்லாத வர்களுக்கு உதவி செய்தல்.

5. மூடப்பட்டுப்போன பாங்கிகளில் பணம் போட்டிருந்தவர்களுக்கு நூறுகோடி டாலர்கள் கொடுத்தல்.

6. பாங்கியிலுள்ள பணமுதலுக்கு பாதுகாப்பு.

7. பணக்கஷ்டத்தினால் குடியானவர்கள் தங்கள்விளைபொருட்களை குறைந்த விலைக்கு விற்பனை செய்யாதிருக்கும்படி, அவர்களுக்கு கடன் கொடுத்தல்.

இந்த ஏற்பாடுகளுக் கெல்லாம் கவர்ன் மென்டாரே பணம் கொடுக்கிறார்கள். கவர்ன் மென்டார் இதற்கு வேண்டிய பணங்களையெல்லாம் கடன் வாங்கிக் கொள்ளுகிறார்கள்.

இப்படி பணம் கடன் வாங்கி பகிர்ந்து கொடுப்பதால் நாடு செழித்து விடும்என்ற இந்தத் திட்டத்தை பலர் நம்புகிறார்கள் இல்லை. ஆனால் ரூஸ்வெல்ட் அரசாங்கத்தார் இந்தக் கொள்கையையே அநுசரித்து நடக்கிறார்கள்.

பொது மக்களும் பண முதலீடு செய்கிறவர்களும் பணச்செலவு செய்யாததால் ஏற்பட்டுள்ள வியாபர மந்தத்தை நீக்குவதற்கு கவர்ன் மென்டார் போதிய பணங்கள் கடன் வாங்கி செலவு செய்ய வேண்டும், அப்படி செலவு செய்யவும் கூடும் என்பது பிரசிடென்ட் ரூஸ்வெல்டின் கருத்தாகும். வேலையில்லாதவர்களுக்கு செலவு செய்ய பணம் கிடையாது. அவர்களுக்கு வேண்டிய பணம் கொடுக்கப்பட வேண்டும். விவசாயி, அல்லது வீட்டு சொந்தக்காரன் அல்லது ரயில்வே கம்பெனி, அல்லது கைத்தொழில் ஸ்தாபனம் பண முடையினால் பாங்கியிலோ வர்த்தகரிடமோ ஒரு அடமானத்தை மீட்கமுடியாமல் இருக்கிறது என்று வைத்துக் கொள்ளுவோம் அப்படிப்பட்ட சந்தர்ப்பத்தில் கவர்ன் மென்டார் வேண்டிய உதவி செய்ய வேண்டும். நிர்மாண வேலைகள் குறைந்துவிட்டதென்றும், பணம் கடன் வாங்கி அவ்வேலைகளைச் செய்ய முடியவில்லை என்றும் வைத்துக் கொள்வோம். அப்போது கவர்ன்மென்டார் தங்கள் செலவில் அவ்வித நிர்மாணவேலைகளை நடத்த வேண்டும். இவ்விதமாக இந்தத்திட்டத்தினால் முந்திய முதலாளித்துவ எதேச்சாதிகாரம் அடியோடு மாற்றப்பட்டு ஒரு புதிய பொருளாதார நிலைமை ஏற்படுத்தப்பட்டு வருகிறது.

பிரசிடென்ட் ரூஸ்வெல்ட் தமது திட்டத்தினால், சட்டபாதுகாப்பு பெற்ற முதலாளித்துவ பேராசையையும், சுயநலத்தையும் பலமாக தாக்கி பொதுமக்களின் சமூக பொருளாதார அபிவிருத்திக்கு வழி கோலுகின்றார்.

தனி மனிதர் முயற்சிக்குப் பதிலாக, கவர்ன்மென்டரால் நடத்தப்படுகிற, ஜனநாயக பொது முயற்சி ஏற்பட்டுவருகிறது.

இந்தப் பெரிய இயக்கம் சமூக நீதியை அடிப்படையாகக் கொண்டதாயிருக்கிறது.

இந்தப் பெரிய திட்டத்தினால் கைத்தொழில்கள் முன்னொருபொழுதும் இல்லாதவிதமாக ஒழுங்குபடுத்தப்பட்டு வருகின்றன. தொழிலாளிகளுக்கு புதிய பாதுகாப்புகளும், புதிய உரிமைகளும் ஏற்பட்டிருக்கின்றன.

இந்த திட்டத்தினால் தனி மனிதரின் சுயநல முயற்சிகளும், போட்டி வியாபாரியும் ஒழிக்கப்பட்டு வருகின்றன.

பிரசிடெண்ட் ரூஸ்வெல்டின் பொருளாதார சீர்திருத்தம் இரத்தம் சிந்துதல் இல்லாத ஒரு பெரும் புரட்சியாகும். அதனால் ஏற்படும் பலன்களைககவனித்தால் அது பதினெட்டாம் நூற்றாண்டில் பிரான்சிலும், அமெரிக்காவிலும் நடைபெற்ற அரசியல் புரட்சிகளுக்கு சமமானது என்னலாம்.

பிரசிடென்ட் ரூஸ்வெல்டின் புதியதிட்டம், நாட்டின் பொருளாதார சமூக, அரசியல் நிலைமைகளிலே பின்வரும் மாறுதல்களை உண்டாக்கியிருக்கிறது.

(1) ஏராளமான லாபம் சம்பாதிப்பதே இனிமேல் வியாபாரத்தின் முக்கிய நோக்கமாக இருக்கக் கூடாது. எந்த வியாபார கைத்தொழில் முயற்சியும் நியாயமானலாபத்தை மாத்திரம் எதிர்பார்க்கலாம்.

(2) தொழிலாளிகளுக்கு அதிக நியாயமான பாகம் கிடைக்கும்படி நாட்டின் வருமானம் புது முறையில் பகிர்ந்து கொடுக்கப்படுகிறது.

(3) சொத்து உரிமைக்கு கொடுக்கப்பட்டிருந்த பழய, முட்டாள்தனமான முக்கியம் அழித்து மாற்றப்பட்டு வருகிறது. மனித உயிர் சொத்து உரிமையிலும் அதிக முக்கியமாக கருதப்படுகிறது.

(4) கைத்தொழில்களை ஜனநாயகமுறையில் நடத்துவதால் இப்பொழுது வேலை செய்ய பிரியமுள்ள ஒவ்வொருவருக்கும் பிழைப்புக்கு இடமிருக்கிறது. யாரும் இனி பசியோடு இருக்க வேண்டிய அவசியம் இல்லை.

மாறுதலை விரும்பாத 'கர்னர்க' கோஷ்டிகள்மாத்திரம் ரூஸ்வெல்ட் திட்டத்தை எதிர்க்கின்றனர்.

அடுத்த மாதம் அமெரிக்க காங்கிரசில் இந்தத் திட்டத்தைப் பற்றி விவாதம் ஏற்படும். அப்போது ஜன நாயகக் கட்சியையும் குடிஅரசுப் கட்சியையும் சேர்ந்த மாறுதலை விரும்பாத கோஷ்டிகள் எல்லாம் இந்தத் திட்டத்தை பலமாக எதிர்ப்பார்கள் என்று தெரிகிறது. ஆனால் பொதுஜனங்கள் பெரும் பான்மையாக இந்தத் திட்டத்தை ஆதரிக்கிறார்கள். இன்னும் ஆறுமாத காலத்தில் இந்தத்திட்டத்தின் பலாபலன்கள் நன்கு தெரிந்து விடும்.

பின்வரும் விஷயங்கள் பிரசிடென்ட் ரூஸ் வெல்டின் திட்டத்துக்கு அனுகூல மாயிருக்கின்றன.

(1) இந்த திட்டம் அமுலுக்கு வந்த பிறகு அமெரிக்காவின் பொருளாதார நிலைமை முன்னிலும் சிறப்படைந்திருக்கிறது.

(2) இந்தத் திட்டத்தை எதிர்ப்பவர்களை ஜனங்கள் நாட்டின் விரோதிகளாக மதிக்கின்றனர்.

(3) சமீபத்தில் வெளிவந்த பாங்கி மோசடி ஊழல்கள் பழய பொருளாதார ஏற்பாடுகளின் மேல் அவநம்பிக்கையை உண்டாக்கி விட்டிருக்கிறது.

(4) ஜனங்கள் இந்தப் புதிய திட்டத்தை நடைமுறையில் ஆதரிக்க தயாராக இருக்கிறார்கள்.

பிரசிடென்ட் ரூஸ்வெல்ட் அமெரிக்காவின் முன்னேற்றத்தையே கருதி உழைக்கும் சிறந்த தலைவராக ரூபிக்கப்பட்டு விட்டது. அவர் நல்ல புத்திசாலியானதால் சர்வாதிகாரியாக மாறிவிடுவார் என்று பயப்பட வேண்டியதில்லை.

அமெரிக்காவிலே பொருளாதார அபிவிருத்தி ஏற்கனவே துவங்கி விட்டது. சமூக நீதி, கண்டிப்பான கவர்ன்மென்ட் நடைமுறை ஆகியவைகள் மூலமாக பிரசிடென்ட் ரூஸ்வெல்லின் திட்டம் நடைபெற்று வருகிறது. அது அரசாங்க முறையில் ஒரு புதிய உணர்ச்சியை உண்டு பண்ணியிருக்கிறது என்று டாக்டர் சுதீந்திரபோஸ் "இந்தியன் எக்ஸ்பிரஸ்" பத்திரிகைக்குஎழுதியிருக்கிறார்.

## நன்கொடை.

நமது "புரட்சி" பத்திரிகையின் நலங்கோறி அன்புடன் ரூ. 2. திண்டுக்கல் தோழர் K. T. O. ஏ-தம்பர நாடார் அவர்கள் அளித்ததை வந்தனத்துடன் பெற்றுக் கொண்டோம்.

# நாஸ்திகப்பிரசாரம் ஏன்?

(சென்னை மாகாண நாஸ்திக சங்கக்காரியதரிசி தோழர் ப ஜீவானந்தம்)

இந்தக் கேள்வி நமது கூட்டுத்தோழர்களிடையிலேயே கிளம்பும் பொழுது மற்றவர் நிலைமைபற்றிக் கூறுவானேன்? பகிரங்கமாக நாஸ்திகப்பிரசாரஞ் செய்வதால் நமது இயக்கத்திற்கு இடையூறு தான் விளையுமென்கிறார் சிலர். கடவுளைப்பற்றிக் கவலையில்லை யென்று கூறிவிடுவதே உசிதமென்றும், கங்கணங்கட்டி 'கடவுள் இல்லை, யென்று பேசுவது வியர்த்தமென்றும் கூறுகிறார் சிலர். 'கடவுள் உண்டு' என்று கூறுவது எவ்வளவு முட்டாள்தனமோ அவ்வளவு முட்டாள்தனம் 'கடவுள் இல்லை' என்று கூறுவதும் என்கிறார் சிலர். இன்னும் பல பல சந்தேகங்களும் ஆக்ஷேபனைகளும்.

அனாவசியமாக கடவுளோடு போர் கொடுப்பது வீண்வேலையென்று நாங்களும் ஒப்புக்கொள்கிறோம். மனித வர்க்கத்தின் விலை மதிப்பில்லாத காலத்தை "கடவுள் உண்டா? இல்லையா?" என்கிற விஷத்தில் கொட்டி விவாதித்து வியர்த்தமாக்கி விட வேண்டுமென்பதும் எங்கள் நோக்கமல்ல. தொழிலாளி, விவசாயிகளிடம் காட்டுத்தீபோல் பரவித்திரவேண்டிய சமதர்ம இயக்கத்திற்கு நாஸ்திகப்பிரசாரம் பக்கபலமாய் நிற்க முடியுமா என்னும் கேள்வி கவனிக்கத்தக்கதே. சென்ற காலத்தில் இந் நாட்டில் பல நன்னோக்கங் கொண்ட அறிஞர்கள் சமூகச்சீர்திருத்தம்-துள்ளியமாகச் சொன்னால் சமூகப்புரட்சி-உண்டாக்கும் பொருட்டு பகீரதப் பிரயத்தனம் செய்திருக்கிறார்கள். இராமானுஜர் முதல் விவேகானந்தர் ஈறாகப்பலர் சமூகத்தை மாற்றியமைக்க அரும்பாடு பட்டனர். கோரிய பலன் பட்டும் கிடைக்கவில்லை. அவர்களுடைய ஆற்றலிலோ, நேர்மையிலோ யாருக்கும் துளிகூட அவநம்பிக்கையில்லை. சீர்திருத்த வேலைக்குரிய அருங்குணங்கள் பலவும் அவர்களிடம் குடி கொண்டிருந்தன. கோகலேயை விடச்சிறந்த ஊழியரும், ஈஸ்வர சந்திரரைக்காட்டிலும் ஊக்கமும் உத்வேகமும் கொண்டவரும், ராம்மோகன் ராயைப்பார்க்கிலும் சாமர்த்தியசாலியும் விவேகானந்தரினும் சிறந்த புருடரும் காண்பதரிது. பின் ஏன் தோல்வி.? எதார்ப்பின் அஸ்திவாரத்தைப் பிடுங்கியெறிய அவர்கள் மலைத்தனர். தீமையின் ஆணிவேரை வெட்டிவீழ்த்துவதற்குப்பதில் தங்கள் கோடரியைக் கொம்புகளிலும் கிளைகளிலுமே பாய்ச்சினர்.

சமூகப்புரட்சிக்குப் பரம விரோதி வைதீகம் என்பதில், நமது தோழர்களிடையில் இரண்டபிப்பிராயம் இருக்க முடியாது. நாம்மனித சமாஜத்தை நிர்மாணிக்க விரும்புகிறோம். இதன் பொருட்டு, சர்வ பேதங்களையும் ஒழிக்க, சமபந்தி போஜனம், கலப்பு மணம், பொருளாதார சமத்துவம் ஆகியவைஅவசியமெனக்கருதுகிறோம். வைதீகமானது சமபந்திபோஜனம், கலப்பு மணம், பொருளாதார சமத்துவம் ஆகியவற்றை முழுதும் எதிர்க்கிறது. வைதீகத்தின் முதுகெலும்பாக மதம் அமைந்திருக்கிறது. எப்பொழுது வைதீகம் மத பீடத்தில் நின்று கொண்டு நம்மை எதிர்க்கின்றதோ, அப்பொழுது நாம் மத பீடத்தை உடைத்துதகர்க்க வேண்டியவர்களாகிறோம். நாம் மதத்தைக் கடுமையாகத் தாக்கும் போது வைதீகம் ஆஸ்திகத்தில் (கடவுளில்] அடைக்கலம் புகுந்து நரக பயத்தால் நம்மை அச்சுறுத்தப்பார்க்கின்றது. கடவுள், மதம், சமூகம் மூன்றும் பின்னிப் பிணைந்து கிடக்கின்றன.

ஆகவே மதத்தையும் கடவுளையும் அறுத்துத்தள்ளி சமூகத்தை விடுதலை செய்தாலன்றி மனித வாழ்வு தழைத்துச் செழித்தோங்குவது துர்லபம்.

நமது லட்சியத்தை நோக்கிச்செல்லும் பாதையில் காணப்படும் முட்டுக்கட்டைகளும், தடைகற்களும் பற்பல. அவற்றில் முக்கியமானவற்றில் இரண்டு மதமும் கடவுளும். சென்ற காலச்சீர்திருத்த வீரர்கள், இவற்றின் எதிர்ப்புக்கு ஆளாக அஞ்சினர். ஏனென்றால் மக்கள் மனப்பான்மையில் புரட்சியுண்டுபண்ண அவர்கள் பயந்தனர். நமக்கோ நமது கோரிக்கைதான் பிரதானமே யொழிய ஏற்படும்இடையூறையொட்டிய'பரிசுத்த தெய்வீக'ப்பெயர்களைப்பற்றி கொஞ்சங்கூடக்கவலையில்லை. இக்காரணத்தால் தான், பொது ஜனங்கள் தாங்களாகவே யோசித்துத்தீர்மானிக்கத்தக்க நிலைமையை உண்டாக்க முயற்சிக்கிறோம். பொது ஜனங்கள் சுயேச்சையாகச் சிந்திக்கும் மார்க்கம் ஏற்படாதவரையில கோரிய பலனை அடையலாமென்பதுவீண், ஒருமுறை, பொதுஜனங்கள் தாங்களாகவே யோசிக்கத் தொடங்கிவிட்டால், பின், முன்னேற்றப் பாதைதிறக்கப்பட்டுவிடும். அறிவியல்வாதிக்கு ஆஸ்திக வாதம் ஒத்துவராது. மனிதவர்க்கத்தைத் தக்க வழியில் செலுத்த வேண்டுமென்று விரும்பும் சீர்திருத்தக்காரர்கள், புரட்சிக்காரர்களெல்லோரும், அஞ்சா நெஞ்சராயிருக்க வேண்டும். அவர்கள் அஞ்சா நெஞ்சர்களாயிருக்க வேண்டுமானால், அவர்கள் அறிவியல் வாதிகளாக, சுயேச்சா சிந்தனைசக்தியை வளர்க்கவேண்டும். விதிவிலக்கின்றி சகல அறிவியல் வாதிகளும் [Free Thinkers] மனிதவர்க்கத்தை நேசிப்பவர்களே. எத்துறையில் அஞ்சாது சீர்திருத்தம் செய்யவேண்டுமானாலும், புரட்சி செய்ய வேண்டுமானாலும் ஆஸ்திகம் குறுக்கே படுத்து வழியை மறிப்பது நமக்கு நன்றாகத் தெரியும். ஆகவே, பிறரைப் புண்படுத்தவல்ல, மக்களின் சுயேச்சா சிந்தனை சக்தியை வளர்க்கும் பொருட்டு நாம் நாஸ்திகப் பிரசாரம் செய்து தீரவேண்டியவர்களாயிருக்கிறோம்.

சமூகப்பழக்க வழக்கங்களுக்கும், மதத்திற்கும் கடவுளுக்கும் பிரிக்க முடியாத சம்பந்தமிருக்கிற தென்பது அனுபவ உண்மை. கடவுள் மனிதனால் சிருஷ்டிக்கப்பட்டு வந்துகொண்டிருக்கிறது, இறந்துபட்ட, உயிரோடிருக்கிற மதங்களைப்போல். இதனை விளக்க, இந்தியாவிலுள்ள கோடிக்கணக்கான கடவுள்களும், அவற்றின் வைப்பாட்டிகளும் குழந்தை குட்டிகளுமே போதிய சான்றாகும். மதங்கள் தோன்றி மறைகின்றன. மனிதவர்க்கம் அதற்காகக் கவலைபபட்டு அழிந்து ஒழிந்து போய் விட வில்லை. அதைப் போன்றுதான் கடவுள்களும். கடவுளுணர்ச்சி, மனிதன் சிந்தனை சக்தியை அடக்கி யொடுக்குவதோடு மட்டுமன்றி, உலக வாழ்க்கையையும், சிதைத்துக் கஷ்ட நிஷ்டூரத்தைப் பெருக்கிறது.

சிறப்பாக இந்தியாவில் கடவுளும் தலைவிதியும் மனிதனின் முன்னேற்றத்தை நசுக்கி, சமூகத்தை அரித்துத்தின்று பொத்தலாக்கி விட்டன. நமது நாட்டின், சமூக, பொருளாதார, அரசியல் இழிநிலைக்கும் பிற்போக்குக்கும் கடவுளுணர்ச்சியே முதற் பெருங் காரணம். சீர்திருத்த நோக்கத்தோடு, பற்பல சந்தர்ப்பங்களில் பற்பல சமயங்கள் முளைத்தன. பல சமயங்கள் முயற்சியில் முறியடிக்கப்பட்டன; பல மாண்டு மண்ணாயின. இந்துமதத்தின் அஸ்திவாரமாகிய வருணாசிரமதர்மத்தைக் குழிவெட்டிப் புதைக்கப் பன்முறை முயற்சி செய்யப்பட்டது. பயன் ஒன்றுமில்லை. பெரிய மதங்களும், குட்டிச்சமயங்களும், பெரிய மன்றங்களும், சிறிய மன்றங்களும், பழைய சங்கங்களும் புதிய சங்கங்களும் எவ்வளவோ பிரயாத்தனப்பட்டும் இந்து மதத்தைச் சீர்திருத்தம் செய்ய இயலவில்லை. காரணமென்ன வென்றால், சமூகத்தோடும் பழக்க வழக்கங்களோடும் இரண்டறக்கலந்துபோயிருக்கும் கடவுள் உணர்ச்சியில் கை வைக்கப்பயந்ததுதான். மிகச் சிலர்தான் இவ்விஷயத்தில் துணிவுடன் தலையிட்டனர். புத்தர் ஒருவர்; சாருவாகர், கபிலர் மற்றும் சிலர். சாதி முறைகளையும், வருணாச்சிரம தர்மத்தையும் வேரறப்பிடுங்க வேண்டுமாயின் கடவுள் வாதத்தை உதறித்தள்ளிவிடுங்கள் என்றார் புத்தர். 'தெய்வீக' சாஸ்திரங்களுக்கும் வேத வாக்குக்கும் மண்டியிட்டு வணங்கிவிட்டு எவ்வாறு சனாதனதர்மத்தையும் வருணாச்சிரமத்தையும் சுட்டெரிப்பது? ஆதிக்க வெறியர்களும், வைதிகப் பித்தர்களும், சனாதன வருணாச்சிரமக் கிறுக்கர்களும் எவ்வாறு கடவுளையும் தெய்வீகத்தன்மையையும் குறுக்கே நிறுத்தி சீர்திருத்த வாதிகளையும் உடனடியாகத் தலைகீழ் மாற்றத்தை விரும்புகிறவர்களையும் தடுக்கிறார்களென்பதை நாம் நித்தம் பார்க்கின்றோம். சங்கராச்சாரிகளும், எம். கே. ஆச்சாரிகளும், மாளவியாக்களும், காந்திகளும் எடுத்ததற்கும் தொடுத்ததற்கும்—ஒரே காரியத்தில் முரண்பட்ட இரண்டு அபிப்பிராயத்திற்குக் கூட-கடவுளைச் சந்நிதியிலிழுத்துப் போடுவதை நாம் காண்கின்றோம். சைத்தான்கள் சாஸ்திர மேற்கோள் காட்டும்போது, 'தெய்வசித்த' உபதேசம் செய்யும்போது, தற்குறிகளான பாமர மக்கள் கலங்கிக்குழம்பிப்போவது ஸகஜம். 'கடவுள' வியாபாரிகள் மலிந்துபோய்விட்டார்கள்.

தொடர்ச்சி 13-ம் பக்கம் பார்க்க.

# தோழர் ஈ. வெ. ரா.

## ராஜநிந்தவண வழக்கு.

### கோவை ஜில்லா மாஜிஸ்திரேட் முன் விசாரணை.

சுயமரியாதை இயக்கத் தலைவரும், "குடி அரசு" ஆசிரியருமான தோழர் ஈ. வெ. ராமசாமி அவர்கள் மீதும், அவருடைய சகோதரியும், ஷை பத்திரிகையின் பப்ளிஷருமான தோழர் சா. ரா. கண்ணம்மாள் அவர்கள் மீதும் இ. பி. கோ. 124 (ஏ) பிரிவின்படி தொடரப்பட்டிருக்கும் வழக்கு 12-1-34 தேதி கோயமுத்தூர் ஜில்லா மாஜிஸ்டிரேட்டு தோழர் G. W. வெல்ஸ் ஐ. சி. எஸ். முன்பு விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டது. ஜாமீனிலிருந்துவரும் தோழர் கண்ணம்மாளும் வந்திருந்தார்.

சர்க்கார் தரப்பில் பப்ளிக் பிராஸிகியூட்டர் ராவ்சாகிப் கே. ராகவேந்திரராவும், தோழர் ராமசாமிக்காக வக்கீல் தோழர் நஞ்சுண்டையாவும், தோழர் கண்ணம்மாளுக்காக தோழர்கள் டி. டி. ஆர். பிள்ளை, ஈரோடு ஈ. வி. வேணுகோபால், ஆகியவர்களும்ஆஜராகியிருந்தனர்.

தோழர் ராமசாமி சாட்சிகளைக் குறுக்கு விசாரணை செய்யவேண்டியதில்லை என்று தன்னிடம் தெரிவித்திருப்பதால், தான் சாட்சிகளைக்குறுக்கு விசாரணை செய்வதில்லை என்று வக்கீல் தோழர் நஞ்சுண்டைய்யா மாஜிஸ்திரேட்டிடம் தெரிவித்தார்.

தோழர் கண்ணம்மாளின் வக்கீல் தோழர் டி. டி. ஆர். பிள்ளை மட்டும் சாட்சிகளைக் குறுக்கு விசாரணை செய்தார்.

பப்ளிக் பிராசிகியூட்டர் ராவ் சாஹிப் கே. ராகவேந்திரராவ் பிராசிகியூஷன் கேசை எடுத்துரைக்கும்பொழுது 1-வது எதிரி ஒரு பிரபலஸ்தரென்றும், பத்திரிகையில்அச்சுச்சட்டத்தின்படிதன் பெயரைப் பிரசுரிக்கக் கடமைப்பட்டிருந்தும் 1-வது எதிரி அப்படிச் செய்யவில்லையென்றும் அவர் பத்திரிகையின் பத்திராதிபர் என்பதற்கு சாக்ஷியம் இருக்கிறதென்றும் 2-வது எதிரி தான் பிரசுரிப்பவர் என்று கூறியிருப்பதுடன் பத்திரிகையிலும் பிரசுரித்திருக்கிறாரென்றும் கூறினார்.

போலீஸ் இன்ஸ் பெக்டர் வி. ரங்கசாமி அய்யரை விசாரித்தபோது அவர் கூறியதன் சாரமாவது:—

நான் கோவை ஜில்லாவில் போலீஸ் இன்ஸ்பெக்டர். இந்த வழக்கின் சம்பந்தமாக பிராதை தாக்கல் செய்யும்படி எனக்கு போலீஸ் இன்ஸ்பெக்டர் ஜெனரல் உத்திரவிட்டார். எனக்குமுதல் எதிரியின் கையெழுத்துத் தெரியும். சோதனை செய்த சமயம் அவர் கையெழுத்துப் போட்டிருக்கிறார்.

குறுக்கு விசாரணையில் சாட்சி கூறியதாவது:—

ஷை வியாசத்தின் பூர்ண மொழிபெயர்ப்பு என்று இந்த மொழிபெயர்ப்பைக் கூறமுடியாது. ஆனால் பல முக்கிய பாகங்கள் மொழிபெயர்க்கப்பட்டிருக்கின்றன. நான் "குடி அரசு" பத்திரிகையை தொடர்ச்சியாக வாசிக்கும்படியானவன்அல்ல 23-3-33, 16-7-33, 12-11-33 ஆகிய தேதிகளின் குடி அரசுப் பிரதிகளை இந்த வழக்கின் சம்பந்தமாக வாசித்திருந்தாலும் இருக்கலாம். இந்த வழக்கிற்குச் சம்பந்தப்பட்டவைகள் ஏதேனும் ஷை பிரதிகளில் இருக்கிறதா என்பதை கவனிப்பதற்காக அவைகளை நான் வாசித்தேன். 1932-33 ஆகிய வருஷங்களில் பிரசுரித்தவைகளை நான் வாசித்திருக்கிறேன்.

ஷை பத்திரிகையின் பொதுவான நோக்கத்தைப்பற்றிய ஓர் இரண்டு கேள்விகளை வக்கீல் டி.டி. ஆர். பிள்ளை கேட்க ஆரம்பித்த போது, சர்க்கார் வக்கீல் இதை ஆக்ஷேபித்தார். முடிவில் மேற்படி கேள்விகள் கேட்க அனுமதிக்கப்பட்டன.

தொடர்ந்து சாட்சி கூறியதாவது:— சட்ட மறுப்பு இயக்கத்தையாவது, சர்க்காரை ஆதரித்து எழுதியதையாவது படித்ததாக எனக்கு ஞாபகம் இல்லை. காங்கிரஸ் செயல்களையும், காந்தியடிகளின் தத்துவங்களையும் கண்டித்து எழுதியிருந்த சில வியாசங்களையும் நான் படித்திருக்கிறேன்.

அடுத்தபடியாக கவர்ன்மெண்டு தமிழ் மொழிபெயர்ப்பாளர் ராவ்சாஹிப் சரவண முதலியார் விசாரிக்கப்பட்டார். தான் இந்த வேலையில் 17-வருஷங்களாக இருப்பதாயும் வழக்கில் சம்பந்தப்பட்ட தலையங்கத்தை ஆங்கிலேயத்தில் மொழிபெயர்த்ததாகவும் அது சரியான மொழிபெயர்ப்பென்றும் கூறினார்.

குறுக்குவிசாரணையில் தலையங்கத்தின் சாராம்சத்தை தனது கடமையில் ஒன்ருகக் கருதி கவர்ன்மெண்டு கேட்காமல் தானே மொழிபெயர்த்துக் கொடுத்ததாகவும், இந்தக் கோர்ட்டில் தான் ஆஜராகவேண்டியிருந்ததால் தலையங்கத்தின் முழு மொழிபெயர்ப்பு தயாரித்ததாகவும் தலையங்கத்தில் சில எண்ணிக்கை கொடுக்கப்பட்டிருக்கிறதென்றும் தலையங்கத்தின் 5, 6, 7, 8 பிரிவுகளை தனது சாராம்சத்தில் சேர்க்கவில்லையென்றும் மேலும் காந்தி காங்கிரஸ் முதலிய ஸ்தாபனங்களைப்பற்றிய பாகங்களையும் தான் சேர்க்கவில்லையென்றும் தனது மொழிபெயர்ப்பு தலையங்கத்தின் சரியான மொழிபெயர்ப்பல்லவென்று கூற முடியாதென்றும் இத்தலையங்கம் கவர்ன்மெண்டின் கல்வி இலாக்காவைப்பற்றி எழுதப்பட்டிருக்கிறதென்றும் இந்த இலாக்காவை உதாரணமாகஎடுத்துக்கொள்ளப்பட்டிருக்கிறதென்றும் தலையங்கத்தில் சில ஜனங்களின் நன்மைக்குத் தகுந்தவாறு செய்யப்படவில்லையென்று கூறப்பட்டிருக்கிறதென்றும் சொன்னார்.

வக்கீல் சொன்னதின் பேரில் சாக்ஷி தலையங்கத்தை மறுபடியும் வாசித்தார். வாசிப்பதிலிருந்து தனது அபிப்பிராயம் என்ன என்று மறுபடி குறுக்கு விசாரணை செய்யப்பட்டதில் சாக்ஷி சரியான அபேக்ஷகர்களைத்தேர்தலுக்கு அனுப்பும்படி தலையங்கத்தில் ஓட்டர்களைக் கேட்கப்பட்டிருக்கிறதென்றும், தலையங்கத்தில் ஓட்டர்களைக் கேட்கப்பட்டிருக்கிறதென்றும், தலையங்கம் பிரிட்டிஷ் அரசாங்கத்தைக் கண்டனம் செய்கிறதா? அல்லவா? என்று தான் கூற முடியாதென்றும், தற்கால அரசாங்கம் எடுபடவேண்டுமென்று வாசிப்பதிலிருந்து தெரியவருகிறதென்றும் கூறினார்.

அடுத்த ஜில்லா மாஜிஸ்டிரேட் குமாஸ்தாக்கள் தோழர்கள் ராகவேந்திரராவும், ரங்கநாதய்யரும் விசாரிக்கப்பட்டனர்.

கடைசியாக ஈரோடு போலீஸ் இன்ஸ்பெக்டர் அத்து அய்யர்விசாரிக்கப்பட்டார். தான் ஜில்லா மாஜிஸ்டிரேட் கோர்ட்டிலிருந்து அனிக்கப்பட்ட ஓர் சர்ச்சுவாரண்டின் காரணமாக குடி அரசு ஆபீசைச் சோதனை செய்து சில கடிதங்களைக் கைப்பற்றியதாகவும் சோதனை 1-வது எதிரி பத்திரிகையின் ஆசிரியர் என்பதை ருபிக்கச் செய்யப்பட்டதென்றும்: இந்தப்பத்திரிகையை அநேகம் பேர் வாசிக்கிறார்களென்றும் கூறினார். குறுக்கு விசாரணையில் 2வது எதிரியின் கடிதங்களொன்றும் தான் பார்க்கவில்லை யென்றும், 2வது எதிரி ஈரோடு முனிசிபாலிடியில் ஓர் கவுன்சிலர் என்றும், 1வது எதிரி சமூக சீர்திருத்தத்தில் வேலை செய்பவரென்பது தனக்குத்தெரியுமென்றும் கூறினார்

சாட்சி விசாரணை முடிந்த பிறகு, தோழர் ஈ. வெ. ராமசாமி அவர்கள் தனது ஸ்டேட்டுமெண்டை தாக்கல் செய்தார். [அது மற்றொரிடத்தில் பார்க்க] வழக்கு இம்மாதம் 15ம் தேதி மாலை 2-30 மணிக்கு மீண்டும் விசாரணைக்கு ஒத்தி வைக்கப்பட்டது.

15, 16, 17 ஆகிய மூன்று தினங்களிலும் வழக்கு விசாரணை நடந்தது. அதுசமயம் 2வது எதிரி தோழர் கண்ணம்மாளுக்காக ஆஜரான வக்கீல் தோழர் டி. டி. ஆர். பிள்ளை தமது வாதத்தைத் தொடர்ந்து கூறுகையில், ஷை வியாசமானது, ராஜநிந்தனையைக்கற்பிக்கவில்லை என்பதாகவும், பள்ளிக்கூடங்களில் வாசிக்கும் மாணவர்களுக்குச் சிறுவயதிலேயே மதத்தைப் பற்றியும், கடவுளைப்பற்றியும் அதிகமாகப் போதித்துவிடுவதால், மற்ற விஷயங்களை அவர்கள் தெரிந்து கொள்வதற்கு அவகாசமில்லாமல் போய்விடுகின்றதென்ற கருத்துடனேயே தான் அது எழுதப்பட்டதென்பதாகவும். கல்வி இலாகாவை நிர்வகிக்கச் செலவழிக்கும் பணத்திற்குத் தகுந்த கைமாறு கல்வி அபிவிருத்தியில் இல்லை என்ற ஓர் வருத்த மேலீட்டினால் தான், ஷை வியாசத்தில் கூறப்பட்டுள்ளனவென்பதாகவும், காங்கிரசும், காந்தியும் கூட, ஏழை மக்களின் நன்மைக்காகப்பாடுபட தவறிவிட்டார்கள் என்பதாகவும், அவர்கள் முதலாளி வர்க்கத்தாரை ஆதரிப்பவர்களாகவே இருக்கிறார் என்பதாகவும் கூறினார். ஷை வியாசத்தில மற்ற ஸ்தாபனங்களைப்பற்றி கூறியிருப்பதற்குக்காரணம், சிலர் காங்கிரஸ்காரர்கள் என்று சொல்லிக்கொண்டிருந்து காங்கிரஸ் சட்டசபைகளு

தொடர்ச்சி 12-ம் பக்கம்

புரட்சி

ஈரோடு 1934-ஜனவரி மீ 21-உ

## சைவர்களின் மனப்பான்மை.

சைவர்கள் என்பவர் சிவனை முழுமுதற் கடவுளாக எண்ணி வழிபடுபவர்களாவார்கள். சிவ என்னும் சொல் மங்களகரம் என்றும் அன்பே உருவாகக்கொண்டது என்பது முதலாக பல பொருள்களையும் குறிக்கத்தக்கதாகும். இப்படிப் பொருள்படும் வாக்கியத்தின் வாச்சியனை வழிபடுபவர்கள் தான் சைவர்கள் என்று கூறுகிறார்கள். இத்தகையோர்களின் இலக்கணங்கள் எப்படியிருக்கவேண்டுமென்பதைக் குறித்து சைவாகமங்களில் விசேடமாகக்கூறப்பட்டிருக்கிறது. அவைகளை விரிக்கிற் பெருகுமென முக்கியமானவற்றை மட்டில் இங்கு குறிப்பிடுகிறோம்.

மனமொழிகாயங்களால் தன்னைப்போற் பிறரை நேசித்தொழுகல் என்பன போன்றவைகளாகும். இத்தகைய அரிய குண சமூகத்தோடு கூடிய சைவப் பெரியார்களில் தானும் ஒருவராக எண்ணிக்கொண்டு அநேக சைவக்கூட்டங்களில் சொற்பொழிவாற்றிவரும் கோவை சேக்கிழார் நிலையம் தோழர் சி. கே. சுப்பிரமணியமுதலியார் B.A அவர்கள் ஜனவரி மாதம் 18-உ "தமிழ்நாடு" பத்திரிகையில் "அரைகுறை சாஸ்திரஞானம் கூடாது" "சோதிட சாஸ்திர ஆராய்ச்சி" "நவக்கிரகங்களுடன் எங்கள் சம்பந்தம்" என்கின்ற தலைப்புகளின்கீழ் எழுதிய கட்டுரையின் துவக்கத்தில் "கழிந்த பஞ்சாங்கத்தையும் தற்பைப்புல்லையும் நம்பாதே" என்று சொல்லுபவர் சுயமரியாதைக்காரர் என்றும், "சுயமரியாதைக் கொடியை ஏற்றியிருப்பவர்கள் கூட நல்லநாளும் இராகுகாலமும் பார்த்தே தீருகிறார்கள் என்றும் அதை நான் பார்த்திருக்கிறேன் என்றும், மற்றும் பலவிஷயங்களையும் எழுதிக்கொண்டு "திருஞானசம்பந்த நாயனார் சரித்திரத்தைப்பற்றிச் சொல்லும்போது பெரிய புராணமானது "அருக்கன் முதற்கோள் அனைத்தும் அழகிய உச்சங்களிலே பெருக்க வலியுடன் நிற்கப் பேணிய நல் ஓரை எழத்திருக்கிளரும் ஆதிரைநாள்" அவர் அவதரித்த காலம் என்று சொல்லுகிறார். அதாவது அவர் அவதரித்த காலத்திலே ஒன்பது கிரகங்களும் உச்சம். நல்ல லக்கினம். நக்ஷத்திரம் திருவாதிரை. இப்படி ஒரு சாதகம் போட்டுப் பார்த்து சோதிடர்கள் பலன் சொல்லுவார்களேயானால் சுவாமிகள் சரித்திரத்திற்கு ஒத்தே இருக்கும்" என்றும் மேற்படி பத்திரிகையில் காணப்படுகிறது. சோதிடசாஸ்திரமானது வான சாஸ்திர சம்பந்தமுடையது. இது கணிதத்தையே ஆதாரமாகக்கொண்டது என்பது மறுக்கப்படத் தக்கதல்லவென்றாலும் அது தற்போது மக்களிடம் புழங்கிவருகின்ற மாதிரியையும், அதனால் மக்கள் எத்தகைய துன்பத்திற்காளாகிவமாற்றமடைந்து துன்புற்றுவருகிறார்கள் என்பதையும் கவனிக்கும் போது, மக்களின் வாழ்க்கையில் அது தன் முயற்சிக்கும், தன்மதிப்புக்கும், தன்நம்பிக்கைக்கும் முற்றும் முரண்பட்டதாகவே காணப்படுவதுடன் அதை மக்களுக்குப் போதித்துப் பலன்களைச் சொல்லி ஏமாற்றி சாந்தி, கிரகப்பிழை, என்பவைகளால் ஒரு கூட்டத்தினர் காசு பறித்து நோகாமல் வயறு வளர்க்கப் போதிய சாதனங்களாகவிருக்கிறது என்கிற முறையில் அது மிகவும் கண்டிக்கத் தக்கதாகவே இருக்கிறது. தற்கால விஞ்ஞான சாஸ்திர ஆராய்ச்சியாளர்கள் எல்லோரும் எந்த நவக்கிரகங்ளின் பலா பலன்களைத்தெரிந்து அவற்றின் மூலமாக உலகுக்கு மிகவும் உபயோகப்படும்படியான சாதனங்களைக் கண்டுபிடித்து உலகுக்கு உதவினார்களென்று தோழர் சி. கே. சுப்பிரமணிய முதலியார் சொல்ல முற்படுவாராவென்று கேட்கின்றோம்.

தவிர, சுயமரியாதைக்காரர்கள் எந்த மகாநாட்டில் எந்தக் கொடியேற்று விழாவில் ராகு காலம் நல்ல நாள் பார்த்து ஆற்றினார்களென்பதையாவது விளக்குவாரா? எந்தச் சோதிட சாஸ்திரம் தேவை எனகின்றாரோ அதே சாஸ்திரம் சொல்லி வந்த ரிஷிக் கூட்டங்களில் சேர்ந்த 'மனோஜயந்து மாண்டவ்ய:" என்ற "மாண்டவ்யர்" என்பவரின், உறுதிமொழியை தோழர் சி. கே. சுப்பிரமணியம் அறியார் போலும், அதாவது நாள்கள் சமயங்களைப் பார்த்துச் செய்யவேண்டிய சந்தர்ப்பங்களைக்காட்டிலும் மனமானது திடப்பட்ட காலத்திலேயே செய்தல் நலமென்று சொல்லிய மாண்டவ்ய மகரிஷியின் வாக்கியங்களைக் கவனித்திருப்பாரேயானால் அவலை நினைத்து உரலை இடித்தற்கொப்பாக சோதிடத்தை நினைத்துச் சுயமரியாதைக்காரரை இடித்தெழுதித்தாக்கி இருக்கமாட்டார், மேலும் இவருக்காவது சோதிட ஆராய்ச்சி இருந்திருக்குமானால் திருஞானசம்பந்தர் பிறந்ததைச்சொல்லும் பெரியபுராணச்செய்யுளின் பிரகாரமும் அதன்கீழ் வரைந்துள்ள பொருளின்பிரகாரமும் யோசித்துபார்த்திருந்தால், அரை குறை சாத்திர ஞானம் கூடாதென எழுதி இருக்கமாட்டாரென நினைக்க வேண்டியிருக்கிறது. எப்படி எனில் திருஞானசம்பந்தர் பிறந்தகாலம் ஒன்பது கிரகங்களும் உச்சம் என்றும் நல்ல லக்கினம் என்றும் நக்ஷத்திரம் திருவாதிரை என்றும் காணப்படுகிறது. ஒன்பது கிரகங்கள், சூரியன் சந்திரன் செவ்வாய், புதன், வியாழன், வெள்ளி, சனி, ராகு, கேது, ஆகும். சூரியன் உச்சம்பெற்றான் என்றால் அவன் உச்சவீடாகிய மேடராசியிலிருக்க வேண்டுமென்பதாகும், அதுபோல் சந்திரன் உச்சம்பெற்றான் என்றால் அவன் இடபராசியிலிருக்க வேண்டும். சந்திரன் 2¼ இரண்டே கால் நக்ஷத்திரத்திற்கு ஒருராசிவீதம் அஸ்வனிநக்ஷத்திரம் முதல்கார்த்திகை கால்பாகம்வரை மேஷராசி கார்த்திகையின் முக்காலும் ரோகணியும் மிருகசீர்ஷம் முன்னரையும் சேரும்வரை சந்திரன் இடபராசியிலிருப்பான். பிறகு மிருகசீர்ஷம் பின்னரையும் திருவாதிரையும், புனர்பூசம் முன்முக்காலும் சேர்ந்து சந்திரன் மிதுன ராசியிலிருப்பான் என்பது சோதிட அரிச்சுவடியின் பாடம். திருவாதிரை நக்ஷத்திரத்தில் திருஞான சம்பந்தர் பிறந்திருப்பாரேயானால் சந்திரனுக்கு உச்சம் எப்படி ஏற்படும்? சந்திரனுக்கு உச்சவீடு ரிஷபராசியாயிற்றே. இப்படி இருக்க கிரகம் 9ல் சந்திரனும் ஒருவனாதம்போது அவனுக்கும் உச்சமெங்கே? சோதிட சாஸ்திர ஆராயச்சியில் அரை குறை சாஸ்திரஞானம கூடாதென்றால் யாருக்குக் கூடாதென்பதுதான் தெரியவில்லை. ஒருக்கால் திருஞான சம்பந்தர் சாத்திரத்தைச் சொன்ன பெரிய புராண கர்த்தாவுக்கா? அல்லது அதை வசனமாக மொழி பெயர்த்த வருக்கா? அல்லது அவைகளைச் சொல்லி திரிகிற சைவப்பெரியார்களில் ஒருவரெனவும் தமிழ் பண்டிதர்களில் ஒருவரெனவும் நடித்துத்திரியும் தோழர் சி. கே. சுப்பரமண்ய முதலியார் பி. ஏ. அவர்களுக்கா? அல்லது சாஸ்திரஞானத்தில் அரை குறை கூடாதென இவரெழுதும் வியாசத்தின் காரணமாக வம்புக்கிழுக்கப்பட்ட சுயமரியாதைக்காரருக்கா? என்பது தான் நமக்குப் புலப்படவில்லை. உலகமானது, கிருஸ்துவர், மகம்மதியர், பத்தர், சமணர் முதலிய பல்வேறு மதத்தையும் இயக்கத்தையும் கொண்ட சமூகங்களை அடக்கிக் கொண்டிருக்கும்போது சோதிடத்தை ஒப்புக்கொள்ளாத சுமார் 100-க்கு 95-க்கு மேல்பட்ட மக்கள் இவ்வுலகப்பரப்பிலிருக்கிறார்கள் என்பதாக ஏற்பட்டிருக்கும் இக்காலத்தில், தன் முயற்சியாலும் தன் நம்பிக்கையாலும் தன்மதிப்பாலும் அனேக நூதன விஷயங்களையும் சாதனங்களையும் விஞ்ஞான சாஸ்திரமூலம் மக்களுக்குப்பயன்படுத்துமாறு கண்டுபிடித்து மக்களுக்கு உதவி வரும் இக்காலத்தில: மதம் மக்களுக்கு அபின் என்று கண்டுகொண்டு அவைகளை உதறித் தள்ளிவரும் இக்காலத்தில், மூடப்பழக்கவழக்கங்களும் ஜாதிசமயங்களும் மக்களுக்கு அடிமைப்புத்தியையும் அறியாமையையும் உண்டாக்கி பாழ்படுத்தி வருகிற தென்றறிந்து அவைகளை வேருடன்களைந்தெறியும் இக்காலத்தில், மாண்டவர்களை எப்படி பிழைப்பிப்பதென ஆராய்ச்சி செய்து அத்துறைகளிலும் வெற்றிகரமான முடிவுகளையும் அநுகூலங்களையும் அடைந்துவரும் இக்காலத்தில், மக்கள் இன்னமும் எப்படி சுகித்துவாரச் செய்யலாம் என்று ரஷ்யாவின் தலைவர் யோசித்துத் திட்டங்களைக் கற்பித்துவரும் இக்காலத்தில், இதைப்பார்த்து அமெரிக்காவின் தலைவர் தட நாட்டு மக்களின் பொருளாதார சங்கடத்தையும் மற்ற வேலையில்லாத சங்கடங்களையும் தொலைத்து சுகவாழ்வு ஏற்படுத்த எந்தெந்த திட்டங்களை உபயோகிக்கலாமென யோசித்துவரும் இக்காலத்தில், இதைப்போன்றே மற்ற நாடுகளில் சிலதுகளும் யோசித்துவரும் இக்காலத்தில், இவ்வித சோதிட சாஸ்திர வீண் ஆராய்ச்சிகளுக்கும், புரட்டுகளுக்கும் இடமேயில்லை என்று இங்கே குறிப்பிட விரும்புகிறோம். நமது தோழர் சி. கே. சுப்ரமணிய முதலியார் பி. எ. அவர்கள் "அரைகுறை சாஸ்திர ஞானம்

கூடா"தென்னும் கட்டுரைமூலம் சுயமரியாதைக்காரர்களைத் தாக்க நினைத்து எழுதியவற்றை ஆராயும்தோறும் அவர் விஷயத்தில் "மணற்சோற்றில் கல்லாராய்வது", போன்ற பாமர விஷயங்கள் காணப்படுமாயின் இவரது ஆங்கில பி. ஏ. பட்டத்துக்கும் தமிழ் புலமைக்கும், சமயப்பற்றிற்கும், சாஸ்திர ஞானத்திற்கும் என்ன மதிப்பேற்படும் என்பது நமக்கு விளங்கவில்லை. ஆயினும் இனிமேலாவது நமது இயக்கத்தவர்களை நமது முதலியாரவர்கள் தோழமை கொண்டு அவர்களிடமிருக்கும் உயர்ந்த தன்மைகளாகிற தன்னலங்கருதாமை, பிறருழைப்பில் வாழாமை மக்கள் நலத்துக்காகவே தங்கள் உடல் பொருள் ஆவிகளைத் தத்தம் செய்துழைத்தல் முதலிய பொதுநலச் சேவைகளையும் தூக்குமேடையிலும் கூட சுயமரியாதைக்காரர்கள் இல்லாதவைகளைச் சொல்லி இவரைப்போல் தற்பெருமைக்கு இச்சிக்கமாட்டார்கள் என்பவைகளையும் உள்ளபடி அறிந்து தமது பட்டம் பதவிகளுக்குத் தகுதியாகவும் சைவர் என்பதற்குத் தகுதியாகவும் தமது மனப்பான்மைகளை மாற்றிக்கொண்டு ஒழுகுவார் என்னும் நம்பிக்கையில் இதைப்பற்றி விரிக்காமல் இத்துடன் விட்டனம்.

---

## தோழர் O. C. சீனிவாசன் மறைவு.

---

கொச்சி ஈழவ சமுதாய வீரரும் பிராமணரல்லாதார் இயக்கத்தின் உயரிய மேம்பாட்டிற்கு ஆரம்பகால முதல் பெரிதும் உழைத்தவரும் சமதர்ம லட்சியத்தில் தீவிர பற்றுடையவருமாகத் திகழ்ந்த சென்னை தோழர் O. C. சீனிவாசன் அவர்கள் 18-1-34-ல் பஸ் விபத்தால் அகோர மரணமடைந்தார் என்ற செய்திகேட்டு பெரிதும் வருந்துகிறோம். தோழர் O. C. சீனிவாசன் அவர்கள் பாழான வர்ணாச்சிரமதர்மத்தையும் அதைப்போன்றதான இன்றைய முதலாளி-தொழிலாளி-பணக்காரன்- ஏழை என்ற கொடுமைகளையும் அறவே அகற்றப் பெரிதும் துணிவோடு தொண்டாற்றிய வாலிப வீரராவர். வாலிப உலகம் ஆண்மை, தியாகம் என்ற இரு குணங்களையும் பின்பற்றுவதற்கு அவர் ஓர் சிறந்த எடுத்துக்காட்டாக விளங்கியவர்.

உதாரணமாகச் சென்ற மூன்று வருஷங்களுக்கு முன்பு கொச்சி சமஸ்தான S. N. D. P. யோகத்தில் தலைமைதாங்கி மதப் பிரசாரத்தையும், உயர்வுதாழ்வுக் கான பொல்லாத வர்ணாச்ரமத்தையும் பற்றி வடநாட்டு பெருத்த பழக்க வைதீகப் பண்டித மதன் மோகனமாளவியா அவர்கள் நெஞ்சில் மானம் ஈனமில்லாது பேசிய காலையில் நமது அருங்குணங்களமைந்த வீரர் ஆண்மையோடு தீப்பொறி பறக்கத் தனது தொப்பியை [Hat] ஐ அவர் முகத்திற்கு நேரே வீசி அவரது பிரச்சாரம் சிறிதும் செல்லுபடியாக விடாமல் மாளவியை உடனே மலையாளநாட்டை விட்டு விரட்டிய பேராற்றல் மிக்கவரில் குறிப்பிடத்தக்க முக்கியஸ்தராவர்.

நாற்பது ஆண்டுகளை நிறைந்த வீர சீனிவாசனை வாலிப உலகம் இழக்கப் பெரிதும் அபருகிறது என்பதில் ஐயமில்லை. அண்மையில் சென்னையில் நடைபெற்ற அகில இந்திய ஆசார சீர்திருத்த மகாநாட்டில் தான், தமிழர்களின் உயரிய வாழ்க்கைக்கு வீரகர்ஜனை செய்து மைலாப்பூர் பாப்பனீயத்திற்குக்குழி தோண்டிப் புதைத்து, தமிழர்களின் ஆண்மைக்கு ஆக்கம் தேடிக் கொடுத்த சீரியராவார். இப்போக்கொத்த நமது தோழர் சீனிவாசன் அவர்கள் மறைவுக்கு வருந்துகிறோமெனினும் இயற்கையின் போக்கை உணர்ந்த நாம் அதன்மூலமே ஆறுதலுறுவதோடு அவரது அருமை மனைவியாரும், குடும்பத்தாரும் ஆறுதல் பெறுமாறும் வேண்டுகின்றோம்.

---

## ஈரோட்டில் சமதர்மப் பிரசாரம்

---

### தோழர்களின் வீரமுழக்கம்.

---

ஈரோடு அலி சவுக்கில் 19-1-34 வெள்ளிக்கிழமை மாலை 6 மணிக்கு சுயமரியாதை வாலிபர் சங்கத்தின் ஆதரவில் மாயூரம் தோழர் சி. நடராஜன் அவர்கள் தலைமையில் ஒரு பொதுக்கூட்டம் நடைபெற்றது. தோழர் ஈ. வி. லெட்சுமணசாமி அவர்கள் சமதர்மக்கீதம் பாடினர். தோழர் எஸ். வி. லிங்கம் அவர்கள் தலைவரைப் பிரேபித்துப்பொதுக்கூட்டத்தின் நோக்கத்தை விளக்கிக் கூறினர். சங்கத் தலைவர் தோழர் டாக்டர் எம். கிருஷ்ணசாமி அவர்கள் தலைவர் பிரேபனையை ஆமோதித்தார். தலைவர்முன்னுரை கூறினர்.

அதன் பிறகுதோழர் அ.பொன்னம்பலம் அவர்கள் "சமதர்மமும்காந்தீயமும்" என்பது பற்றி மிகவிளக்கமாகவும் தெளிவாகவும் பேசினர். தோழர் ப. சீவானந்தம் அவர்கள் "தொழிலாளர்களும் பொதுவுடமையும்" என்பதுபற்றி விரிவுரையாற்றினர். அதுபோது அங்கிருந்தவர்களுக்குப் பொதுவுடமைத் தத்துவங்களையும் அதற்கெதிரிடையான காந்தியின் பிரசாரத்தைப்பற்றியும், மிகத்தெளிவாகப்பேசினர். பின்னர் கீழ்க்கண்ட தீர்மானம் நிறைவேறிற்று.

சுயமரியாதை இயக்கத் தோழரும்; 22 லக்ஷம் ஜனத்தொகை கொண்ட ஈழவர்கள் தங்களுக்கு மதம் வேண்டாமென்று கூறுவதற்குக்காரண பூதராயிருந்த தோழர் ஒ. சி.சீனிவாசன் அவர்கள்அகால கோர மரணமடைந்ததற்கு இக்கூட்டம் மிக வருந்துவதோடு தங்கள் அனுதாபத்தை தோழர் ஒ. சி. சீனிவாசன் மனைவியார் அவர்களுக்குத் தெரிவித்துக் கொள்கிறது.

தலைவர் முடிவுரைக்குப் பிறகு இரவு 9-30 மணிக்கு கூட்டம் இனிது முடிவடைந்தது.

---

## தோழர் கே. எம். இப்ருகீம் விடுதலையானர்.

விவசாயிகளின் பிரச்சினை சம்பந்தமாக கைதியாக்கப்பட்டிருந்த கொச்சி சுயமரியாதைத்தலைவர் தோழர் கே எம். இப்ருகீம் பி. ஏ. பி. எல்., எம். எல். சி. அவர்கள் தனது சகாக்களுடன் விடுதலையாக்கப்பட்டார் என்று கொச்சி சமஸ்தான சர்க்கார் அறிக்கை கூறுகிறது.

## ரீசன் ஆசிரியர் கைதியானர்.

இந்திய பகுத்தறிவுச் சங்கத்தின் [Rationalist Association of India] சார்பாக பம்பாயிலிருந்து பிரசுரிக்கப்பட்டுவந்த ரீசன [Reason] என்ற ஆங்கில மாத சஞ்சிகையின் ஆசிரியர் தோழர் C. L. டிவாய்ன M. D. சமீபத்தில் கைதியாக்கப்பட்டார்.

## தோழர் அ. மாணிக்கம்:

தோழர் அ. பொன்னம்பலம் அவர்களின் தம்பியார், தோழர் அ. மாணிக்கம் அவர்கள் இருமல் நோயால் பீடிக்கப்பட்டு சில மாதங்களாகக் கஷ்டப்பட்டுவந்தார். இதுபோது ஈரோட்டில் தோழர் ஈ. வெ. கிருஷ்ணசாமி அவர்கள் பங்களாவில் தங்கி ஈரோடு டாக்டர் தோழர் எம். கிருஷ்ணசாமி அவர்களிடம் சிகிச்சைபெற்று வருகிறார்.

## தோழர் கிருஷ்ணமூர்த்தி சுயமரியாதை பிரசங்கம்!

—❀—

எர்ணாகுளம் மகாராஜா கல்லூரி ஹாலில் ஜனவரி 13,14ந் தேதிகளில் தோழர் ஜே, கிருஷ்ணமூர்த்தி இரு பிரசங்கங்கள் நிகழ்த்தினர். பல பிரபலஸ்தர்கள் விஜயம் செய்தனர். கூட்டத்திற்கு முன்னதாகவே அவரிடம் கொடுக்கப்பட்ட கேள்விகளுக்கு அவர் பதிலளித்தார். நிகழ்த்திய பிரசங்கமும் கேள்விகளுக்கு சமாதானமும் வருமாறு:—

"வாழ்க்கையெனும் பிரச்சினை

நான் விசேஷமாக தத்துவநூல்களைப் படித்ததில்லை. ஆனால் உலகின் பல பாகங்களையும் சுற்றிப் பார்த்ததில் அங்கங்கே ஜனங்களின் வாழ்க்கையை நான் நன்கு தெரிந்து கொண்டிருக்கிறேன். நான் நேரில்கண்டவற்றை யடிப்படையாகக் கொண்டவை என்னுடைய அபிப்பிராயங்கள். இது பலருக்கு வியப்பையளிக்கக்கூடும். பழைய அபிப்பிராயங்களுக்கு முற்றிலும் மாறுபட்டவையாய் என்னுடைய அபிப்பிராயங்களிருக்கின்றன. உலகில் காணப்படும் சங்கடங்களைக் கண்டு பயந்த ஜனங்கள் உலகத்தில் சமாதானம் கிடைக்குமா என்று பார்க்கிறார்கள். உலகில் ஜனங்களிடையே பிளவையுண்டு பண்ணுவதற்கு மதமே காரணமாக விருக்கிறது. தேசீய உணர்ச்சி எனப்படுவதும் மனித சமூகத்தில் பிளவையே ஏற்படுத்துகிறது

ஆலயங்கள், மசூதிகள், கோவில்கள் முதலிய வற்றில் எனக்கு நம்பிக்கையில்லை. அவற்றின் மூலம் வாழ்க்கையை சந்தோஷமாகவும் திருப்தியுடனும் நடத்த இயலுவதில்லை. ஒவ்வொரு மதத்தினரிடையேயும் ஆயிரக்கணக்கான கோவில்களிருக்கக் காண்கின்றோம். இவற்றின் மூலம் ஒருவிதமான நன்மையும் ஏற்படவில்லை. குறுகியநோக்கங்களையும் பிடிவாதமான மூட நம்பிக்கைகளையும் விட்டு மனிதர் உண்மையை ஆராய்ந்துகொள்ள வேண்டும்.

தேசீய உணர்ச்சி என்பது தேற்றைய விஷயம். ஒவ்வொரு தேசத்தினரும் இவ்வுணர்ச்சியைக் கொள்ளுவதால் உலக ஒற்றுமைக்குப் பங்கம் தான் ஏற்படுகிறது. சுயராஜ்யம் கிடைத்து விட்டால் தன்னுடைய பொருளாதாரப் பிரச்சினைகளும் வேலையில்லாத் திண்டாட்டமும் தீர்ந்து விடுமென்று இந்தியா நம்புகிறது. இங்கிலாந்தும் ஜெர்மனியும் சுயாட்சியடைந்த நாடுகளாயிருந்து [illegible] ந்தக் காரியங்களைச் சாதித்து [illegible] டனவென்பதை நா[illegible] வேண்டும்.

நான் கூறுகின்ற வ[illegible] ட்டு நீங்கள் ஆராய்ச்சி செ[illegible] ங்கள். ஏற்றுக்கொள்[illegible]

(9-ம் பக்கத்தொடர்ச்சி)

பகிஷ்கரிக்கவேண்டும் என்று ஓர் தீர்மானம் செய்தபோது அபிப்பிராயபேதப்பட்டவர்கள் காங்கிரசை விட்டு விலகி வெளியே வந்து வேறு பல கட்சிகளை ஏற்படுத்திக்கொண்டு சட்டசபைகளுக்குச் சென்று பதவிகளை வகிக்க முற்பட்டு பதவி கிடைத்ததும் ஏழை மக்களின் நன்மைகளை அவர்கள் மறந்து விட்டார்கள் என்பதே என்று கூறிவிட்டு, தாம் கூறிய வற்றிற்கு, ஆதாரமாக சில ஹைகோர்ட்டு தீர்ப்புகளை எடுத்து உதாரணங்கள் கொடுத்தார். மற்றும் பத்திரிகைகளுக்குச் சில சுதந்திரங்கள் இருக்கின்றனவென்பதையும், மக்களின் அறிவு பல வழிகளிலும் விசாலமாய்க்கொண்டுவரும் இக்காலத்தில், இந்தியாவிற்கு இன்னும் பல சீர்திருத்தங்களைக் கொடுக்கவேண்டுமென்று பெரிய நிபுணர்கள் யாவரும் கூறிக்கொண்டிருக்கும் இக்காலத்தில் வரப்போகும் சீர்திருத்தத் தேர்தல்களில் ஏழைகள் பால் நன்மைகொண்டு உழைக்கும்படியானவர்களை சட்டசபைகளுக்கு அனுப்பவேண்டும் என்ற நோக்கத்துடனேயே ஷை வியாசத்தில் முக்கியமாக எழுதப்பட்டிருக்கிறதேயொழிய வேறு எந்த விதமான துவேஷத்தையும் மனதில்கூட ஷை பத்திராதிபர் நினைத்திருக்கவில்லையென்பதாகவும் எலக்ஷன்களில் எல்லாம் அநேகமாக பணக்காரர்கள் அபேக்ஷகர்களாக நின்று வெற்றி பெறுகிறார்களேயொழிய ஏழை மக்கள் சட்டசபைக்குச் செல்ல பாத்தியமில்லாமல் இருக்கிறது என்றே கூறியிருப்பதாகவும் கூறிவிட்டு தமது வாதத்தை முடித்துக்கொண்டார்.

முதல்எதிரி தோழர் ஈ. வெ. ராமசாமிக்காக ஜரான வக்கீல் தோழர் நஞ்சுண்டைய்யா தமது வாதத்தில், வியாசத்தில் ராஜத்துவேஷமான விஷயங்கள் சிறிதேனும் கிடையாதென்றும், சட்டசபைகளைக் கைப்பறறவேண்டும் என்ற நோக்கத்துடனேயே தான் எழுதப்பட்டதாகவும் கூறி பல ஆதாரங்களை எடுத்துக்காட்டினார். வக்கீல்களின் வாதங்கள் முடிவுற்றன.

வழக்கு இம்மாதம் 20 தேதி மீண்டும் விசாரணைக்கு எடுத்துக்கொண்டபொழுது குற்றம் சாட்டப்பட்டிருப்பதாகக் கலெக்டர் அறிவித்துள்ளார். மறுபடியும் வழக்கு 22 தேதிக்கு வாய்தாப் போடப்பட்டிருக்கிறது.

---

வற்றை மாத்திரம் நீங்கள் ஒப்புக்கொள்ளுங்கள். ஒரு கட்டுப்பாடும் இல்லாதிருந்தால் தான் அறிவு விருத்தியடையும். பொதுவாக ஜனங்கள் பண மோகம் பிடித்துத் திரிவதை நாம் பார்க்கிறோம். பணம் வாழ்க்கையில் பிரதான லக்ஷியமல்ல. என்னை ஸினிமாவில் நடிக்கும் படி சிலர் அழைத்து அதற்குப் பணம் தருவதாகவும் சொன்னார்கள். நான் அவர்களுடைய வலையில் விழாதிருந்தது பற்றி மகிழ்கிறேன். ஜனங்கள் ஒருவரை யொருவர் பறிப்பது போது. இதுவே என்னுடைய

# மாகாண மகாநாடும் நமது திட்டமும்.

தோழர் காந்தியவர்கள் தமிழ் நாட்டில் மதப்பிரசாரம் செய்ப திக் விஜயம் செய்துகொண்டிருக்கும் காலை நாம் ஆழ்ந்த நித்திரையிலிருக்கிறோம். நமக்குள்ளே அபிப்பிராய பேதங்கள் மலிந்து கிடப்பதாலும், நமது கொள்கை என்ன? திட்டம் என்ன என்று இன்னும் முடிவாக வறையறுத்து ஒரு முகமாக வேலை செய்ய முடியாமலிருப்பதுடன், தோழர் ராமநாதன் அவர்கள் சமதர்மத்திட்டத்தில் சட்டசபைப்பிரவேசத்தை எதிர்ப்பதும், தோழர் சிங்காரவேலு அவர்கள் கர்ப்பத்தடை கூடாதென்றும், நிர்வாண இயக்கத்தைக் கண்டித்தும், இன்னும் நம் இயக்கத்தால் பெரியவர்களான சில பணம் படைத்த தோழர்கள் சமதர்மம் என்ற வார்த்தையைக் கேட்டாலோ எடுக்கிறார்கள் காதவழி. இந்நிலையில் நாம் என்ன செய்வது? உடனே மாகாண மகாநாட்டைக் கூட்டுவிக்க முயற்சிக்கவேண்டும். ஜில்லாவுக்கு ஒரு குறிப்பிட்ட தொகையை வசூல் செய்து மாயவரம் தோழர் நடராஜன் அவர்கள் வசம் ஒப்புவித்து அவரை மகாநாட்டிற்கு வேண்டிய வேலைகளை ஆரம்பிக்கச் செய்யவும், அவருடன் எல்லாத் தோழர்களும் ஒத்துழைத்து மகாநாட்டைச் சிறப்பாக நடத்தி நமது திட்டம், கொள்கை, இன்னதென்று முடிவாக வரையறுத்து விடுவதுடன், அம்மகாநாட்டிலேயே சென்னையிலிருந்து தோழர் ராமநாதன் அவர்களை ஆசிரியராய் கொண்டு ஒரு தமிழ் தினசரி சிறிய அளவிலாவது நடத்துவதற்கு பங்கு 1க்கு ரூ. 10 வீதம் 2000 பங்குகள் சேர்த்து தினசரி ஒன்று ஆரம்பிக்க ஏற்பாடு செய்யவேண்டியதுடன் நமது அருமை தலைவர் நம்மிடை இல்லாத காலத்து நம் இயக்கத்தை முன்னிலும் பன்மடங்கு சிறப்பாக நடத்திச்செல்ல வேண்டியது ஒவ்வொருவருடைய கடமை ஆதலின மதுரை தோழர் ப. வ. விநாயக மூர்த்தி அறிவிக்கிறார்.

## காலண்டர்கள் வரப்பெற்றோம்.

கீழ்கண்டவர்களிடமிருந்து 1934 வருஷத்திற்கான காலண்டர்கள் வந்தனத்துடன் வரப்பெற்றோம்.

இம்பீரியல் பிரஸ்
மாயவரம்.

சிவலிங்க விலாஸ்புக்டிப்போ
ஈரோடு.
ஓரியண்டல் போட்டகிராபிக் ஹவுஸ்
& ஆனந்தாபிரஸ் ஈரோடு.
A. & F. ஹார்ஸ் மில்ஸ் மதுரை.



5-1-34ல் காலஞ்சென்ற பிரபல கண்டிராக்டர் ஜோலார் பேட்டை தோழர் வரதராஜலு முதலியார்.

# கோவிற்பட்டி தாலூகா முதலாவது சுயமரியாதை மகாநாடு.

27, 28—1—34 சனி, ஞாயிறன்று கீழ ஈராலில் நடைபெறும்,

மகாநாட்டுத்திறப்பாளர்:—
திருச்சி தோழர் எஸ். நீலாவதி அவர்கள்.

மகாநாட்டுத்தலைவர்:—
புதுக்கோட்டை தோழர்
முத்துசாமிவல்லத்தரசு அவர்கள் B. A. B. L., M. L. C.

வரவேற்புத்தலைவர்:—
தோழர் வேல், வெள்ளச்சாமி அவர்கள்

தொண்டர்படைத் தலைவர்:—
T. M. மணி அவர்கள் B. A.

இன்னும் தோழர்களான தேவகோட்டை வழக்கறிஞர் லட்சுமிரதன்பாரதி எம். ஏ. பி. எல்., திருச்சி கி. ஆ. பெ. விஸ்வநாதம், திருச்சி ராமசுப்பிரமணியம், ப. ஜீவானந்தம், அ. பொன்னம்பலம் ஆகியவர்கள் தவறாது விஜயம் செய்வார்கள்.

வெளியூர்களிலிருந்து மகாநாட்டிற்கு வரும் பெண்களுக்கு ஜாகை சாப்பாட்டுடன் இலவசம். மகாநாட்டில் கீதங்கள் பலரால் பாடப்பெறும்.

எம். தானியேல்,
விளம்பர அதிகாரி.

வேல். எஸ். சின்னசாமி,
கரு. நா. தெ. முத்தையா,
காரியதரிசிகள்.

# சென்னை மாகாண முதலாவது நாஸ்திகர் மகாநாட்டு வரவு செலவு கணக்கு விபரம்.

1933-ஷு டிசம்பர்-மீ 31-உ ஞாயிற்றுக்கிழமை சென்னை தோழர் எம். சிங்காரவேலு பி. ஏ. பி. எல். அவர்கள் தலைமையில் சென்னையில் நடைபெற்ற சென்னைமாகாண முதலாவது நாஸ்திகர் மகாநாட்டு வரவு செலவு கணக்கு விபரம் வருமாறு:—

## வரவு விபரம்.

| | | | |
|---|---|---|---|
| மகாநாட்டு ஹாலில் டிக்கெட்டுகள் வித்த வரவு | 32 | 8 | 0 |
| சென்னை அரசாங்க கனம் மந்திரி அவர்கள் | 15 | 0 | 0 |
| தோழர்கள்:— மதுரை A. A. ஆறுமுகம் அவர்கள் முனிசிபல் கவுன்சிலர் [மண்டி] | 10 | 0 | 0 |
| விருதுநகர் ராவ்சாகேப் M. S. P. S. செந்தில் குமாரர் அவர்கள் (மண்டி) | 10 | 0 | 0 |
| திண்டுக்கல் M. S. P. சோலையா அவர்கள் முனிசிபல் சேர்மன் | 10 | 0 | 0 |
| தெம்மாப்பட்டு மு. கணபதி அவர்கள் | 10 | 0 | 0 |
| புதுக்கோட்டை K, முத்துசாமிவல்லத்தரசு B.A.,B L. அவர்கள் | 10 | 0 | 0 |
| ஈரோடு, டாக்டர். M. கிருஷ்ணசாமி அவர்கள் (சுயமரியாதை வாலிப சங்கத் தலைவர்] | 8 | 0 | 0 |
| தூத்துக்குடி A. N. வேங்கடசாமி அவர்கள் | 5 | 0 | 0 |
| ஈரோடு S. ராமசாமி அவர்கள் [மண்டி] | 5 | 0 | 0 |
| மதுரை S. V. ராமலிங்கம் அவர்கள் [மண்டி] | 5 | 0 | 0 |
| ,, S. V. P. N. S. தங்கமணி அவர்கள் [மண்டி] | 5 | 0 | 0 |
| விருதுநகர் கூ. பொ. மகாலிங்கம் அவர்கள் [முனிசிபல் கவுன்சிலர்] | 5 | 0 | 0 |
| தெம்மாப்பட்டு மரு. வீர. கோவிந்தசாமி அவர்கள் (வைக்கம் வீரர் வாசகசாலை) | 5 | 0 | 0 |
| கோட்டாறு சு. சண்முகம் அவர்கள் | 5 | 0 | 0 |
| ,, அ, சரவணை ,, | 5 | 0 | 0 |
| ,, பூ. திரவியம் ,, [சுயமரியாதை வாசிப்பு சாலையார்] | 5 | 0 | 0 |
| ஜோலார்பேட்டை V, பார்த்தசாரதி அவர்கள் (சுயமரியாதைச் சங்கம்) | 5 | 0 | 0 |
| புதுக்கோட்டை அண்ணாமலை அவர்கள் | 5 | 0 | 0 |
| பரங்கிமலை C. D. நாயகம் ,, | 5 | 0 | 0 |
| புதுப்பாளையம் P. R. குப்புச்சாமி அவர்கள் (சமதர்ம வாசக சாலையார்) | 5 | 0 | 0 |
| சென்னை ஜார்ஜ் டவுன். T. P: வீராச்சாமி அவர்கள் | 5 | 0 | 0 |
| திருவாரூர் T. N. ராமையா ,, | 5 | 0 | 0 |
| சென்னை T. M. பார்த்தசாரதி ,, | 4 | 0 | 0 |
| தெம்மாப்பட்டு அ. சோமசுந்தரம் ,, | 3 | 0 | 0 |
| திருப்பத்தூர் நா. பள்ளிகொண்டான் ,, பாரதி மெடிக்கல் ஹால் | 3 | 0 | 0 |
| சென்னை பண்டிட் S. S, ஆனந்தம் அவர்கள் தமிழ் மெடிக்கல் ஹால் | 3 | 0 | 0 |
| சென்னை தமிழ் பண்டிதர் வி. ராமசாமி அவர்கள் (ஆனந்தபோதினி உதவி ஆசிரியர்) | 3 | 0 | 0 |
| மாம்பலம் சுப. அருணகிரி-சுந்தரி அவர்கள் | 3 | 0 | 0 |
| மதுரை A. வேணுகோபால்-சுக்கினி ,, (சுயமரியாதைச் சங்க காரியதரிசிகள்) | 2 | 8 | 0 |
| தஞ்சாவூர் T. A. ஏகாம்பரம் அவர்கள் [சுயமரியாதைச் சங்கக் காரியதரிசி] | 2 | 8 | 0 |
| மதுரை ப. வ. விநாயகமூர்த்தி அவர்கள் [மண்டி] | 2 | 0 | 0 |
| ஆக ரூ. | 206 | 8 | 0 |

## செலவு விபரம்.

| | | | |
|---|---|---|---|
| வெளியூர் உள்ளூர் வசூல் பிரயாணவகை செலவு | 44 | 7 | 6 |
| பிரசாரகர்களின் சாப்பாடு சிற்றுண்டி வகை செலவு | 42 | 6 | 0 |
| பிரசாரகர்களின் ரயில்கட்டணம் சில்லரை செலவு | 27 | 1 | 6 |
| பிரசாரக வகை செலவுக்காக காரியதரிசி வசம் | 25 | 0 | 0 |
| மகாநாட்டு ஹால் வாடகை, விளம்பரம், நீதிவாக்கியப் படங்கள், இதர சில்லரை செலவு | 19 | 13 | 0 |
| தபால் ஸ்டாம்பு வகை செலவு | 18 | 1 | 0 |
| கவர், கார்டு, டிக்கெட், லெட்டர்பேப்பர், விளம்பர நோட்டீஸ்கள வகை அச்சாபீஸ் செலவு | 17 | 14 | 0 |
| டவுன் வசூல் மோட்டார்காருக்கு பெட்ரோல் வகை செலவு | 11 | 13 | 0 |
| ஆக ரூ. | 206 | 8 | 0 |

இம்மகாநாட்டுக்குப் பொருளுதவி செய்த தோழர்களுக்கும் சங்கத்தார்களுக்கும் மகிழ்ச்சியுடன் எங்கள் நன்றியைத் தெரிவித்துக் கொள்ளுகின்றோம்.

இங்ஙனம்,

டி. எஸ். சுப்பிரமணியம்,
போக்கிஷதார்.

அ. பொன்னம்பலம்,
ப. சீவானந்தம்,
மகாநாட்டுக் காரியதரிசிகள்

20—1—34,
சென்னை.

[8-ம்பக்கத்தொடர்ச்சி]

மோசடியும், பித்தலாட்டமும் 'சர்வசக்தன்' பேரால் பொங்கிப் பெருக்கெடுத்து வருகின்றன. தெய்வீக அற்புதமென்னும்பேரால்திருட்டுத்தனம் அபிவிருத்தியடைந்து வருகிறது. 'கடவுள்' நமது நாட்டு மககளின் மனத்தை சர்வநாசஞ்செய்து விட்டார். நாஸ்திகர்களும், நாஸ்திக நாடும், கடவுள் நம்பிக்கையை ஒழித்து விட்டமையால் ஒன்றும் குடிமுழுகிப் போகவில்லையென்பதை எடுத்துக்காட்ட இது தக்கசமயமன்றோ? கடவுளைப்பிடித்துத் தொங்கிக் கொண்டிருந்தும் மற்ற தேசங்களைவிட நாஸ்திக தேசம் (ரஷ்யா) சந்தோஷமாகவும் சமாதானமாகவும் இன்பவாழ்வு நடத்துகின்றதென்பதை அறிவிக்க இது தக்க காலமன்றோ?

'கடவுள்' நமது துதினசரி வாழ்க்கையில் மிதமிஞ்சிக்கலந்து விட்டார். பாசாங்குக்காரர்களும்பித்தலாட்டக்காரர்களும் கடவுளுணர்ச்சியைத்தங்களுக்குச்சாதகமாக்கிக்கொள்வதில் ஆச்சரியப்படுவதற்கில்லை. மோசக்காரர்களிடமிருந்து விடுதலை பெறுவதினும் 'கடவுளி'டமிருந்து விடுதலை பெறுவது சுலபம். 2500 ஆண்டுகளுக்கு முன் புத்தன்கூறியதைப்போன்றும், இன்று ரஷ்யா காட்டுவதைப்போன்றும், 'கடவுளுணர்ச்சி'யிலிருந்து வெளிப்பட்டாலொழிய மனித சமூகத்திற்குக் கரையேற்றமில்லை.

## சென்னையில் தமிழ்திருநாள்.

சென்னை பச்சையப்பன் மண்டபத்தில் "தமிழ்தின" கொண்டாட்டம் சென்னை கல்வி மந்திரி கனம் குமாரசாமி ரெட்டியார் தலைமையில் சிறப்பாக நடைபெற்றது. அதுசமயம் தோழர்கள் சி. நமச்சிவாய முதலியார், டி. வி. கல்யாண சுந்தர முதலியார், ஆர். வி. சேதுபிள்ளை, குருசாமி, சிதம்பரம், மாசிலாமணி முதலியார், அலமேலு, மலைத்தாயம்மாள், பி. மீனாக்ஷிசுந்தரம் பிள்ளை, மணிகோட்டீஸ்வரன் முதலியவர்கள் "தமிழ்தினத்தை" பற்றிப் பேசினார்கள். தலைவர் முடிவுரைக்குப பின் தோழர் டி. வி. சுப்பிரமணியம் வந்தனோபசாரம் கூறிய பின் கூட்டம் இனிது கலைந்தது.

இக் கொண்டாட்டம் பல முக்கியமான விடங்களில் கொண்டாடப்பட்டதாகத் தெரிகிறது.

## கொழும்பு சுற்றுப்பிரயாணம்.

திண்டுக்கல் பிரபல இரும்பு வியாபாரியான தோழர் கா. த. ஓ. சோமசுந்திரம் அவர்கள் குமாரரான தோழர் முத்துக் கருப்பன் அவர்கள் 30-12-33ல் தூத்துக்குடி மார்க்கமாய் கொளும்புபோய் யாழ்ப்பாணம் கண்டி நாரலிய காலி மாத்திரை முதலிய ஊர்களைப் பார்த்து விட்டு 11-1-34ல் தனுஸ்கோடி மார்க்கமாய் திண்டுக்கல் வந்து சுகமே சேர்ந்தார். (ஒரு நிருபர்)

# தமிழன்பர் மகாநாடு.

சென்ற டிசம்பர் மாத இறுதியில் சென்னையில் பல மகாநாடுகள் நடைபெற்றன. அவைகளுள் முக்கியமானது தமிழன்பர் மகாநாடாகும்.

சென்னைக் கல்வித்துறை அமைச்சர் திவான்பகதூர் எஸ். குமாரசாமி (ரெட்டியார்) அம்மகா நாட்டிற்குத் தலைமை வகிப்பாரென முன்னரே அறிவிக்கப் பட்டிருந்ததற் கேற்ப, சாம்பிரதாயத்தை யொட்டி அவருடைய பெயர் பிரேரேபிக்கப்பட்டு ஆமோதிக்கப் பெற்றது. இப்பிரேரணையை ஆட்சேபித்து தோழர் டி. எம். பார்த்தசாரதி பேச ஆரம்பித்தார்.

உடனே சிலர் கிளப்பி அவரை உட்காரும்படி கூறினர். ஆயினும் தாம் கூற முன்வந்த விஷயங்களைக் கூறத்தான் வேண்டுமென தோழர் பாரத்தசாரதி வற்புறுத்தினர். பிறகு அவரைப்பேச அனுமதித்தனர். அவரை ஆதரித்துப் பேசிய தோழர் எஸ் குருசாமி, தாம் மகாநாட்டாருக்கு ஏற்கெனவே அனுப்பியிருந்த நகல் தீர்மானங்கள், அவர்கள் வெளியிட்டிருக்கும் தீர்மானத்தொகுதியில் காணப்படவில்லை யென்றும், மகாநாட்டார் நடவடிக்கைகள் பெரிதும் ஐயப்படத்தக்கனவா யிருக்கின்றன வென்றும், அத்தீர்மானங்களைத் தருவித்துப் பரிசிலனை செய்யத்தலைவர் இசைந்தால், அவர் மகாநாட்டில் தலைமை வகிப்பதில் தமக்கு ஆக்ஷேபனையில்லை யென்றும், விஷயாலோசனைக் கமிட்டியில் தங்களுக்கும் ஸ்தானங்கள் இருக்க வேண்டுமென்றும் கோறினர். தோழர் ரெட்டியார் இவைகளுக்கிணங்கி, தலைமை வகித்தார். இதனிடையில் மகாநாட்டு மண்டபத்தை யலங்கரிக்க போலீசார் ஆங்காங்கே காணப்பட்டனர். உடனே தோழர் டி. வி. சுப்பிரமணியம் எழுந்து இம்மகாநாட்டில் போலீசாருக்கு வேலையே கிடையாதென்றும், அவர்களை மண்டபத்துள் அனுமதித்தது தலைவரை அவமதிப்பதாகுமென்றும் கூறினர். பின்னர் மண்டபத்தைவிட்டு போலீஸார் வெளியேறினர். பிரசங்கங்களும் வாழ்த்துக்களும் படிந்தான பிறகு மகாநாடு இடைவேளை போஜனத்திறகுக் கலைந்தது.

இருதரத்தாரையும் தலைவர் தருவித்து கட்சி ஒன்றுக்கு 7 பிரதிநிதிகள் விகிதம் சேர்ந்த ஒரு விஷயாலோசனைக் கமிட்டியமைத்தார். அங்கே நிறைவேற்ய தீர்மானங்களை மறு நாள் மகாநாட்டில் முறையே பிரரேபித்து நிறைவேற்றனர். அவை வருமாறு:—

1. நவீன சாஸ்திர நூல்கள் தமிழில் எழுதப்பட்டுப் பளளிக்கூடங்களில் தமிழிலேயே கற்பிக்கபபட வேண்டும்.

2. பொதுக் கலாசாலைகளில் படிப்பதற்காக வரையப்படும் தமிழ் நூல்கள், வழக்கத்திலுள்ள எளிய தெளிய நடையுள்ளதாக இருக்க வேண்டும்.

3. தமிழில் தக்கபதங்கள் இல்லாத இடத்து வழக்கத்திலுள்ள பதங்களை உபயோகித்தல் உசிதம்.

4. பழந்தமிழ் நூல்கள் தகுந்த சிரத்தையுடன் படிக்கப்படவேண்டும் அதில் ஊக்கம்பெற ஏற்பாடுகள் செய்யவேண்டும்.

5. தற்காலத்துப் பள்ளிச்சிறுவர்களுக்கு ஏற்ற முறையில் பழந்தமிழ் நூல்களைத் தொகுத்தும், திரட்டியும் வெளியிட வேண்டும.

6. தமிழில் பல பொருள் விளக்க நூல் ஒன்று தயாரிக்கப்பட வேண்டும்.

7. பள்ளிச் சிறுவர்களுக்காக ஏற்படுத்தப்படும் புத்தகங்களில் நல்ல சித்திரப்படங்கள் இருத்தல் வேண்டும். கல்வி போதிப்பதற்கான கருவிகள் உபயோகப்பட வேண்டும்.

8. ஜாதி வேற்றுமைகளை உண்டு பண்ணக்கூடிய நூல்களைப்பள்ளிக்கூடங்களிலிருந்து ஒதுக்கிவைக்க வேண்டும்.

9. தமிழ் உயர்தனிச் சிறப்புடைத்தென்பதை உணரும்படி செய்வதற்கான முறைகளைக் கையாளவேண்டும். சர்க்கார் தமிழ்ப் பரிக்ஷைக்கு பிராதன்யம் அளிக்க வேண்டும். தமிழாசிரியர்களை மற்ற ஆசிரியர்களின் அந்தஸ்தில் வைக்கவேண்டும்.

10. ஸ்தல ஸ்தாபனக்கூட்ட நடவடிக்கைகள் தமிழிலேயே நடத்தப்படுவது உசிதம்.

11. கீர்த்தனங்கள் எழுதுதற்குத் தமிழும் தகுந்தபாஷை யாதலால் சங்கீதக் கச்சேரிகளில் பெரும்பான்மையான பாடல்கள் தமிழிலேயே பாடப்படவேண்டும் அவ்வாறு செய்வதால் தமிழ்க் கீர்த்தனாசாரியார்களுக்கு ஊக்கமேற்படும்.

12. தமிழ் நாட்டில் வழங்கும் கதைகளையும், நாட்டுப் பாடல்களையும் திரட்டி ஒரு புத்தகமாக வெளியிட வேண்டுவது அவசியம்

13. எஸ். எஸ். எல். ஸி வரையிலாவது எல்லாப்பாடங்களையும் (ஆங்கிலந்தவிர) கட்டாயமாகவே தமிழில் கற்றுக்கொடுத்துப் பரிக்ஷிக்கவேண்டும்.

14. தமிழ் ஜில்லாக்களிலுள்ள எல்லாக் கிராமங்களிலும் புத்தகாலயங்கள் ஏற்படுத்த வேண்டும். ஸ்தல ஸ்தாபனங்கள் இதுவிஷயமாய உதவி புரியவேண்டும்.

15. தமிழ் நெடுங்கணக்கிலுள்ள 216 எழுத்துக்களில் பல எழுத்துக்கள் உபயோக மற்றவையாயும், அச்சுக் கோர்ப்பவர்களுக்கு வீண் சிரமத்தை உண்டுபண்ணு பவையாகவுமிருக்கின்றன. மேலும் சில சப்தங்களுக்குசசரியான எழுத்துக்களுமில்லை யாதலால் வேண்டாத எழுததுகளை நீக்கி, வேண்டிய எழுத்துக்களைச்சேர்க்க வேண்டும். இவ்விஷயத்தைப் பற்றி ஆலோசனை செய்து ரிப்போர்ட்டு செய்வதற்காக தோழர்கள், வி. கலியாணசுந்தர முதலியார், கா. சுப்பிரமணிய பிள்ளை ஆகியோரை அங்கத்தினராகவும், தோழர் பி. என். அப்புசாமி ஐயரைக் கன்வீனராகவும் கொண்ட ஒரு கமிட்டியை அமைக்க வேண்டும்.

இம்மகாநாட்டைக் கூட்டுவித்தோர் தம் கருத்து என்ன? அவர்கள் கருத்து எவ்வளவு தூரம் நிறைவேறிற்று? அதனால் நாட்டிற்கு விளைந்த பயன் என்ன? ஆகிய சில வினாக்களை ஆராய்வது பொருத்தமாகும்.

1937-ஆம் ஆண்டு முதல் பள்ளிக்கூட பாடபுத்தகங்கள் அனைத்தும் தாய் மொழியிலேயே புகட்டப்பட வேண்டுமென்னும் கொள்கையைச் சர்க்கார் ஒப்புககொண்டு விடுவார்கள் என்னும் உண்மையை யுணர்ந்த ஒரு சிலர், தமிழுக்கு வருங்காலத்தில் வரும் பெருமையால் ஏற்படும் செல்வாக்கைத் தாங்கள் அடைய எண்ணி புத்தகாலய சங்கத்தின் பெயரால் ஒரு மகாநாடு கூட்டி, அங்கே ஒரு சங்கத்தை நிறுவி, அதில் ஒரு கமிட்டி ஏற்படுத்தி, தாங்கள் சர்க்காரிடம் இதர துறைகளில் கொண்டுள்ள செல்வாக்கைப் பயன்படுத்தி, தங்கள் அங்கீகாரம் பெற்ற புத்தகங்களையே பள்ளிக்கூடங்களில் உபயோகிக்க வேண்டு என்பதே அவர்களது உட்கருத்து என விளங்குகிறது. 'ஐந்து காத ஆழந்தோண்டித் தமிழைப்புதைப்பேன்' எனக்கூறிய ஒரு 'கனவான்' இப்போது தமிழ் அன்பர் ஆனால், இதை எப்படி நம்புவது? தமிழ்த்துறையில் சிறந்த அறிஞர்கள் பலர் தத்தமக்கேற்ற வகையில் சிறந்த தொண்டாற்றிக் கொண்டிருக்க, புதிய சங்கம் நிறுவ வேண்டிய அவசியம் என்ன ஏற்பட்டது? தமிழறிஞர் பலர் நம் நாட்டிலிருந்து சூத்திரபாவைகள் போன்ற ஒரு சில தமிழர்களைக்கொண்டு மகாநாட்டார் கமிட்டியை நிறுவியதின் நோக்கந்தானென்ன? அன்றியும் தங்கள் நோக்கம் பலிககாது போகவே, தாங்கள் நிறுவக் கருதியிருந்த சஙகத்தை, விஷயாலோசனைக் கமிட்டியில நிறுவவெண்டுமென முடிவு கட்டியிருந்தும், மகாநாட்டில் இந்தப்பிரச்சினையையே எடுத்துக்கொளளாத விட்டுவிட்டனர். இவை யனைத்தையும் உற்று நோக்கினல், மகாநாட்டார் மீது பலர் கொண்ட சந்தேகம் நியாயமானது என்னும் முடிவிற்குத்தான் வரவேண்டியிருககிறது

நிற்க, இம்மகாநாட்டை முன்னிட்டுப் பெருந்தொகைள வசூலிக்கப் பட்டதாக மகாநாட்டில் அறிவிக்கப் பட்டது. மகாநாட்டு வரவு செலவுக்கணக்கைக் கூடிய விரைவில் பத்திரிகைகளில் பிரசுரிப்பதாக மகாநாட்டார் வாக்குறுதி யளித்தனரேனும், இன்னும் அது வெளிவந்ததாகத் தெரியவில்லை. பொதுஜனங்கள் இவ்வெளியீட்டை ஆவலுடன் எதிர்பார்ப்பது பொருத்த முடையதல்லவா?

இம் மகாநாட்டில் நிறைவேறியிருக்கும் தீர்மானங்களில் பெரும்பான்மையும் சிறந்தவை; அமுலில் கொண்டுவந்து நடத்தினுல் நாட்டிற்கு நன்மை பயக்கத்தக்கவை. பல கலைகள் தமிழ் மொழியில் பரவ நூல்கள் இயற்ற வேண்டுமென்றும், சாதி வேற்றுமைகளைப் புகட்டும் பாடங்களைப் பள்ளிக்கூடங்களில் பாடங்களாக வைக்கக் கூடாதென்றும் தீர்மானித்திருப்பது மிகப்போற்றத் தக்கதாகும்.

இரண்டாம் நாள் மகாநாட்டிற்கு விஜயம்செய்த கனவான்களைப் போலீஸார், முன்னிலையில் வாசலிலேயே ஒரு வெள்ளைக் காயிதத்தில் கையெழுத்திட்டு உட்செல்ல வேண்டுமென வற்புறுத்தியது பெரிதும் கண்டிக்கத் தக்கதாகும்.

உண்மை விவரங்கள் மேற்கூறியவாறிருக்க, "ஆனந்த விகடன்" அவைகளை மறைத்து எழுதியது அப்பத்திரிகையின் போலிப் போக்கை உணர்த்துகிறதென்பதை நாம் இங்கே குறிப்பிடத்தான் வேண்டி இருக்கிறது.

இம்மகாநாட்டில் நிறைவேறிய தீர்மானங்களை நடவடிக்கையில் கொண்டுவர ஒரு சங்கம் அமைக்காது விட்ட குறையைச் சீக்கிரம் சென்னையில் நடைபெற விருக்கும் தமிழர் மகாநாடு நிறைவேறி நாட்டிற்கு நன்மை செய்யுமென்று எதிர்பார்க்கிறோம். ("தமிழரசு")

## புதுப்பாளையம் சமதர்மவாசகசாலை.

14-1-34 ஞாயிற்றுக்கிழமை மாலை 3மணிக்கு தோழர் எ, முத்துகிருஷ்ணன் அவர்கள் தலைமையில் வாசகசாலையின் வாராந்தரக்கூட்டம் நடைபெற்றது. "கடவுளும் கர்மமும்" என்பது பற்றி தோழர்களான வி. தங்கவேலு, எம். நாராயணசாமி, ஏ. சுந்தரமூர்த்தி, ஆர்- வெங்கிட கிருஷ்ணன், ஆர். சீதாராமன், கு. ஆறுமுகஆசசாரி, பி. ஆர் குப்புசாமி முதலியவர்கள் சொற்பொழிவாற்றினர்கள். தலைவரால் கடவுள் என்ற கற்பனை சொல்லை கர்மத்திற்கு ஆதாரம் என்றும், கர்மத்தினலேயே மக்களபொருளையும், பகுத்தறிவையும், இழந்து விடுகிறுர்களென்றும் இதனல் கடவுளையும் கோவிலையும் ஒழித்தாலன்றி மக்கள் முன்னேற முடியாது. என்றும முடிவுரைகூற வந்தனோபசாரத்துடன் கூட்டம் இரவு 7-30 மணிககு இனிது கலைந்தது என்று காரியதரிசி எழுதுகிறார்.

# 'மதம் அழியவேண்டும்.'

(சென்னை தோழர் கே. எஸ். நாதன்)

தோழர்களே!

மதம் மக்களுக்குத் தீமையையும், கஷ்டத்தையுமன்றி எவ்விதமான நன்மையையும் விளைவித்ததில்லை. மக்களது சுக சௌகரியங்கட்கும், இன்பமயமான ஜீவிதத்திற்கும் மதம் முட்டுக்கட்டையாகவே இருந்து வருகின்றது. இதைத்தவிர மதம் மக்களுக்கு ஏதாவது நன்மைசெய்ததுண்டா? நமது பிரயாணங்கட்கும், வியாபார போக்கு வரத்திற்கும் இன்றியமையாகவுள்ள கப்பல், ரயில் வண்டி முதலிய வாகனங்களைக்கண்டு பிடிப்பதிலும் அவைகளை உண்டாக்குவதிலும் மதத்திற்கு பங்கு இருக்கின்றதா? தந்தியில்லாதந்தி, விமானம் டெலிபோன் முதலியவைகள் உபயோகத்தை மதம் மக்களுக்கு கற்பித்திருக்கின்றதா? ஆனால் எதிரிடையாக மதம் இப்படிப்பட்ட ஆராய்ச்சியாளர்களுக்கெல்லாம் முரண்பாடாகவே இருந்து வருகின்றது. கப்பலில் பிரயாணம் செய்யக்கூடாதெனவும், அப்படி செய்தவர்களுக்கு 'தீட்டு' ஏற்படுத்த வேண்டுமெனவும் மதம் கூறவில்லையா? இங்கிலாந்தின் இன்றைய முதன் மந்திரி ராம்சேமாக்டெனல்டு விமானத்தில் தமது சொந்த ஊரிற்குத்திருப்பிச் சென்றதினுல் அங்கு புரோகிதர்களும், மத பக்தர்களும் பெருங்கூட்டங்கள் கூட்டி கதறின காலத்தை நீங்கள் நினைக்கின்றீர்களா? உலக முன்னேற்றத்திற்குரிய விஞ்ஞானம்கண்டு பிடித்தங்கள் அனைத்தையும் நமக்கு உபயோகத்திற்குரியவைகளாகச் செய்தது விஞ்ஞானமா? இம் மத பக்தர்களா? மனிதனுக்கு இன்றியமையாதாகவுள்ள எப்பொருளையும் மதம் இன்றைய நாள் வரையில் செய்ததே இல்லை. இவற்றைப் போன்றத் தன்மையினுலேயே உலகப்பிரசித்தி பெற்ற சர். சி. வி. இராமன் விஞ்ஞான நூற்தவிர மற்று எந்நூலாயினும்சரி அவற்றை சுட்டு சாம்பலாக்க வேண்டுமென்கிறுர். போகட்டும் மதம் மக்களுக்கு நோய், வறுமை, கஷ்டம் முதலியவற்றினை தீர்பதற்கு யோக்கியதை யுடைத்தாயிருக்கின்றதா? எந்த நோயாளியை மதம் காப்பாற்றியிருக்கின்றது? பசியுடன் அலறும் எந்த மனிதனுக்கேனும் மதம் உணவளித்திருக்கின்றதா? ஒருவனுடைய பசிக்கொடுமையேனும் தீர்ந்திருக்கின்றதா? குஷ்டம், பைத்தியம், வாந்தி பேதி, அம்மை முதலியன பயங்கரநோய்களைப் போக்க மதம் ஏதாவது செய்திருக்கின்றதா? மனிதர்களுக்குள் ஏற்பட்டு வரும் கொடிய யுத்தங்களையும், கணக்கற்ற சண்டைசச்சரவு, கொலை களவுகளையும் மதம் உண்டாகமலிருக்க என்ன செய்திருக்கின்றது? ஆனலோ மனிதசமூகத்தை முற்றிலும் துன்பத்திற்கு ஆளாக்க வலவா மதத்தினுடைய ஆதிக்கத்தை செலுத்தி யிருக்கின்றது. மதம் எத்தனை தத்துவ சாஸ்திரர்களையும், ஆராய்ச்சி அறிஞர்களையும் தீக்கிரையாக்கிஇருக்கின்றது.! கலீலியோ, புருனோ, வால்டயர், சாக்ரடீஸ் முதலின அறிஞர்கள் என்ன குற்றம் செய்ததற்காக அவர்கள் 'பகுத்தறிவு' இரத்தத்தையும் குடித்திருக்கின்றது? புத்தியையும் சிந்தனை சுதந்திரத்துடனும் ஆலோசித்து செய்யும் எல்லா நற்காரியங்களையும் மதம் அன்றும, இன்றும், என்றும் தமது முழுச்சக்திபொருந்தின வலிமையுடன் எதிர்த்து வந்ததாகவே நாம் அறிகிறோம.

மதம் ஒழிந்தால் சன்மார்க்கம் தொலைந்து, மனித சமூகம் அழிந்து விடுமென ஒரு சிலர் கூக்குரலிடுகின்றனர். இது அறிவு பொருந்தினமனிதத்தன்மையையுடைய எவருக்கும் தோன்ருது. ஆனலோ சுயநலத்தன்மை மிகுந்த ஒரு சிலருக்கே இவ் வாதம் தோன்றும். இன்றைய மதத்தைக்காப்பாற்றவே அரசாங்கத்தின் சட்ட திட்டங்களும் அமைக்கப் பட்டுள்ளது. மனிதனுக்கு மத நம்பிக்கை எவ்வளவு தூரம் அதிகரித்துக்கொண்டே வருகின்றதோ, அவ்வளவும் மனிதசமூகம் பின்னடைந்துக்கொண்டு வருவதைநாம் பிரத்தியட்சமாக அறிந்துள்ளோம். மத பக்தி மிகுந்த மக்கள் உண்மையாக மனித வாழ்க்கை தொண்டிற்கே பிரயோஜன மற்றவர்களாய் விட்டனர். இன்றைய ஒவ்வொரு ஜயிலிலும் அடைத்துள்ள குற்றவாளிகளில் பெருபான்மையோரும் மத நம்பிகை உடையவர்களாகவே காணப்படுகின்றார்கள். இந்தியாவைப் போல் மத நம்பிக்கை மிகுந்த தேசம் வேறு எத்தேசமுமில்லை. இவ்வளவு மத நம்பிக்கையும், ஆத்மீக சக்தியும் பொருந்தின இந்தியர்கள பிற நாட்டார்களை விட வாழ்க்கையிலும், ஆரோக்யத்திலும், கல்வியிலும் எவ்வகையிலும் மிகவும் பின்னடைந்தவர்களாகவே இருக்க காண்கிறோம் நாம் இன்றைக்கு ஏதேனும் நாகரீகங்களில் ஈடுபட்டிருப்பின் அது சிறிது மதநம்பிக்கை அழிந்து விட்டதே காரணம் என்பதில்ஐயமில்லை. இதைக்கண்டே இன்றைய புரோகிதவர்க்கத்தினர் கதறுகின்றனர்.

மூடநம்பிக்கையில் ஆழ்ந்து கிடக்கும் மதநம்பிக்கை ஒழிந்தாலன்றி இந்தியா ஒரு நாளும் முற்போக்கடையாது. இன்றைய ஜாதி, மத, சமூக வேற்றுமைகளும், அர்த்த மற்ற அனுகரீக பழக்க வழக்கங்களும் ஒழிந்து சாவ சகோதர சயதத்துவம், பரிபூர்ண சுதந்திரம் காந்திஜீ கனவு கண்ட இந்து முஸ்லீம் ஒற்றுமை நிலை பெறவேண்டுமானுல், மாறுபட்ட கொள்கைகளையும் அபிப்பிராய வேற்றுமைகளின் மீதும் கட்டுப் பட்டுள்ள 'மதம்' இடிந்து விழுதல் வேண்டும். இதையே இந்தியா அரசியல் தலைவரும், பண்டித ஜவஹர்லால் சிலசமயங்களில் பொதுவாகக் கூறுகின்றார்.

இதுவேநமது அடிப்படையானநோக்கமென நமது சுமரியாதை இயக்கத் தலைவர். தோழர். ஈ. வெ. இராமசாமியும் கூறுகின்றார். சனதனத்துவத்தை நம்பியுள்ள ஹிந்துவிற்கு மற்ற ஹிந்துக்கள் அனைவர்களும் மிலேச்சவர்களேயாவர். மதநம்பிக்கையுள்ள மகம்மதியனுக்கு மற்றவர்களெல்லாம் காபிர்களேயாவர். மத நம்பிக்கையுள்ள கிறிஸ்துவர்களுக்கோ. மற்றவரனைவரும் பாபிகளேயாவர். இம்முறையில் மதப்பற்றுடைய புரோகித வர்க்கத்தினர் தங்கள்—தங்கள் மதம் உயரியதென பறைசாற்றி மனிதனுக்கு. மனிதன் தாழ்ந்தோன் உயர்ந்தோன் என்னும் சண்டை சச்சரவுகளையும், மனிதனது அறிவைக் கெடுத்தும் வருகின்றது. எந்த மத நூலை ஆராய்ந்து பார்ப்பினும் அவைகளெல்லாம் பகுத்தறிவிற்குப் பொருந்தாத முறையில் ஒரு சாரரால்ஏற்படுத்தினவைகளாகவே புலப்படுகின்றன. அவைகள் எம் முறையிலும் விஞ்ஞானத்திற்கு முரண்பட்டதாகவும், ஆராய்ச்சி அனுபவங்களுக்கு பொருந்தாததாகவும், நாகரீகத்திற்கு எதிராகவும் காணப்படுகின்றன. ஆனுல் இவைகளினுல் உலக மக்களை ஏமாற்றி தங்கள் வாழ்நாட்களை நடத்தும் ஒரு சிறு கூட்டத்தினராகிய 'புரோகித' வர்க்கத்திற்கே நன்மை பயப்பவைகளாக அமைக்கப் பட்டுள்ளன.

ஆதலால் அன்புமிக்க தோழர்களே! நாம் முன்னேற்றத்திற்கு படும் ஒவ்வொரு துறையிலும் மதம் முட்டுக்கட்டையாகவே நிற்கின்றது. இந்நிலைமையிலிருக்கும் மதத்தை உங்களது பகுத்தறிவின் வன்மையால், ஆராய்ச்சி அனுபோக ஞானச் சுடரினுல் அழிக்கவேண்டிய காலம் நெருங்கிவிட்டது! இளைஞர் உலகம் இதை ஆவலுடன் எதிர்நோக்குகின்றது. இவ்வேலைக்கு பெரிய-பெரிய உத்தியோக—மேதாவிபதவிகள் பெற்றவர்களும்! ஒரு சிலருக்கே நல்லபிள்ளைகளாக நடப்பவர்களும் முன்வர மாட்டார்கள். ஆனுல் இளைஞர்களாகியநாம் முன் வரதயங்கக்கூடாது நமது உழைப்பின் மத்தியில் பற்பல விதத்தில் இடையூறுகளும், தீங்குகளும் நேரிடலாம். ஆனுல் இவைகளையெல்லாம் பொருட்படுத்தாமல் நமது வேலைத்திட்டத்தையே பின் தொடர்ந்துக்கொண்டே போவோமாயின் நாம்வெற்றிபெறுவோம். நாம் சமூக சண்டைகளுக்கோ, மதகூச்சரவுகளுக்கோ இறங்கவில்லை. சமூக, மதவேற்றுமைகள் அடியோடு ஒழிப்பதற்க்காகவே கச்சைகட்டி நிற்கின்றோம். இவ்விஷயங்களில் நாம் தனிப்பட்ட ஒரு சமூகத்தின்மீதோ, அல்லது மதத்தின்மீதோ குறை கூறுவதற்கில்லை. நமக்கு சரிஎன்று தோன்றுவதை நாம் வெட்டவெளிச் சமாக்குகின்றோம். அதற்காக உழைக்கின்றோம். இதற்கு எந்த மகாத்மாவானுலும்—மகானுனுலும் சரி—தவருக நடப்பின் தவறுதலைக்கண்டித்துதான் தீருவோம். ஆனுல் விஷயங்களின் போக்கைப்பார்த்தும் நாம் வழி தப்பினவர்களாகக்கூடாது. நமக்கு ஜாதி ஹிந்துக்கள் என்பவர்களிடத்திலோ; எவ்விதமான வெறுப்புமகிடையாது. நாம் எவருடனும் அன்புடன் நடக்கவும். அவசியமெனத் தோன்றின் கொள்கை வேறுபாடினுல் எதிர்க்கவும் கடமைப்பட்டுள்ளோம். நமது அபிப்பிராயங்கள் அறிவு. ஆராய்ச்சியை அடிப்படையாகக் கொண்டவைகளாகும். நமக்கு மதம் அவசியமில்லை. நாம் மதமற்ற மனிதன் என்ற முறையில் பகுத்தறிவாளர்களாக வாழ ஆசைப் படுகிறோம். இந்நோக்கத்திற்கு ஒத்துழைக்க ஆசைப்படும் எத்தேசத்தினர்களையும்எம்மக்களையும் நாங்கள் அறைகூவி அழைக்கின்றோம். இதை மிகவும் ஆதரவுடன் வரவேற்கும், மக்கள் நாட்டில் மிகுந்து வருகின்றனர். தமது கொள்கைக்காகவேபுன் சிரிப்புடன் மரண தண்டனைக்குட்பட்ட பகுத்தறிவாளிகளின் சரித்திரங்கள் நமக்கு புதுணர்ச்சியை கொடுக்க வில்லையா? அவர்களுடைய கொள்கைகளை நம்மக்களிடத்தில் பரப்பவேண்டாமா? அனுபவத்திற்கும், ஆராய்ச்சிக்கும் முரண்பாடான கொள்கைகளை தகர்த்தெறிய வேண்டும் என்ற மனப்பான்மை நம்மனதில்உண்டாக்க வேண்டாமா? மனித சமூகத்தை அறியாமையில் அடிமைப்படுத்திஉயிர்இரத்தத்தைக்கொள்ளை கொண்ட மதத்தை அழிக்க பகுத்தறிவுடைய இளைஞர்களே! எழுமின்! விழுமின்!! செய்மின!!!

(சகோதரன்) கொச்சி.

## சுயமரியாதைச் சங்கம் பொன்மலை

16-1-34 மாலை சங்க கட்டித்தில் சங்க அங்கத்தினர் கூட்டம் தோழர் கோவிந்தசாமி அவர்கள் தலைமையில் நடைபெற்றது.

அது சமயம் தோழர்கள் ஜீ. ராதா மரிய ஜோசை அப்பாச்சாமி எம். ராதா கிருஷ்ணன், ஈஸ்வரன் முதலியவர்கள் சமதர்ம கீதம் பாடிய பின் தோழர் பீ. பொன்னுச்சாமி சுயமரியாதை இயக்கம் என்பது பற்றி நீண்ட நேரம் சொற்பொழிவு ஆற்றிய பின் தோழர்கள் எம். கே, லாவா டி. கன்னேஜி, அப்பாசாமி, ஈஸ்வரன் முதலியவர்கள் முறையே காந்தியாரின் சூழ்ச்சி நமது இயக்கள் கிறிஸ்த மதம் வாலிபர் கடமை என்பது பற்றி பே

சிஞர்கள் தீர்மானம் நிறைவேறப்பட்டது.

### தீர்மானம்

நாட்டின் முற்போக்குக்கு பெரிதும் பாதகம் விளைவித்து வரும் காந்தீயம் காங்கிரஸ் என்பவைதலை ஒழிக்க பாடுபடுவரும் ஏழைகளான கஷ்டபடும் மக்களின் நலத்திற்காக பெரிதும் போருடும் நமது இயக்கத் தலைவர் தோழர் ஈ. வெ. ராமசாமி அவர்களை கைதுசெய்ததற்காக இக் கூட்டம் வருதுகிறது பிரேரபித்தவர் ஆர். நடராஜன் ஆமோதித்தவர் எம் ஓ. காத்தான் ஆதரித்தவர் ஜி ராதா் தலைவர் முடிவுரைக்கு பின் இரவு 8மணிக்கு இனிது கலைக்கப்பெற்றது. என ஷை சங்கக் காரிக்தரிசி எழுதகிருர்.

---

## சீர்திருத்த வாசகாலயம் விழுப்புரம்.

ஷை வாசகாலயத்திற்கு நிர்வாகிகளைத் தேர்ந்தெடுப்பதின் பொருட்டு 12-1-34 இரவு 7மணிக்கு என். பி. சிவகடாக்ஷம அவர்கள் இல்லத்தில் தோழர் ஜி ஆதிமூலம் அவர்கள் தலைமையின் கீழ் பொதுக் கூட்டம் ஒன்று நடைபெற்றது. அவ்வமயம் அங்கத்தினரும் ஏனையோரும் குறித்த காலத்தில் விஷயம் செய்தது குறிப்பிடத்தக்கது தலைவர் முன்னுரையாக பேசிய பின் போர்டு ஸ்கூல் ஹெட்மாஸ்டர் தோழர் கே. பாலசுப்பிரமணியம் அவர்கள் முற்கால தற்கால கல்வியின் சிறப்பைப் பற்றியும் வாசகாலயத்தால் ஏற்படும் நன்மையைப் பற்றியும் சொற்பொழிவு நிகழ்த்திஞர் தோழர் என். பி. சிவசங்கரனர் வாசகாலயததை நடத்தும் வழிகளையும் அதற்கு வேண்டிய சட்டதிட்டங்களையும் சொற்பொழிவு நிகழ்த்திஞர். பின்னர் கீழ்கண்ட தோழர்களை வாசகாலயத்தில் நிர்வாகிகளாகத் தேர்ந்தெடுக்கப்பட்டனர்.

தலைவர்:— என். பி. சிவகடாக்ஷம்

உபத்தலைவர்:— கே. கண்ணாயிரம்

பொது காரியதரிசி:— என். பி. சிவசங்கரன்

உதவி காரியதரிசிகள்:— ஜி ஆதிமூலம்.

" :— ஆர். சேஷையா

கணக்கு பரிசோதகர்:— கே. பாலசுப்ரமணியம்

பொக்கிஷதார்:— வி. ராஜகோபால்

தலைவர் முடிவுரையின் பின் தோழர் ஜி. ஆதிமூலம் அவர்கள் வந்தனோபசாரம் கூற கூட்டம் இரவு 9-30 மணிக்கு இனிது முடிவுற்றது. உன ஷை சங்கக் காரியதரிசி எழுதுகிறா.

---

## சூலூரில் சுயமரியாதைப் பிரசாரம்.

சூலூரில் சந்தைப்பேட்டை மைதானத்தில் 13-1-34 சனிக்கிழமை மாலை 3-மணிக்கு திருச்சி தோழர் எஸ் நீலாவதி அவர்கள் தலைமையில் ஓர் பொதுக் கூட்டம் நடைபெற்றது. இக் கூட்டத்திற்கு கோவை திருப்பூர், இருகூர், ஒண்டிப்புதூர் முதலிய வெளியூர்களிலிருந்தும் உள்ளூரிலிருந்தும ஆண்களும் பெண்களுமாகச் சுமார் 1500-க்கு மேலாக வந்திருந்தார்கள். அவற்றுள் முக்கியமானவர்கள் வருமாறு

தோழர்கள் எம். சின்னசாமி, ஏ. எம். ஷரீப், முருகன், ஆர். வாசுதேவ், கே. ஆறுமுகம், சின்னக்குட்டி, சி. கே. ஆறுமுகம், சின்னப்பாவு, ஆர். எஸ். மணியம், மருதாசலம், கே. லக்ஷ்மன், எல். சங்கர், எம் தருமர், ப. கிருஷ்ணதாஸ், ராயப்பன், என். புருஷோத்தமன், இருதயம், நஞ்சையன், சுப்பையன், ராமசாமி, வி. எம். வெங்கிடாசலம், முத்துசாமி, கருப்பணன், சென்னிமலை, சூலூர் எஸ். கே. ராமசாமி, சி. வி. ராமசாமி, எஸ். எல். எஸ். மணியம், எம். கே. நஞ்சப்பன். எஸ். கே. கருப்பணன், எஸ். டி. திருமூர்த்தி, ஆறுமுகம், கே. கிருஷ்ணன், எஸ். டி. சம்பந்தம், எஸ். பி. கருப்பணன், கந்தசாமி, கணபதி, எஸ். வி. ராமு, எஸ். பி. ஆறுமுகம், அப்பாச்சி ஜோசியர், எஸ். ஏ. முத்து, பாகவத நாயக்கர், பொன்னுசாமி, சி. கே. சுப்பபிள்ளை, எஸ். டி. வடிவேலு, டாக்டர் அப்பாஜி, ராமனுதபுரம் மணியம், சுப்பிரமணயம், ராமகிருஷ்ணன், சிவசாமி கோயமுத்தூர், இருகூர், மருதாசலம், மணியம், ஈ. பி. வெங்கிடாசலம், நாச்சிமுத்து, நஞ்சையா, சுப்பையன், கருப்பணன், ஆர். எல். நஞ்சப்பன், லக்ஷ்மணன், ராமசாமி, மருதாசலம், கோவிந்தன், ஆர். எஸ். ராமசாமி, கோவை ஆர். கிஷன், ஆர். சுந்தரம் அம்மாள், ஆர். லோகனுதன், ரங்கராஜ், அ. நல்லமுத்தம்மாள், சுந்திரராஜம்மாள், சுப்பம்மாள், காளியம்மாள், நஞ்சம்மாள், கருப்பம்மாள், வள்ளியம்மாள், சூழந்தையம்மாள், முத்தம்மாள், வேலுமணி, தாயம்மாள், பழனிகுஞ்சிதாய், நாகம்மாள் முதலியவர்களாவார்கள்.

சுயமரியாதை இயக்கத்தோழர்களை மேள வாத்தியங்களுடன் மோட்டாரில் முக்கிய வீதிகளில் ஊர்வலமாக பொதுக்கூட்ட மைதான இடத்திற்கு அழைத்து வந்தார்கள்.

தோழர்கள் எஸ். ஏ. மாணிக்கம் ப. ஜீவானந்தம் ஆகியவர்கள சமதர்ம கீதங்கள் பாடினர்கள்.

தலைவர் அவர்கள் முனனுரையாக நமது இயக்கக்கொள்கைகளைப்பற்றி விளக்கிப் பேசினர். அதன் பிறகு தோழர்கள் அ. பொன்னம்பலம், ராமசுப்பிரமணியம், ராமசுந்தரம் அம்மாள், ப ஜீவானந்தம் "சமதர்மம்—நாஸ்திகம்" என்பதுபற்றி விரிவுரை நிகழ்த்தினர்கள். தோழர் ப. ஜீவானந்தம் அவர்கள் பேசும் போது சில தோழர்கள் சில சந்தேகங்களைக் கேட்டார்கள். அதற்கு தக்க பதில் கூறப்பட்டது.

அதுசமயம் கூட்டத்தில் நிறைவேற்றப்பட்ட தீர்மானங்கள் வருமாறு:—

### தீர்மானங்கள்.

1. கடந்த நவம்பர் மாதத்தில் ஈரோட்டில் நடைபெற்ற கோவை ஜில்லா சுயமரியாதை மகாநாட்டில் நிறைவேறிய தீர்மானங்களை சூலூர் வாசிகளின் இம் மாபெரும் பொதுக் கூட்டம் மனப் பூர்வமாக ஆதரிப்பதோடு பொதுமக்களிடையே சமதியக்கக் கொள்கைகளைப் பரப்புவதற்கு வேண்டிய தீவிர முயற்சிகளை ஒவ்வொரு சுயமரியாதை இயக்கத் தோழரும் தீவிர முயற்சி எடுத்துக்கொள்ளவேண்டுமென்று கேட்டுக்கொள்ளுகிறது.

பிரேரபித்தவர்:-

தோழர் எஸ், ஏ. மாணிக்கம்.

ஆமோதித்தவர்:-தோழர் ஆர். கிஷன்

2. ஹரிஜன இயக்கம் என்பதின் பேரால் மாண்டுபட்ட மதங்களையும் குறிப்பாக ஹிந்துமதத்தையும் வருணாஸ்ரம, சனுதன தர்மத்தையும் காப்பாற்றுவதற்காக தோழர் காந்தியவர்கள் பிரசாரம்செய்து வருவதை சூலூர்வாசிகளின் இப் பொதுக் கூட்டம் வன்மையாய்க் கண்டிப்பதோடு சுய உணர்வுள்ள தோழர்கள் ஒவ்வொருவரும் அவரது வருகையைப் பகிஷ்கரிக்கவேண்டுமென்றும் கேட்டுக்கொள்கிறது.

பிரே:- தோழர் கே. கிருஷ்ணன்

ஆமோ:- தோழர் ப. ஜீவானந்தம்

தலைவர் முடிவுரையாக பெண்கள் நிலைமையைக் குறித்தும் நமது இயக்க எதிர்கால வேலையைக் குறித்தும் மிகதெளிவாகப் பேசினர்கள். தோழர் எஸ். ஏ. மாணிக்கம் அவர்களால் நன்றி கூறப்பட்டு இரவு 8-30 மணிக்குக் கூட்டம் இனிது முடிந்தது.

---

## கோவையில் சுயமரியாதைப் பிரசாரம்.

கோவை சுயமரியாதைச் சங்க ஆதரவில் கோவை டவுன்ஹால் மைதானத்தில் தோழர் அ. பொன்னம்பலம் அவர்கள் தலைமையில் ஓர் பொதுக்கூட்டம் 12-1-34 ௳ சனிக்கிழமை மாலை 5-30 மணிக்கு நடைபெற்றது. கூட்டத்திற்குப் பெருந்திரளான மக்கள் குழுமியிருந்தார்கள். அதுசமயம் தோழர் ப. ஜீவானந்தம் அவர்கள் "காந்திஜியின் விஷயம்" "பொது உடமையின் தத்துவம்" என்பதுபற்றி சொற்பொழிவாற்றினர். தலைவுரை முடிவுக்குப் பின் இரவு 8-30 மணிக்குக் கூட்டம் இனிது கலைந்தது

### இரண்டாவது கூட்டம்.

15-1-34 திங்கட்கிழமை மாலை 6-மணிக்கு கோவை சுக்கிரவாரப் பேட்டை மைதானத்தில் சுயமரியாதைச் சங்க ஆதரவில் ஓர் பொதுக் கூட்டம் நடைபெற்றது. அதுசமயம் தோழர்கள் அ. பொன்னம்பலம், எஸ். நீலாவதி, ஏ. ஆர். அன்னபூரணி, ப. ஜீவானந்தம் ஆகியவர்கள் "சமதர்மத் தத்துவம்" "பெண்களும் பொதுவுடைமையும்" என்பதுபற்றி நீண்டநேரம் விரிவுரையாற்றினர்கள். தலைவர் முடிவுரையுடன் இரவு 9-30 மணிக்குக் கூட்டம் இனிது முடிந்தது.

---

## ஜமீன்தாரல்லாதார் வாலிபர்சங்கம்.

காஞ்சிதாலூக்கா 76 நெ. திம்மசமுத்திரம் சேரியில் ஜமீன்தாரல்லாதார் வாலிபர் சங்கத்தின் ஆதரவின் கீழ் ஜமீன்தாரல்லாதார் பொதுக் கூட்டம் நடைபெற்றது. கூட்டத்திற்கு காஞ்சி தோழர் சமதர்மநாஸ்திக சி. கே. குப்புசாமி அவர்கள் தலைமை வகித்து முன்னுரையாக செங்கல்பட்டு ஜில்லாவில் முன்னதாக மழை பெய்யாததால் பயிர்களெல்லாம் சாவியாய் விட்டதென்றும் அதனுல் குடி மக்களுக்கு பெருங்கஷ்ட நஷ்டம் ஏற்பட்டிருக்கின்ற தென்றும் குடி மக்களின் கஷ்ட நஷ்டங்களை கவனியாது ஜமீன்தார்களாலும் ஜமீன் இஜாராதாரர்களும், கிஸ்தி வசூல் விஷயத்தில் குடி மக்களை மிககொடுமை படுத்துகிருர்களென்றும் குடி மக்களின் கஷ்ட நஷ்டங்களைப்பற்றி கவர்ன்மெண்டாரவர்களுக்கு அடிக்கடி எழுதி அனுப்பவேண்டுமென்றுபேசியதோடு சில தீர்மானங்களும்ஏகமனதாக நிறைவேறியது. (ஒரு நிருபர்)

---

(6-ம் பக்கத்தொடர்ச்சி.)

சில குரங்குமனிதருடைய எலும்புகள் பல அகப்பட்டன. அவ்வெலும்புகளை உடைத்தால் இருந்த உருவங்களுக்கு ஸினன்திரோபஸ் (Sinunthropus) என்று பெயரிட்டிருக்கின்ருர்கள். அதாவது சீனதேசத்து ஆதிமனிதர்கள், ஆங்கு சுடப்பட்ட எலும்புகளில் பெண்ணின் எலும்பும் கலந்து இருப்பதைக்கண்டு அந்தகாலத்தில் அக்கால குரங்குமனிதர், ஆணும், பெண்ணும் கூடிய சமுசாரங்களை நடத்திவந்திருப்பதாக யூகிக்கலாம். அந்த பூர்வகால சமுசார வாழ்க்கையிலிருந்து நமது குடும்ப வாழ்க்கையும் (Our Family dips) பெறப்பட்டிருக்க வேண்டும். இந்த சாதாரண ஆணுக்கும், பெண்ணுக்கும் உரியவாழ்க்கையில், காலதேச வர்த்தமான மாறுதல்களால், சில நன்மையான பழக்கங்களும் புடைசூழ்ந்து வந்தன. இதனை இன்னொரு முறையில் பிரித்துரைக்கலாம்.

(5-பக்கத் தொடர்ச்சி)

மாக, சிறுவர்கள் வேலை செய்வதை நாம் பார்க்கலாம். மத ராஸ்ராஜதானியில் ஐந்துவயது குழந்தைகள் கூட வெளியில் போவதற்கு ஸ்வாதீனமில்லாமல் தினம் 10 அல்லது 11 மணிநேரம் வேலைசெய்கின்றனர். மேலும் இந்த குழந்தைகளின் பெற்றோர்கள் முதலாளிகளிடம் கடன் வாங்கியிருப்பதாகத்தெரியவருகிறது. இக் காரணத்தால் குழந்தைகளை சரிவர நடத்தாமலிருந்த போதிலும் குழந்தைகளை அடித்தாலும் பெற்றோர்கள் பேசுவதற்கே இடமில்லை என்று சொல்லப்படுகிறது.

கம்பளம் நெய்வது மிர்சபூரில் நடக்கின்றது இங்கு குழந்தைகள் வேலை செய்கிறார்கள் இந்த வேலையைமண்டிபோட்டுக்கொண்டுதான் செய்ய வேண்டியிருக்கிறது. இந்த குழந்தைகளை நேராக தொழிற்சாலைக்காரர் கூலிக்கு வைத்துக்கொள்வதில்லை. கம்பளம் நெய்யும் மாஸ்டர் இக் குழந்தைகளை வேலைக்கு அழைத்து வருகிறான். அவன் குழந்தைகளின்பெற்றோர்களுக்குப்பணம் கடன் கொடுத்து குழந்தையை தகப்பனிடமிருந்து மாதம் 7ரூபாய்க்கோ, 8ரூபாய்க்கோ வாடகைக்கு பேசி ஒப்பந்தத்தில் கையெழுத்துப் போட்டு கூட்டிக்கொண்டு வருகிறான். குழந்தைகள் 6வயதிலிருந்து வேலை செய்கின்றன, மேலும் இக் குழந்தைகள் எவ்வளவு மணி நேரங்கள் வேண்டுமானாலும் வேலை செய்ய வேண்டியதுதான். மேலும் இக் குழந்தைகளை அடிப்பது உண்டு, கவர்ன்மெண்டார் 1923ம் ஆண்டிலேயே இதைப் பற்றி விசாரித்து ஒன்பது வயதுக்குக் குறைந்த குழந்தைகளை வேலைக்கு வைத்திருப்பது சரியல்லவென்று தொழிற்சாலை முதலாளிகளிடம ஒப்பந்தம் ஏற்படுத்த முயன்றனர். ஆனால் குழந்தைகளை வேலைக்கு கூட்டிவரும் மாஸ்டர்கள் இதை ஒப்புக்கொள்ள தயாராகவில்லை. பீடி தொழிற்சாலைகளைப்போல் இங்கும் குழந்தைகளின் நன்மைக்காக சட்டமேற்படுத்த வேண்டுமென்று தோன்றுறது.

தோல் பதனிடும் தொழிற்சாலைகள் பட்டிணங்களிலும், சில பட்டினங்களுக்கு வெளியேயும் ஸ்தாபிக்கப் பட்டிருக்கின்றன. தோல் பதனிடுவது மிகவும் அசுசியான வேலையாதலால் உயர்ந்த ஜாதி மக்கள் அனேகமாக இந்த வேலையை செய்வதில்லை பெரும்பாலும் தாழ்த்தப்பட்ட ஜாதியோரே இந்த வேலையைச் செய்து ஜீவனம் செய்கின்றனர். ஒவ்வொருதோல் பதனிடும் தொழிற்சாலையிலும் பொறுக்க முடியாத துர் நாற்றத்திற்கிடையே தொழிலாளிகள் வேலை செய்வதை விட்லிகமிட்டியார் கண்டனர். சாதாரண தரையில் உட்கார்ந்து கொண்டு துர் நாற்றம் வீசும் தண்ணீர் நான்குபுறமும் தேங்கிக்கிடக்க தொழிலாளிகள் வேலை செய்கின்றனர். இந்த துர்நாற்றத்திற்கிடையே தான் அவர்கள் கொண்டுவந்திருக்கும் சொற்ப ஆகாரத்தை புசிக்க வேண்டும் அலம்புவதற்கு சல வசதியும் கக்கூஸ் வசதியும் முற்றும் கிடையாது. சுமார் தினம் 12 மணிநேரங்கள் வேலையுண்டு குழந்தைகளும் பெண்களும் கூட இந்த துர் நாற்றத்தில் வேலை செய்கின்றனர். பெரியவர்கள் போல இவர்கள்தினம் 12மணிநேரம் வேலை செய்ய வேண்டியது தான். தாழ்ந்த ஜாதியில் பிறந்ததாலும் தொன்று தொட்டு வந்த பழக்கங்களின் கொடூரத்தாலும் இவர்கள் படும் கஷ்டம் மிகவும் வருந்தத்தக்கது.

இத்தகைய தொழிற்சாலைகளை சட்டத்திற்குட்படுத்துவது கொஞ்சம் கஷ்டமான காரியம் தானென்று விட்லி கமிட்டியார் ஒப்புக்கொள்கிறார்கள். ஆனால் பெரும்பாலும் இச் சிறிய தொழிற்சாலைகளில் கஷ்டப்படுபவர்கள் சிறுகுழந்தைகள். இத் தொழில்களில் பல இதுகாறும் ஒரு சட்டத்திற்குட்படாமலிருந்த போதிலும், சாதாரண முனிசிபல் சட்டங்கள் கூட இவர்கள் மீது பிரயோகப்படுத்தப்படாமலிருப்பதால் குழந்தைகளின் க்ஷேமத்தைக்குறித்து சட்டமேற்படுத்தப் படவேண்டும். ஆனால் இச்சட்டங்கள் ஏற்படுத்தப்பட்டால் முதலாளிகள் இவ்வேலைகளை தொழிலாளிகள் வீட்டிலேயே செய்ய ஏற்பாடு செய்ய தொடங்குவர் என்பதில் சந்தேகமில்லை. ஒரு தொழிற்சாலையை இரண்டாக பிரிப்பது சகஜம் தான். ஆனால் சட்டங்களின் வரம்புக்குள் வராமல் பல ஏற்பாடுகள் செய்யப்பட்ட போதிலும் சட்ட மிருப்பதே ஒரு பொது ஜன மனப்பான்மையென்றாவது தெரியரும்.

தொழிற்சாலை சட்டங்களைப்பலர் உபயோகப்படுத்த தொழிற்சாலைகள் மீது பிரயோகம் செய்வது சற்று முடியாதகாரியம். மேலும் குழந்தைகளை இரண்டு தொழிற்சாலைகளில் வேலை செய்யச்சொல்லி சட்டத்தை திருட்டுத் தனமாக பெற்றோர்கள் மீறுவார்கள் என்பது திண்ணம். ஆகையால்விட்லிகமிட்டியார் ஐம்பது பேருக்குமேல்வேலைசெய்யும்தொழிற்சாலைகளுக்காக ஓர் புதியசட்டம் ஏற்படுத்துவதே நலம்என்று கருதுகிறார்கள். தோழர்கள் கிளிப், ஜோஷி, சமன்லாலும் இருபத்தைந்து தொழிலாளிகளை உபயோகப்படுத்தும் தொழிற்சாலைகளையும் அச்சட்டத்துக்கு உள்படுத்த வேண்டுமென்று அபிப்பிராயப்படுகின்றனர். மேலும் 10வயதுக்கு மேல்பட்ட குழந்தைகள் தான் இத்தொழிற்சாலைகளில் வேலை செய்ய அனுமதிக்க வேண்டும் என்று விட்லி கமிட்டியார் எண்ணுகிறார்கள். 14வயதுக்கு குறைந்த குழந்தைகளை தினத்துக்கு 7மணிநேரத்துக்குமேல் வேலை செய்வதையும் தடுக்க வேண்டுமென்று கருதுகின்றனர். குழந்தைகள் தொழிற்சாலைகளில் வேலை செய்த பின்பு வீட்டிற்கு வேலையை எடுத்துக்கொண்டு போவதையும் தடுக்கவேண்டுமென்று எண்ணுகிறார்கள். குழந்தைகளை வாடகைக்குவிடுவதை தடுக்க விட்லி கமிட்டியார் கவர்ன்மெண்டு உடனே நடவடிக்கைகள் எடுத்துக்கொள்ள வேண்டுமென்று அபிப்பிராயப்படுகின்றனர். குழந்தைகளை வாடகைக்கு வாங்க பணத்தை கொடுப்பதையும் வாங்குவதையும் கிரிமினல் நடவடிக்கை எடுக்கத்தக்க காரியங்களாக செய்ப வேண்டுமென்றும், இதற்காக நோட்பாண்டுகளை சற்றும் உபயோகமில்லாமல் செய்ய வேண்டுமென்றும் விட்லி கமிட்டியார் எழுதியிருக்கிறார்கள்.

வாராவாரம் விடுமுறை நாளையும் தொழிலாளியின் தேக சௌகரியத்துக்கு வேண்டிய அத்யாவசியமான வசதிகளையும் சுகாதாரமானகட்டடங்களையும் கக்கூஸ் வசதிகளையும் இந்த தொழிற்சாலைகளில் இருக்க வேண்டியது அவசியம். மேலும் மிகவும் அசுசியான தோல் பதனிடும் வேலையிலும், ஷெல்லக் வேலையிலும் மாகாணகவர்ன்மெண்டார் இந்த சட்டத்தை எவ்வளவுதொழிலாளிகள் வேலைசெய்த போதிலும் உபயோகிக்க சட்டத்தில் இடமிருக்க வேண்டும். தவிரவும் ஐந்து வருடங்களுக்கு பிறகு இந்த தொழிற்சாலைகளைப் பற்றி மறுபடியும் விசாரித்து சட்டத்தைமாற்றுவோ, இன்னும்கொஞ்சம் தொழிலாளிக்கு நன்மை ஏற்படுத்திக்கொடுக்கவோ அவசியம் என்று விட்லி கமிட்டியாருக்கு தோன்றுகிறது.

இத்தகைய தொழிற்சாலைகளை அடிக்கடிபோய் பார்ப்பதற்கு தொழிற்சாலை இன்ஸ்பெக்டர்கள் முயலவேண்டும். முனிசிபல் ஹெல்த் இன்ஸ்பெக்டர்கள் இந்த வேலையைபட்டினங்களில் செய்யச் சொல்வது சாத்தியமான காரியம். வேலை அதிகமாக விருக்கு மிடங்களில் தொழிற்சாலை உதவி இன்ஸ்பெக்டர்கள் ஏற்படுத்துவது நன்மை பயக்குமென்று விட்லி கமிட்டியார் எண்ணுகிறார்கள்.

## கோவிற்பட்டி தாலுகா முதலாவது சுயமரியாதை மகாநாடு.

ஷை மகாநாடு 27,28-1-34 சனி ஞாயிறன்று சீழுகாலில் நடைபெறவிருப்பதால் நமது தாலுகாவிலுள்ள சுயமரியாதை இயக்க நண்பர்களும் சங்கங்களும் மகாநாட்டுக்குக்கு அனுப்ப வேண்டிய தீர்மானங்களை 25-1-34க்குள்வந்து சேரும்படி காரியதரிசிகள் பேருக்கு அனுப்பக் கேட்டுக் கொள்ளுகிறேன்.

## ராஜிநாமா.

இராமநாதபுரம்ஜில்லாதிருப்பத்தூர்தென்மாப்பட்டு வைக்கம்வீரர் வாசகசாலையின் அங்கத்தினர் பதவியை விட்டு நீங்கிக்கொள்ளுகிறேன் என தோழர் மு. கணபதி எழுதுகிறார்.

## திருச்செங்கோடு தாலுகா ஆதிதிராவிட மகாஜனசபையின் விஷயாலோசனைக் கூட்டம்.

14-1-34ந் தேதி ஞாயிற்றுக்கிழமை இரவு 8 மணிக்கு கே. கந்தசாமி தலைமையின் கீழ் கூட்டப்பட்டது.

தலைவர் முன்னுரையாக ஆதிதிராவிட முன்னேற்ற விஷயமாயும், சேலம் ஜில்லா ஆதிதிராவிட மகாஜன சபையின்விஷயமாயும் பேசிமுடித்தபின் பி. மாரிமுத்து எஸ். ஆர். சிரங்கன், கே. எஸ். கந்தசாமி கே. மாரிமுத்து முதலியவர்கள் தாலூக்கா சபையை எவ்வாறு நடத்த வேண்டுமென்றும் அதில் தாழ்த்தப்பட்ட மக்களுக்கு உண்டாகும் நன்மைகளைப் பற்றி நீண்ட நேரம் பேசிய பின் தலைவருக்கு வந்தனோபசாரம் கூறியபின்டல தீர்மானங்கள் ஏகமனதாய் நிறைவேறிய பிறகுகூட்டம் இனிது கலைந்தது.

## திருச்செங்கோடு தாலுகா ஆதிதிராவிட உபாத்தியாயர்களின் சங்கம்.

14-1-34ந் தேதி ஞாயிற்றுக்கிழமை பகல் 2-மணிக்கு திருச்செங்கோடு ஆதிதிராவிடர் பொது மடத்தில் திருச்செங்கோடு ரேஞ்சு ஸ்கூல்களின்டெப்டிஇன்ஸ்பெக்டர் ஏ.மாரிமுத்து பி. ஏ. எல். டி. அவர்கள் தலைமையின் கீழ் ஷை கூட்டம் ஆரம்பிக்கப்பட்டது. தலைவர் முன்னுரையாக ஆதிதிராவிட உபாத்தியாயர்களின்முன்னேற்ற விஷயமாயும், தாழ்த்தப்பட்ட மக்கள் முன்னேற்ற விஷயமாயும் நீண்டதோர் நேரம் பேசினார்.

பின் முறையே ஆதிதிராவிட நண்பர்களான கே. கந்தசாமி பி. மாரிமுத்து கே. மாரிமுத்து கே. ராமசாமி கே. எஸ். கந்தசாமி எஸ். ஆர். சிரங்கன், டி. பி. விசுவாசம், வி. பொன்னுசாமி, முத்து முதலியவர்கள் சமூக முன்னேற்ற விஷயமாய்ப் பேசிய பின் திருச்செங்கோடு சுயமரியாதை தோழர்கள் எஸ். ஆர். வரதராஜுலு, டி. ஏ. கைவாசம், சங்கரலிங்கம் முதலியவர்கள் தாழ்த்தப்பட்ட மக்கள் முன்னேற்ற விஷயமாய் பேசிய பிறகு மாலை 7-30 மணிக்கு தலைவருக்கு வந்தனோபசாரம் கூறியபின் கூட்டம் இனிது கலைந்தது.

தீர்மானங்கள் பல ஏகமனதாய் நிறைவேறிற்று சங்கத்திற்கு தலைவர் முதலிய உத்தியோகஸ்தர்கள் தேர்ந்தெடுக்கப்பட்டு சபைகலைக்கப்பட்டது.

[4-ம் பக்கத்தொடர்ச்சி]

கள் போன இடத்திற்குச் சென்றன. வடபாஷையிலிருந்து நமது தமிழ் பாஷை, வடமொழி சொற்களை எடுத்திராவிட்டால், நமது நாட்டுக் குறவர், மறவர், வில்லியர் பேசும்பாஷையைப்போல்தான் தமிழ் பாஷையும் இருக்கும். பாஷை உயிருடன் இருக்கவேண்டுமானால் அக்கம் பக்கம் பாஷைகளிலிருந்தே சொற்களைப் பெறவேண்டும். அதனோடு புதிய சொற்களை உண்டாக்கிக்கொள்ளவும் வேண்டும். அபிவிருத்தி அடைந்து வரும் விஷயஞானத்திற் கிணங்க சொற்களும் அவ்விஷயஞானங்களைக்குறிக்க, அதிகரித்தே வரவேண்டும். விருத்தி பெறாத பாஷை எந்த பாஷையாயினும் கால சுடுகாட்டுக்குத்தான் போகவேண்டிவரும். நமது தமிழ் பாஷையும் "சுத்தத் தமிழ்" என்ற மூட பக்தியில் ஆழ்ந்து கிடந்தால், அதற்கும் தனது மூதாதைகளுடன் போய் சேரவேண்டியதுதான்! தமிழ் பாஷை உலகில் வழங்கவேண்டுமானால் அயல்நாடுகளின் பாஷைகள் அபிவிருத்தி அடைந்து வரவேண்டும் இல்லாவிடில், வேத பாஷை செல்லரித்துப்போனதைப் போல்தான் நமது தமிழும் மண்ணில் மறைந்து விடும் என்பதற்குத்தடையில்லை. அம்பு, வில், பல்லக்கு முதலிய "சுத்த" ஆயுதங்களும், சௌகரிய இயந்திரங்களும்,போன இடத்திற்குத்தான் நமது 'சுத்தத்தமிழும்' போய்ச் சேரவேண்டுமென அறிக.

உலக அறிஞர் கோரிக்கை என்னவெனில், வெவ்வேறு தேசியங்களைப் போல் உலக ஒற்றுமைக்கு முட்டுக்கட்டைகளாக இருந்து வருகின்றன. உலக ஒற்றுமைக்கு தற்கால பாஷைகளின் வித்தியாசங்கள் ஒழிய வேண்டும். இந்த ஒற்றுமையைப் பெற்று, உலகம் சுகம்பெறவேண்டுமானால் "எனது பாஷை" "உனது பாஷை" என்ற மூட வைராக்கியம் ஒழியவேண்டும். "சுத்த பாஷை" "சுத்ததமிழ்" 'சுத்த ஆங்கிலம்" என்ற மூடநம்பிக்கைகள் ஒழியவேண்டும். அந்தந்த பாஷைகளிலுள்ள குறைகளை நீக்கி, எல்லா பாஷையும் ஒற்றுமைப்பட உழைத்து வரவேண்டும். இந்த ஒற்றுமையைப்பெற ஒரு பாஷையிலிருந்து மற்றோர் பாஷைக்கு, free borrowing அதாவது, சொற்களை தடைபடாமல் தாராளமாக எடுத்துக்கொள்ளல்வேண்டும்.

சென்ற 50 வருஷங்களாக ஓர் உலகப் பெரு முயற்சி இதன் சம்பந்தமாகச் செய்து வரப்படுகின்றது. அதில் பல்லாயிர மக்கள் உழைத்து வருகின்றனர். எல்லா பாஷைகளிலிருக்கும் மூலப்பதங்களைக்கொண்டு ஒரு எளிதான பாஷை ஒன்றை கற்பிக்கப்பட்டு வருகின்றது. அது தான், Esperanto. எஸ்பிரான்டோ, எனும பாஷை சென்ற வருஷத்தில் கூடிய அதன் மகாநாட்டில் வெவ்வேறு உலக பாஷைகளைப் பேசும் பல்லாயிர மக்கள் இந்த ஓர் பாஷையில் வெகு சுளுவாக, ஒருவருக்கொருவர் சம்பாஷித்தனர்களாம்! இந்தக் கிளர்ச்சி எந்தவித வீண் ஆடம்பரங்களின்றி உலகில் பரவி வருகின்றது. இந்த இயக்கத்தைக் கவனிக்குமாறு நமது தமிழன்பர்களை க்கேட்டுக்கொள்ளுகின்றோம்.

---

## புதுக்கோட்டை முதலாவது செங்குந்தர் பெண்கள் மகாநாடு.

9-11-33 மாலை புதுக்கோட்டை மேலராஜ வீதியில் தோழர் இராஜம் அவர்கள் இல்லத்தில் செங்குந்தர் வகுப்புப் பெண்கள் சங்கத்தின் ஆதரவில் தோழர் இராஜம் தலைமையில் ஒரு கூட்டம் கூடப்பட்டது. அதில் நிறைவேறியதீர்மானங்கள்வருமாறு:-

(1) 1934ம் வருடம் பிப்ரவரி மாதம் கடைசி வாரத்தில் முதலாவது செங்குந்தர் பெண்கள் மகாநாட்டை திருக்கோகர்ணத்தில் கூட்டுவதென்று இக் கூட்டம் தீர்மானிக்கிறது.

(2) அம் மகாநாட்டிற்குத் தலைமை வகிக்க சென்னை டாகடர் முத்துலக்ஷிரெட்டி அம்மாள் அவர்களையும், மகாநாட்டைத் திறந்து வைக்க தோழர்கள் எஸ். குஞ்சிதம் பி. ஏ எல். டி. அவர்களை யாவது, எஸ். நீலாவதி அவர்களையாவது,பண்டிதை எல். ரங்கநாயகி அவர்களையாவது வேண்டிக் கொள்ளுவதென்றும் இக் கூட்டம் தீர்மானிக்கிறது.

(3) செங்குந்தர் வகுப்பிலுள்ள பெண்கள் கல்விக்கென்று தனிமையில் இலவச்சாப்பாட்டு விடுதி ஒன்று ஏற்படுத்த தேவையான பணம் வசூல் செய்ய ஒரு கமிட்டி நியமிப்பதென்றும் இக் கூட்டம் தீர்மானிக்கிறது என காரியதரிசிகள் முத்துமீனா.டி. எம். பிரகதம்பாள் அறிவிக்கிறார்கள்.

---

## திருத்துறைப்பூண்டி "பங்கஜலோஜனு நாவல்சங்கம்"

9-1-34 மாலை 5-மணிக்கு தோழர் என். பீர்முகம்மது அவர்களின் தலைமையில் சங்கத்தின் மூன்றும் ஆண்டு முடிவின். கூட்டமொன்று அங்கத்தினர்களால் நடைபெற்றது. அதில் தோழர்கள். எஸ். என். மாரியப்பா, ஏ. கே. சந்திரசேகரன், டி. சி ராமையா, என். ராமலிங்கம், வி. சாம்பசிவம் முதலியவர்களால் சங்கத்தின் முன்னேற்றம் என்பதுபற்றி விமர்சையாக பேசினார்கள். பிறகு எஸ். என். மாரியப்பா அவர்களை சங்கத்தின் காரியதரிசியாக தேர்ந்தெடுக்கப்பட்டு மாலை 7-மணிக்கு கூட்டம் இனிது முடிவுற்றது.

[காரியதரிசி]

---

## வலங்கைமான் சமதர்ம வாசகசாலை. திறப்புவிழா.

1-1-34 திங்கட்கிழமை மாலை 5.30 மணிக்கு வாலங்கை மான் சுயராஜ்யசபாவில் தோழர் கே. எஸ் சுப்ரமணியம் அவர்கள் தலைமையில் தோழர் எ. இரத்தினசபாபதி அவர்கள் வாசகசாலையைத் திறந்து வைத்துசொற்பொழி வாற்றினார்கள் குடந்தை தோழர் ஆர். எஸ். லிங்கம் அவர்கள் வாலிபர் கடமை என்பது பற்றி பேசினார். இரவு 7-மணிக்கு வாசகசாலை தலைவர் தோழர் எம் எ. சத்தார் உபசாரம் கூறி கூட்டம் இனிது முடிந்தது.

(ஒரு நிருபர்)

---

## இராமநாதபுரம் ஜில்லா தாழ்த்தப்பட்ட மக்களுக்கோர் எச்சரிக்கை

அன்புடைய தோழர்களே

உலகத்தாரால் வலுத்தாரால் வெறுத்துத் தள்ளப்பட்டு இன்று இறக்கும் தருவாயில் இருந்துகொண்டிருக்கும் இந்து மதத்தை புனிதப்படுத்தும் நோக்குடனும். பாருலகமெங்கினும் பாழ்பட்டு வரும் பணக்காரத்வத்தை நிலை நிறுத்தும் மனப்பான்மையுடனும் ஹரிஜன சேவை என்னும் போலிவேடந்தாங்கி வருணச்சிரமப் பிரசாரமும் வைதீகப்பிரசாரமும் செய்துவரும் தோழர் காந்தியவர் இராமநாதபுரம் ஜில்லாவைச் சேர்ந்த காரைக்குடி தேவகோட்டை என்ற கிராமங்களுக்கு சுற்றுப்பிரயாணம் செய்யும்பொழுது ஷை ஜில்லாவைச் சேர்ந்த ஆதிதிராவிட மகாஜன சங்கத்தின் சார்பில் காந்தி அவர்களை வரவேற்று பண முடிச்சும் ஒன்று பரிசளிக்க வேண்டுமென்ற தீர்மானத்தை 5-12-33ல் நடந்த ஷை கூட்டத்தில் எ. எஸ். ஜோன் அவர்களால் கொண்டுவரப்பட்டது. அன்று தினக் கூட்டத்திலும் பல எதிர்ப்புகள் தோன்றி 6-1-34ல் நடந்த ஷை கூட்டத்தில் ஷை தீர்மானத்தை எடுத்து விவாதிக்கும் பொழுது பல தோழர்களால் மறுக்கப்பட்டு தீர்மானத்தை ஓட்டுக்கு விடும்படி கேட்டனர். ஓட்டுக்கு விட்டால் தீர்மானம் தோற்றுப்போகுமென்பதை அறிந்த எ. எஸ். சோன் அவர்கள் மகாஜன சங்கத்தின் மெம்பர்களுக்குத்தான் ஓட்டுக்கொடுக்க உரிமையுண்டென்றும் அங்கத்தவரல்லாதவர்களுக்கு உரிமை இல்லை என்றும் பேசிவிட்டு ஓட்டுக்கு விட்டனர். இதிலிருந்து நாம் அறியக் கிடப்பதென்ன வென்றால் ஷை தீர்மானம் அங்குள்ள ஒரு சிலரால் ஆதரிக்கப்பட்டு நிறைவேறியிருப்பதேயல்லாது ஷை ஜில்லாவைச் சேர்ந்த சகல தாழ்த்தப்பட்ட மக்களின் முழு ஆதரவையும் பெற்றதல்லவென்பது வெள்ளிடைமலை நிற்க தோழர்களே காந்திக்கு மணமுடிச்சு பரிசளிக்கப் போவதாக5 சொல்லிக்கொண்டு உங்களிடத்தில் பண வசூல்செய்ய வருகின்றவர்களின் மாய ஜாலத்திற்குள்ளகப்பட்டு மதி இழந்து தங்களுடையப் பணத்தையும் வீண் விரையம் செல்யாதிருக்கும்படி இத்தால் மிகப் பணிவுளன் எச்சரிக்கை செய்கின்றோம்.

ஆ. அ. பழனிநாதன்
எம். எஸ். காசிவேல்
எ. எம். துரைசாமி
கே, ஆர். பெரியசாமி முதலியவர்கள்.

---

## நாகபட்டணம் காந்தி பகிஷ்காரக்கூட்டம்.

11 1-34 தேதி வியாழக்கிழமை மாலை6 மணிக்கு நாகை டவுன் போலீஸ் ஸ்டேஷன் மைதானத்தில் சங்கத் தலைவர் தோழர் எஸ் பி. கிருஷ்ணன் தலைமையில் பொதுக்கூட்டம் கூடியது.தலைவர் முகவுரைக்குப்பின் தோழர்கள் என். பி. காளியப்பன், டி. பி. அறுமுகம், வி. சாமிநாதன் முதலானோர் காந்தியின் ஹரிஜன பிரசாரமானது. இந்த மதப்பிரச்சாரமென்றும். அதனால் தீண்டாமை ஒழியப்போவதில்லை என்றும் கதர் பேரால் வசூலித்த பணத்தை எப்படி ஒரு கூட்டம் ஏகபோகமாக அனுபவிக்க வசதி ஏற்பட்டதோ அதே நிலைதான் இப்போது வசூலிக்கும் பணத்திற்கும் ஏற்படுமென்றும் மதத்தையும், வர்ணச்சிரமத்தையும் வைத்துக்கொண்டு தீண்டாமை ஒழிப்பு பிரச்சாரம் செய்துகொண்டு வரும் காந்தியாரின் செய்கை ஒரு அரசியல் சூட்சி யாகுமென்றும் பேசினார்கள். பின் கீழ்கண்ட தீர்மானங்கள் ஏகமனதாய் நிறவேறியது.

(1) காந்தியவர்கள் ஹரிஜனம் பேரைச் சொல்லிக்கொண்டு செய்யும் பிரசாரமானது இந்து மதப்பிரசாரமாயிருப்பதாலும், அதனால் தாழ்த்தப்பட்டவர்களுக்கு யாதொரு பயனும் விளையப்போவதில்லை எனவும் இக் கூட்டம் திடமாக நம்புவதால் காந்தியின் வருகையை நாகை வாசிகளடங்கிய இக் கூட்டம் பகிஷ்கரிக்கிறது. டி. பி. ஆறுமுகம் பிரேரேபித்தார். வி. சாமிநாதன் ஆமோதித்தார் ஏகமனதாக நிறைவேறியது.

(2) தாலூக்காபோர்டுகளை எடுத்து விடுவது சம்மந்தமாக சர்க்கார் விடுத்துள்ள அறிக்கையை இக் கூட்டம் முழுமனதுடன் ஆதரிக்கிறது.

தலைவர் பிரேரேபிக்க ஏகமனதாய் நிறைவேறியது,

முடிவுரைகூற இரவு 8-30 மணிக்கு கூட்டம் இனிது முடிவுற்றது.

"நவசக்தி" ஆசிரியர் தோழர் திரு. வி.

## கலியாணசுந்தரமுதலியார் அவர்களால்

—:0:—

தமிழ் மணம், விடுதலை, பெண்ணுரிமை, தீண்டாமை ஒழிதல், சமரசம், சன்மார்க்கம் ஆகியவைகள் ததும்ப எழுதப்பட்ட அறிய அந்நூல்கள்:—

| | ரூ. | அ. |
|---|---|---|
| பெண்ணின் பெருமை அல்லது வாழ்க்கைத்துணை ... | 2 | 0 |
| தமிழ்த் தென்றல் ... ... ... | 2 | 0 |
| முருகன் அல்லது அழகு ... ... ... | 1 | 0 |
| இராமலிங்கசுவாமிகள் திருவுள்ளம் ... ... | 0 | 12 |
| மனித வாழ்க்கையும் காந்தியடிகளும் ... ... | 2 | 8 |
| என்கடன் பணி செய்து கிடப்பதே ... ... | 0 | 8 |
| சைவத்தின் சமரசம் ... ... ... | 0 | 8 |
| சைவத்திறவு ... ... ... | 0 | 8 |
| கடவுள் காட்சியும் தாயுமானாரும் ... ... | 0 | 4 |
| தமிழ் நூல்களில் பௌத்தம் ... ... | 0 | 4 |
| சீர்திருத்தம் அல்லது இளமை விருந்து ... ... | 0 | 8 |
| நாயன்மார் ... ... ... | 0 | 3 |
| சைவ சமய சாரம் ... ... ... | 0 | 1 |
| இமயமலை அல்லது தியானம் ... ... | 0 | 6 |
| தமிழ் நாடும் நம்மாழ்வாரும் ... ... | 0 | 4 |
| உரிமைவேட்கை அல்லது நாட்டுப்பாடல் ... | 0 | 4 |
| முருகன் அருள் வேட்டல் ... ... | 0 | 4 |

இந்நூல்கள் எல்லாவற்றையும் ஒரே காலத்தில் வாங்குவோர்க்குத் தபாற் செலவின்றி மணியார்டர் கமிஷன் கழித்து வி. பி-யில் அனுப்பப்படும்.

முருகவேள் புத்தகசாலை,
12, கணபதி முதலித்தெரு, இராயப்பேட்டை, சென்னை.

## விற்பனைக்காக நம்மிடம் உள்ள இதர பதிப்புப் புஸ்தகங்கள்.

| | | |
|---|---|---|
| 1. | சிதம்பர ரகசியம் ... | 0—8—0 |
| 2. | சுதந்தரப்போர் அல்லது உப்பள முற்றுகை | 0—4—0 |
| 3. | மாதர் சுதந்தரம் or பெண்மக்கள் பெருமை | 0—8—0 |
| 4. | பகுத்தறிவே விடுதலை அல்லது ஜீவாத்மாஇல்லை | 0—6—C |
| 5. | மோட்டார் இயந்திர சாஸ்திரமும் அதன் அனுபோக பயிற்சி முறையும் ... | 2—0—0 |
| 8. | ஆஸ்திக நாஸ்திக சம்வாதம் விலை ... ... | 0—6—0 |
| | சுயராஜ்யம் யாருக்கு ... | 0—1—0 |
| | சாமிகளின் அடிமைகள் ... | 0—12—0 |
| | சென்னை லோக்கல் போர்டு ஆக்ட் ... | 2—0—0 |

குறிப்பு:—புஸ்தகங்களுக்கு ஸ்டாம்பு வைத்து அனுப்புகின்றவர்கள் புஸ்தக கிறயத்துக்கு மேல்ாக புஸ்தகம் ஒன்றுக்கு ஒன்றரை அணா ஸ்டாம்பு அனுப்பவேண்டும். 8 அணாவுக்குக் குறைந்த ஆர்டருக்கு வி. பி. அனுப்பப்படமாட்டாது. ஆர்டர்களுக்கு பாதித்தொகையாவது முன்பணம் அனுப்பவேண்டும்.

### 'குடி அரசு' 'ரிவோல்ட்' மாலைகள்.

குடி அரசு மாலைகள் கோர்வையாக முதல்வருஷத்திலிருந்து சென்ற வருஷம்வரை 7 வருஷகாலம் வெளியான மலர்களைத்தனித் தனி வருஷமாக பைண்ட் செய்து புஸ்தகமாக வைக்கப்பட்டிருக்கிறது.

| | | |
|---|---|---|
| ஒவ்வொரு வருஷமாலை கிரயம் | ரூ. | 4—0—0 |
| ரிவோல்ட்டு ஒருவருஷமாலை செய்தது கிரயம் | ரூ. | 4—0—0 |

விலாசம்:—

மானேஜர், குடி அரசு புத்தகாலயம், ஈரோடு.

## அமுத சுரபி.

### சிறந்த தாதுவிருத்தி இலேகியம்
### உயர்ந்த காயகற்பகம்.

இஃது ஆண் பெண் இருபாலருக்கும் எவ்வகைக்காரணங்களினாலாவது இரத்தம் கெட்டு வலிவு குறைந்து, நரம்புக்கட்டுகள் தளர்ச்சியடைந்து இந்திரியக் கசிவு, வெட்டைச்சூடு, கனவிற் கழிதல், விரைவிற் கழிதல், விருப்பின்மை முதலிய துன்பங்களால் புத்திரப்பேற்றுக்கு வகையின்றி வருந்துவோர்களுக்கு அத்தகைய துன்பங்களை நீக்கி அமுதமயமான உடம்பையும், பலத்தையும், நல்லறிவையும் அழகையும், நீண்ட ஆயுளையும், மக்கட் பேற்றையும், பொன்போன்ற மேனியையும் அமுத சுரபி தருமென்பதில் யாதொரு ஐயமுமில்லை. இது சித்தர்களின் முறை.

40-நாள் மருந்து ரூ. 3— 8—0.
20-நாள் மருந்து ரூ. 1—14—0.

மானேஜர்:—

பண்டிட் ஆனந்தம்வைத்தியசாலை,
221, தங்கசாலை வீதி, சென்னை.

சுகவழ' கேட்டாக் இனும்.

## வியாதியா?

பயப்படவேண்டாம்.

எங்களிடத்தில் சகல வியாதிகளுக்கும் உயர்ந்த டஸ்ப செந்தூர வகைகள் கிடைக்கும். 30 வருஷகாலமாக அனுபோக முள்ளது. உத்திரவாதமுள்ளது. ஆண் பெண், வயது, வியாதி, உற்பத்தி காலம், தெரிந்தவரையில் எழுதி மருந்தை வரவழைத்துச்சாப்பிடுங்கள்; சுகமாகும்.

தாம்பரபஸ்பம் குஷ்ட ரோகங்களுக்குஅனுபானத்துடன் ½ மண்டலம் பாதி விலைப்படி ரூ. 12—8—0.

தாளக பஸ்பம் க்ஷயரோகங்களுக்கு அனுபானத்துடன் மண்டலம் ரூ. 12—8—0.

ஆர். எம். நாராயணசாமி,
தன்மவந்திரிஔஷதசாலை பழனி.S.I

## "குடி அரசு" புதிய வால்யூம்.

—*—

நமது "குடிஅரசு" பத்திரிகையின் 8வது வருஷ மலர்கள் ஒன்றுசேர்க்கப்பட்டு புதிய வால்யூம் மிக்க அழகாக பைண்டு செய்யப்பட்டிருக்கிறது.

உடனே முந்துங்கள்.

விலை ரூபாய் நான்கு

"புரட்சி" சந்தாதாரர்களுக்கு விலை ரூபாய் மூன்று.

தபால் செலவு வேறு.

பணம் முன்னதாக அனுப்பிவிடவேண்டும். இல்லாவிட்டால் கவனிக்கப்படமாட்டாது.

மானேஜர்,
குடி அரசு பதிப்பகம், ஈரோடு.

## தீராத வெட்டை நோய்க்கு உத்திரவாதம்.

11-நாட்களில் குணமாகும். 22 மாத்திரை கொண்ட மருந்து பாட்டில் 1-க்கு ரூ. 5—0—0. (வி. பி. சார்ஜ் பிரத்தியேகம்) எவ்வித பத்தியமும் கிடையாது.

விலாசம்:— நா. நமசிவாயம், (கேட்டிவ்
தெக்ஷிணாமூர்த்தி தமிழ்
திருக்கோஷ்டியூர்,

# குடி அரசு பதிப்பக புஸ்தகங்கள்.

**மதமும், லெனினும்.**
விலை அணு 0—4—0

**கைவல்யம் அல்லது கலைக்கியானம்.**

**பொதுவுடைமைத்தத்துவங்கள்.**
விலை அணு 0—3—0.

**இராமாயண ஆராய்ச்சி.**
முதற்பாகம் பாலகாண்டம் அணு. 0—4—0
இரண்டாம் பாகம் அயோத்தியா காண்டம் அணு. 0—8—0

**ஞானசூரியன்.**
பெரிய புத்தகம் 150 பக்கம். இதன் விலை அணு. 0—4—0

**ஈ. வெ. இராமசாமியின் சீர்திருத்த மகாநாட்டுச் சொற்பொழிவு.**
இதன் விலை அணு. 0—2—0.

**தர்மபரீக்ஷை அல்லது புராண ஆபாசம்.**
இதன் விலை அணு 0—3—0

**பங்கஜம் அல்லது பார்ப்பனக்கொடுமை.**
இதன் விலை அணு 0—4—0

**மேயோகூற்று மெய்யா? பொய்யா?**
இதன் விலை அணு 0—3—0

**அகத்தியர் ஆராய்ச்சி.**
இதன் விலை அணு 0—2—0

**ரஷ்யாவைப் பற்றி பெர்னாட்ஷா.**
விலை அணு 0—1—0.

**கடவுளை நிந்திக்கும் கயவர்கள் யார்?**
இதன் விலை அணு 0 2—0

**கடவுளும், பிரபஞ்சமும்.**
இதன் விலை அணு 0—4—0.

**சத்தியாக்கிரகமா சண்டித்தனமா?**
விலை பை. 0—0—3

**இராமசாமியின் இலங்கை உபன்யாசம்.**
விலை பை. 0—0—6

**இந்தியாவின் குறைபாடுகள்.**
டாக்டர் பராஞ்சிபை எழுதியது விலை அணு. 0—8—0
குடி அரசு சந்தாதாரர்களுக்கு விலை அணு. 0—6—0
**Crux of the Indian Problem** இங்கிலீஷ் விலை ரூ. 1—0—0
குடி அரசு சந்தாதாரர்களுக்கு விலை அணு. 0—8—0

**இராமலிங்க சுவாமிகள் பாடல் திரட்டு.**
விலை அணு. 0—2—0

**சுயமரியாதைப்பாடல்.**
விலை அணு 0—2—0.

**கதர்-...டநம்பிக்கை (இங்கிலீஷ்)**
விலை அணு 0—2—0

**...அரசு புத்தகாலயம், ஈரோடு.**

## பகுத்தறிவு நூற்பதிப்புக்கழக வெளியீடுகள்.

### பெண் ஏன் அடிமையானாள்?

இந்நூல் ஈ. வெ. இராமசாமி அவர்களால் கற்பு, காதல், விபசாரம், கைம்மை, மறுமணம், விவாகரத்து, கர்ப்பத்தடை, சொத்துரிமை ஆகியவைகளை தர்க்கரீதியாய் ஆராய்ந்து எழுதப்பட்ட தொகுப்பாகும்.

விலை அணு 5.

### முன்னேற்றத்திற்கு மதம் முட்டுக்கட்டை.

இந்நூல் சார்லஸ் T. கோர்ஹாம் அவர்களால் ஆங்கிலத்தில் எழுதப்பட்டு K. M. பாலசுப்பிரமணியம் B. A. B. L. அவர்களால் மொழிபெயர்க்கப்பட்டது. இதில் மக்களின் முன்னேற்றத்தையும், விஞ்ஞான வளர்ச்சியையும், மதம் எவ்வாறு தடுத்து வந்தது என்பதைச் சரித்திர பூர்வமாய் எடுத்தககாட்டப்பட்டிருக்கிறது.

விலை அணு 5.

### நான் ஏன் கிறிஸ்தவனல்ல?

இந்நூல் பெர்ட்டிரண்ட் ரசல் அவர்களால் ஆங்கிலத்தில் எழுதப்பட்டு S. குருசாமி B. A. அவர்களால் மொழிபெயர்க்கப்பட்டது. இது கடவுளைப்பற்றியும், கிறிஸ்துவைப்பற்றியும் தெள்ளத்தெளிய ஆராய்ந்து எழுதப்பட்ட ஆராய்சசி நூல்.

விலை அணு 3.

### மதம் என்றால் என்ன?

இந்நூல் ராபர்ட் G. இங்கர்சால் அவர்களால் ஆங்கிலத்தில் இயற்றப்பட்டு தோழர் S. லட்சுமிரதன்பாரதி M. A., B. L., அவர்களால் மொழிபெயர்க்கப்பட்டது. இந்நூலில் மதங்களின் தன்மையையும், கடவுளின் தன்மையையும் நன்கு எடுத்துக்காட்டப்பட்டிருக்கிறது.

விலை அணு 2.

புத்தகங்கள் வேண்டுவோர் புத்தகம் ஒவ்வொன்றிற்கும் ஒரு அணு ஸ்டாம்பு கூடுதலாக அனுப்பவேண்டும்.

விலாசம்:—

**பகுத்தறிவு நூற்பதிப்புக்கழகம் லிமிட்டெட், ஈரோடு.**

## முன்னேற்றம்.

பிரிட்டீஷ் மலேயா நாடுகளில் முதன்மை வாய்ந்த நமது சுயமரியாதை இயக்கப்பத்திரிகை.

மலாய் நாட்டிற்கு வருட சந்தா ஷில்லிங். 5—0—0.

வெளிநாடுகளுக்கு ரூ. 8-0-0

## 'பிரசண்ட மாருதம்'

சுயமரியாதை இயக்கக்கொள்கைகளை அடிப்படையாகக்கொண்ட சிறந்த மாதப்பத்திரிகை
உள்நாடுவருடசந்தா ரூ. 1—0—0
வெளிநாடு ......... ரூ. 1—8—0
தனிப்பிரதி $1\frac{1}{2}$ அணு
விலாசம்:—
மானேஜர்.
பிரசண்டமாருதம் ஈரோடு.

...க்கம் பதிப்பகத்தில் அச்சிடப்பட்டு தோழர் சா. ரா. கண்ணம்மாள் அவர்களால் வெளியிடப்பட்டது.